

கல்கி
காந்தி ஜெயந்தி
மலர்
KALKI
அக்டோபர் 7, 1956
4 அணா



LIFEBUOY SOAP
ஆரோக்கியமான ஜனங்கள் தவறாமல்
லைப்பாய் உபயோகித்துக் குளிக்கின்றனர்
*அன்றாட அழுக்கிலுள்ள
கிருமிகளை அது கழுவிக் களைகிறது!
LIFEBUOY
SOAP

L. 261-50 TM




கல்கி

பொருளடக்கம்

அக்டோபர் 7, 1956

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.







மலர் 16
இதழ் 10

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

துன்முகி௵
புரட்டாசி 22

மனித குலத்துக்கு வழிகாட்டிய மகான்

காந்தி மகானின் ஜெயந்தி வைபவம் பாரத நாட்டில் மாத்திரமல்ல, பாரில் உள்ள பல நாடுகளிலும் பக்தியுடன் கொண்டாடப்படுகிறது.

எனவே, மகாத்மா காந்தி அவதரித்த அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி உலக சரித்திரத்திலேயே புனிதத் திருநாளாக விளங்கும் காலம் வரலாம்.

உலகத்திலே அதர்மம் ஓங்கிய போதெல்லாம் அவதார புருஷர்கள் பிறந்து, அதர்மம் அழியவும் தர்மம் தழைக்கவும் வழிகாட்டி வந்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ராமபிரான், கிருஷ்ண பரமாத்மா முதல் சங்கரர், புத்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர், மகாத்மா காந்தி வரையில், ஒவ்வொரு மகா புருஷரும் ஒவ்வொரு விதத்தில் அதர்ம இருளைப் போக்கும் தர்ம ஜோதியாகக் காட்சியளித்தார்.

புத்தர் பிரானின் உபதேசத்தினால் சித்தம் தெளிந்த அசோக சக்கரவர்த்தி போர் முறையையே கைவிட்டு, ராஜமுனிவராக விளங்கினார்.

முப்பது கோடி மக்களைப் பீடித்திருந்த கொடிய நோய்களுக்கெல்லாம் சிகரமான அடிமைப் பிணியை அகற்றவும், அன்னிய ஆட்சியாகிற அசுரனை அழிக்கவும் காந்தி மகான் வழிகாட்டினார்.

மகத்தான ஆயுதவலிமை பொருந்திய பிரிட்டிஷ் வல்லரசை எவ்வித ஆயுதமுமின்றி எதிர்த்துநின்று இணையிலாப் புகழ்பெற்று, புவிக்குளே முதல்வராகத் திகழ்ந்தார்.

'போர் வழி பெருங் கொலை வழி' என்ற சித்தாந்தத்தை அகில உலகத்துக்கும் உபதேசித்த தனிப்பெருமை பாரதத்தின் தந்தையான காந்தி மகானுக்கே உரியதாகும்.

"காந்தி அடிகள் வைரத்தைக் காட்டிலும் அதிக வலிவும் மலரைக் காட்டிலும் அதிக மென்மையும் வாய்ந்தவர். கபடமின்மை, உறுதி, அஞ்சாநெஞ்சம், ஆண்மை, சத்தியம், சீலம், வசீகரமான தெய்விக சக்தி முதலிய குண விசேஷங்களே மனித உருவாக வந்தவர்" என்று காந்திஜியுடன் நெருங்கிப் பழகிய ஸ்ரீ பிர்லா அந்த மகானின் குண விசேஷங்களை ரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

** ** ** **

1927-ம் ஆண்டில் காந்திஜி தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்தபோது நிகழ்ந்த சம்பவம் ஒன்றை, காந்தி ஜெயந்தி விழா நடைபெறும் இப்புனித வாரத்தில் தமிழ்ப் பெருமக்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

மகாத்மா சிதம்பரத்துக்கு விஜயம் செய்தபோது, தில்லைவெளியில் கலந்து கொண்ட நந்தனாரைப் பற்றி மனம் உருகிக் கூறிய மணிமொழிகளை மக்கள் என்றென்றும் நினைவுகூர வேண்டும்.

"சிதம்பரம் மாபெரும் புண்ணிய ஸ்தலம். சத்தியாக்கிரகத்தை நான்தான் முதன் முதலில் கண்டு பிடித்தேன் என்று நான் கூறியதில்லை. அந்தத் தத்துவத்தைச் செயலில் காட்ட வழி வகுத்ததே நான் செய்த காரியமாகும். எனினும், எனக்கு முன் சத்தியாக்கிரக முறையை அனுஷ்டித்தவர்கள் உண்டு என நினைக்கிறேன். இந்த ஸ்தலத்தில் அமர நிலை அடைந்த நந்தனாரின் சரித்திரத்தையும், அவரது சிறப்பான சத்தியாக்கிரகத்தையும், அதில் அவர் அடைந்த வெற்றியையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரது ஆத்மசக்திக்கு நான் தலை வணங்குகிறேன்."

இவ்வாறு தமிழ்நாட்டின் தனிப்பெரும் பக்தசிகாமணியான நந்தனாரின் பெருமையைக் காந்திஜி நன்கு உணர்ந்து தமிழ் மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தார்.

எந்தக் காரணத்துக்காக நந்தனார் சொல்லொணாத் துயரத்துக்கு உள்ளானாரோ, அந்த அநீதி பாரத நாட்டிலே ஓரிடத்தில்கூடத் தலைகாட்டக் கூடாது என்பதைச் சொல்லாமல் சொல்லி விளக்கினார் நமது அரும் பெரும் தலைவரான காந்தி அடிகள்.

இவ்வாறு இந்திய அரசியலிலும் சமுதாயத்திலும் படர்ந்திருந்த மாசுகளை அகற்றி, பாரத நாட்டு மக்களை மாத்திரமல்ல, மனித குலத்தையே உய்விக்க வந்த புண்ணிய புருஷரான காந்தி மகானை மக்கள் என்றென்றும் இருதய பீடத்தில் வைத்து, போற்றி வணங்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அந்த மகா புருஷரின் அறவழியைப் பின்பற்றி அவரது உபதேசங்களைச் செயலில் நிறைவேற்றி வைப்பதே நாம் காந்தி மகானுக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

காந்திஜி ஏழை மக்களின் வரப்பிரசாதமான ராட்டினத்தில் நூற்கும் காட்சியும், பக்கத்தில் அந்த மகானின் கண்கண்ட தெய்வமாக விளங்கிய ஸ்ரீ ராமபிரான் துஷ்டர்களை அழிக்கும் வில்லுடனும் சிஷ்டர்களைக் காப்பாற்றும் அபய ஹஸ்தத்துடனும் தாமரை மலர்மீது நிற்கும் கோலமும் இவ்வார அட்டையை அலங்கரிக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒத்துழைக்க வேண்டாம்!

காந்தி ஜெயந்திக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ராஜாஜி ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்தார்.

சென்னை ரஸிக ரஞ்சனி சபையில் செப்டம்பர் 30ம் தேதி கூடிய சமாதான மகா நாட்டில் "யுத்தம் வந்தால் வரட்டும்!" என்றார் ராஜாஜி!

"வல்லரசுகள் சண்டை போட்டுக் கொண்டால் போட்டுக் கொள்ளட்டும். நாம் இடையில் புகுந்து தடுக்கும் முயற்சி செய்ய வேண்டியதில்லை" என்றார்.

சாந்த வழியைப் போதித்த காந்தி மகானின் உபதேசத்தை எடுத்துணர்த்தி வந்த ராஜாஜியா இன்று இப்படிப் பேசுகிறார் என்று பலர் வியந்தார்கள்.

ஆனால் உண்மையில் காந்திமகான் காட்டிய புனித வழியையே அன்று ராஜாஜியும் காண்பித்தார் என்பது சிறிது யோசித்தால் புலப்பட்டிருக்கும்.

காந்திமகானின் குரலே ராஜாஜியின் குரலாக வந்தது என்று உணர்ந்திருக்கலாம்.

இதை உணர, காந்திமகான் போதித்த ஒத்துழையாமை இயக்கத்தின் அடிப்படைத் தத்துவமென்ன என்று யோசிக்க வேண்டும்.

"அன்னிய மக்கள் பாரதமக்கள் மீது ஆட்சி செலுத்துகிறார்கள். அது அக்கிரமம். அதோடு நாங்கள் ஒத்துழைக்கமாட்டோம்!" என்று கூறச் சொன்னார் மகாத்மாஜி.

நமக்கு பிரிட்டிஷ் மக்களின் மீது பகைமை கிடையாது. ஆனால் அவர்கள் பெற்றுள்ள ஆட்சி உரிமை அநீதியானது. அந்த அநீதியைத்தான் காந்திஜி எதிர்த்தார்.

இதே அடிச்சுவட்டைப் பின்பற்றிய முறையில் தான் ராஜாஜி அன்று பேசினார். உலக சமாதானம் என்னும் லட்சியத்தை அடைய உலக அரசியலிலே ஒரு ஒத்துழையாமை நாம் செய்ய வேண்டும் என்றார்.

மேற்கத்திய வல்லரசுகளிடம் இன்று அணுகுண்டு பலம் இருக்கிறது. இந்த பலத்தை வைத்துக் கொண்டு அவர்கள் சூயஸ் விஷயத்தில் அக்கிரமமும் அநீதியுமான முறையில் பேசுகின்றனர். எகிப்துத் தலைவர் நாஸரிடம், "எங்கள் கோரிக்கைக்கு உடன்படவில்லை என்றால் யுத்தம் செய்வோம்!" என்று பிரிட்டனும் பிரான்சும் மிரட்டுகின்றன.

சென்ற சில வருஷங்களாக உலகில் வல்லரசுகள் யுத்தத்துக்கு ஆயத்தமாக நின்ற காலங்களில் நமது பாரதப் பிரதமர் நேரு தலையிட்டு உலகில் சமாதானத்தை நிலைநாட்டியிருக்கிறார். நேருஜியின் தலையீட்டினால் ருஷ்யா ஓரளவு மன நிம்மதி அடைந்திருக்கிறது. நேருஜி இருக்கிற வரையில் உலகில் போர் மூளாது என்ற நம்பிக்கையில் குளிர்ந்திருக்கிறது. இதன் விளைவாக மேற்கத்திய வல்லரசுகளின் அணு பீதியும் குறைந்திருக்கிறது. ஆனாலும் அவற்றின் உள்ளுக்குள் இருக்கும் ஆதிக்க வெறியும் காலனி ஆட்சி வெறியும் பரிபூரணமாக ஒடுங்கி விடவில்லை. அது தலைதூக்கும்போது, அணு ஆயுத குண்டுகளைக் காட்டிச் சண்டை போடத் தாங்கள் தயாராக இருப்பதாக மிரட்டுகிறார்கள். அம்முறையில்தான் இப்போது எகிப்துத் தலைவர் நாஸரை மிரட்டுகிறார்கள். ஆனால் இந்த மிரட்டல் உண்மையாக உலகில் சமாதானம் நிலவவேண்டும் என்று பெரு முயற்சி செய்யும் நமது தலைவர் நேருஜியையுமே மிரட்டுவதாகும். இதற்கு நாம் இடம் தரலாகாது என்பதுதான் ராஜாஜி அன்று பேசிய பேச்சின் உட்கருத்து.

நாஸர், நேருஜியின் நட்புக்கு உட்பட்டவர். ஆகவே நேருஜியைக் கொண்டு, வல்லரசுகள் தங்கள் அநீதமான கோரிக்கைகளுக்கு நாஸரை உடன்படச் செய்யலாம் என்று எண்ணி அதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

நேருஜியும் உலகில் சமாதானம் எப்படியாகிலும் நிலவினால் போதும் என்ற ஆதுரத்தில் நாஸரைச் சில அநியாயக் கோரிக்கைகளுக்கு இணங்கும்படி செய்து விடலாம்.


இந்தக் காரியம் தவறு என்றுதான் ராஜாஜி எச்சரிக்கை செய்கிறார். சமாதானம் என்னும் லட்சியத்தை அடைய அநீதிக்கு உடந்தையாக இருக்கக் கூடாது என்கிறார்.

அநீதியோடு ஒத்துழையாமை செய்ய வேண்டும் என்கிறார்.

* * *

ருஷ்யாவும் அமெரிக்காவும்தான் அணுகுண்டுகளை வைத்திருக்கின்றன. இரண்டு தேசங்களுக்கும் இவற்றினால் ஏற்படக்கூடிய

பிசாசு தோற்றது!



சூயஸ் பிரச்னை பெரிய யுத்தமாக மூளாமல் தவிர்க்கப்பட்டுள்ளது. —நேருஜி

உற்பாதங்கள் நன்கு தெரியும். அதனால் அவர்கள் தற்சமயம் பாரதம் போன்ற நடு நிலைமை நாடுகளை வைத்துத் தங்கள் சுயநலக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். ஏனெனில் நேரிடையாகச் சண்டை போட்டு வெற்றி கொண்டு காரியம் சாதித்துக் கொள்ளும் காலம் மலையேறிவிட்டது. அமெரிக்காவும் ருஷ்யாவும் அணு ஆயுதத்துக்கு உடன்பட முடியாது. இந் நிலையில் நம்மை உபயோகித்துத் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். இதற்கு நாம் இடம் தரலாகாது. இரண்டு நாடுகளும் நேரிடையாகப் பேசி, "அணு ஆயுத யுத்தமா? அல்லது நியாயமான சமாதானமா?" என்ற முடிவுக்கு அவர்களே வரட்டும் என்கிறார் ராஜாஜி. பல சந்தர்ப்பங்களில் ராஜாஜி பாரதத்துக்கு வழி காட்டியிருக்கிறார். அதே முறையில் இப்போது ராஜதந்திர நெறியைக் காண்பித்திருக்கிறார்.

பாரதம் இந்த வழியைப் பின்பற்றினால் விரைவில் உலகம் அணுப் பிசாசின் பிடியிலிருந்து விடுபடும் என்பது நிச்சயம்.

பேச்சு உரிமை இல்லையா?

பீ. வி. ஜியைப் பற்றிச் சென்னை சட்டசபையில் கேள்வி எழுந்தபோது, சுகாதார மந்திரி அளித்த பதில் மிகவும் மரியாதைக் குறைவாக இருந்தது. 'ராஜாஜி மதிப்புக்குரிய பெரிய மனிதர்தான் என்றாலும் இந்தமாதிரி விஷயங்களில் தலையிட அவருக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்று மந்திரி கேட்டிருக்கிறார்.

இப்படிக் கேட்கத் தொடங்கினால், 'இவர் சுகாதார மந்திரியாக இருப்பதற்கு என்ன உரிமையிருக்கிறது? இவர் என்ன வைத்தியப் பட்டதாரியா?' என்று கேட்கலாம் அல்லவா?

ராஜாஜியை விட இந்த மாதிரி விஷயங்களில் பேச யாருக்குத் தகுதியிருக்கிறது என்பது புரியவில்லை. பீ. வி. ஜியை ஆதரித்து வந்த பெரிய வைத்திய நிபுணர் டாக்டர் கரோல் பாமர் பீ. வி. ஜியினால் பயனில்லை என்று சொல்லி விட்டார். இதை எடுத்துக் காட்டியதற்கு நம்முடைய சுகாதார மந்திரி, "கரோல் பாமரின் முழு அறிக்கையைப் படித்தால் பீ. வி. ஜிக்கு ஆதரவு காணலாம்" என்றார். முழு அறிக்கையை அவரே பிரசுரிக்கலாமே. ஆனால் உண்மை என்ன? ராஜாஜி அந்த

அறிக்கையை முழுதும் கவனித்துப் படித்து விட்டுத்தான் பேசியிருக்கிறார். பி. ஸி. ஜிக்கு டாக்டர் கரோல் பாமர் தந்த ஆதரவை முற்றிலும் வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார் என்ற உண்மையை எடுத்துக் கூறியிருக்கிறார்.

பி. ஸி. ஜி விஷயத்தில் ராஜாஜி இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்வானேன் என்று மீண்டும் மீண்டும் கேட்கப்படுகிறது. வட நாட்டில் ராஜஸ்தானிலிருந்து ஒரு தந்தை ராஜாஜிக்கு எழுதியுள்ள கீழ்க்கண்ட கடிதத்தைப் பாருங்கள் :—

அன்புமிக்க ராஜாஜி அவர்களுக்கு,

பி. ஸி. ஜிக்கு ஒரு மாற்று மருந்து இருக்கிறதா?

நான் ரொம்பவும் புத்திசாலித்தனமான காரியம் செய்வதாக நினைத்துக் கொண்டு, என் பையனுக்கும் பெண்ணுக்கும் பி. ஸி. ஜி போடுவதற்காக என் ஊரிலிருந்து வெகு தூரத்திலுள்ள டில்லிக்கு அழைத்துச் சென்றேன். அதைப் போன்ற மடமை வேறு கிடையாது என்று தெளிவாகி விட்டது. என் இரண்டு குழந்தைகளும் கொஞ்சம் கொஞ்சமாக நலிந்து வருவதைப் பார்த்துச் சொல்ல முடியாத கவலையோடும் அவமானத்தோடும் இதை எழுதுகிறேன். அவர்கள் நல்ல தேக ஆரோக்கியத்தோடு சுறுசுறுப்பாகவும் சூட்டிகையாகவும் சந்தோஷமாகவும் இருந்தார்கள். இப்போது என் மகன் இளைத்து ஒல்லியாகி விட்டான். அவன் மார்புக் கூட்டிலுள்ள எலும்புகள் எல்லாம் தெரிகின்றன. அவன் சதா சர்வ காலமும் படுக்கையில் படுத்த வண்ணமாகவே இருக்கிறான். என் காலடிச் சத்தம் கேட்டால் ரொம்பவும் கஷ்டப்பட்டு எழுந்திருக்கப் பார்க்கிறான்; சந்தோஷமாக இருப்பதுபோல் பாசாங்கு செய்கிறான். இது ஏனென்றால், நான் சில சமயம் அவன் சோர்ந்து கிடப்பதைக் கண்டிப்பதனால்தான்! அவனைக் கடிந்து கொள்ளும் போது என் உள்ளம் உடைகிறது. அவமானமாக இருக்கிறது.

முன்பெல்லாம் அவன் அற்புதமாகப் பாடுவான். பள்ளிக்கூடத்தில் நிறையப் பரிசுகள் பெற்றிருக்கிறான். ஆனால் இப்பொழுது அவன் பாடுவதில்லை. பாடினால் அவனுக்கு மூச்சு இளைக்கிறது. பலஹீனமாக இருக்கிறான்.

ஒவ்வொரு சமயம் அவனே "எனக்கு என்ன நேர்ந்து விட்டது என்று தெரியவில்லையே!" என்று மிகவும் பரிதாபமாகக் கூறுகிறான். இவை என் இதயத்தில் அம்பைப்போல் தைக்கின்றன. "சலோ சலோ" என்ற ஹிந்திப் பாட்டை நெஞ்சுருகும் வகையில் பாடுவான். இப்போது அவன் பாடவே மறுக்கிறான். அவன் தாயற்றவன். உங்கள் அனுதாபம் பெறவேண்டும் என்பதற்காக எழுதவில்லை. "அவனைக் கொன்ற மகாபாவி நான்!" என்று துயரம் தாங்க மாட்டாது எழுதுகிறேன். ஆனால் நான் உங்களைக் கேட்பதெல்லாம், பி. ஸி. ஜி யினால் உண்டாகும் கெடுதல்களைப் போக்குவதற்கு ஏதாகிலும் மருந்தைக் கண்டு பிடிக்கச் சர்க்கார் யோசித்து வருகிறார்களா என்பதுதான்! சர்க்கார் தவறான சோதனைகளைப் பிடிவாதமாகச் செய்து கொண்டு போகிறார்கள். அதில் பயனில்லை.


ஒவ்வொரு சமயம் இந்தக் குழந்தைகளுக்கு டி. பி. சிகிச்சை செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் என் உள்ளுக்குள்ளிருந்து ஒரு குரல் பலமாகக் கேட்கிறது: "இனி அவர்கள் அமைதியாகச் சாகட்டும்!"

நான் இப்பொழுதெல்லாம் என் மகனைப் பார்ப்பதை அறவே நிறுத்தி விட்டேன்.

ஸ்ரீ கங்காநகர்
ராஜஸ்தான்
20—8—56

தங்கள்
சமன்லால்

இத்தகைய கடிதங்களைப் பெறும் ராஜாஜியை, "சும்மா இருங்கள்" என்று சொல்வது எப்படி நியாயமாகும்?



ராஜாஜியின் பாராட்டு

ஏட்டுக் கல்வி பெறும் மாணவர்கள் நாட்டுக்கு வேண்டிய நல்ல பணிகளிலும் அவ்வப்போது ஈடுபட்டு வருவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். சமீப காலத்தில் மாணவர்கள் ஆங்காங்கே ஒன்று சேர்ந்து சாலைகள் போடுவது, தெருவைக் கூட்டுவது போன்ற உத்தமப் பணிகளில் சேவை செய்து வருகிறார்கள் அல்லவா? அத்தகைய அரும் பெரும் திருப்பணியில் செங்கோட்டை மாணவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அங்குள்ள ஹைஸ்கூல் மாணவர்கள் வீதிகளைக் கூட்டிச் சுத்தமாகவைத்துக் கொள்கின்றனர். வீதி கூட்டும் சுகாதார சேவையில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவனுக்கு ராஜாஜி அவர்கள் தம்முடைய பாராட்டுப் பத்திரத்துடன் பத்து ரூபாய்ப் பரிசும் அனுப்பியிருக்கிறார். தெருக் கூட்டும் திருப்பணியில் ராஜாஜி பரிசு பெற்ற சங்கர குற்றாலம் (எஸ். எம். எஸ்.எஸ். இங்கிலீஷ் உயர்தரப் பள்ளியில் பத்தாவது வகுப்பு மாணவன்) படத்தை வெளியிட்டிருக்கிறோம்.

சைபால்

CIBOL

வெட்டுக்காயம், சொறி
சிரங்கு, வேனல் கட்டி
தீப்பட்ட புண், முகப்பரு
கரப்பான், சேத்துப் புண்
முதலிய வியாதிகளைப்
போக்குவதில் கைகண்ட களிம்பு

★

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன்
மான்யுபாக்சரிங் கம்பெனி
ம து ரை

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1943)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

கிளைகள் :
புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர்

நீங்கள் எங்கள் பாங்கில் "சேவிங்ஸ் கணக்கு" திறப்பதினால் உண்டாகும் நான்கு பெரும் நன்மைகள்.

1. ரூ. 5/- முதல் மேற்படி கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
2. தினசரி இருப்புக்கு 3% வட்டி கிடைக்கிறது.
3. பாங்க் வழங்கும் "செக்குகள்" மூலம் பணம் திரும்பப் பெறலாம்.
4. முன் அறிவிப்பு எதுவுமின்றி வாரம் ஒன்றுக்கு அதிகபக்ஷம் ரூ.1000/- கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

சுறுசுறுப்பும் மரியாதையும் நிறைந்த சேவை

பி. எஸ். விஸ்வநாதன்
காரியதரிசி



கூந்தல் மற்றும் மூளை அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபகசக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில் ரூ. 3-8-0
சிறிய பாட்டில் ரூ. 2-0-0


எங்கும் கிடைக்கும்

ஆயுர்வேத மருந்து
ராமதீர்த்
பிரம்மி எண்ணெ

ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய்-14. (C. Rly)

ஆரோக்கியமாகவும் திடமாகவும் இருக்க யோகாசனங்களை விளக்கும் படங்கள் அழகாக [illegible] தபால் செலவு உள்பட ரூ. 1-14-0. மணியார்டரில் தொகை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களைச் சுலபமாகப் [illegible].

சென்னை டெப்போ :
4/441. தங்கசாலைத் தெரு. சென்னை




முடிவிலாக் கீர்த்தி பெற்ருய்!
புவிக்குளே முதன்மையுற்ருய்!





காந்தி மகான் தம் வாழ்நாளில் எத்தனையோ அற்புதங்களைச் சாதித்திருக்கிறார். எத்தனையோ மகாநாடுகளைக் கூட்டியிருக்கிறார். எத்தனையோ தலைவர்கள் அவருடன் இருப்பதைப் பெரும் பாக்கியமாகக் கருதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் சிலவற்றை இந்தப் பக்கங்களில் காணலாம்.

○ ஆசிய மகாநாட்டில் காந்தி மகான் பேசுகிறார். இருபுறமும் நேருஜியும் கபார்கானும் அமர்ந்திருக்கிறார்கள். ○ அன்னை கஸ்தூரிபா நூல் நூற்கிறார். ○ ராஜாஜியுடன் தீவிர ஆலோசனை. ○ இங்கிலாந்தில் காந்திஜி. ○ கவியரசர் தாகூரின் சாந்தி நிகேதனத்தில். ○ பிரெஞ்சு அறிஞர் ரோமன் ரோலந்தின் இல்லத்தில்.









காமதேனு

மாம்பழத்தில் நல்ல ருசியும் மணமும் இருக்கிறது. ஆனால் அது மட்டுமல்ல. அதில் வேறொரு ரகசியமும் உண்டு. நாம் பெற்ற ஒரு நல்ல பொருளை, அதை மிகவும் விரும்பும் மற்றொருவருக்குக் கொடுத்துத் ''திரவ்ய யக்ஞம்'' செய்தோமானால் நாம் ஒரு தனி சந்தோஷம் அடைகிறோம். அதுவே மாம்பழத்திலுள்ள அதன் ரசத்துக்கும் மேலான அமிழ்தம்.

ஏழை ஒருவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்து அவனுடைய பசியை ஆற்றினோமானால், அந்த ரூபாயை நாம் நம்முடைய சுயநலத்துக்காகச் செலவிடுவதில் உண்டாகும் திருப்தியை விட அதிக மகிழ்ச்சி அடைகிறோம். ரூபாயின் குண விசேஷங்களோடு மறைந்து நிற்கும் ஒரு சிறந்த குணம் இது.



கீதையில் ஒரு வாக்கியமுண்டு. ''உலகத்தைச் சிருஷ்டித்த ஈசன் மனித ஜன்மத்திற்கென்று ஒரு காமதேனுவையும் கூடவே சிருஷ்டித்தான். அந்தக் காமதேனுதான் யக்ஞம் அல்லது தியாகம்.''

ஸஹயக்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா
புரோ வாச ப்ராஜாபதி:

மனிதனைச் சிருஷ்டித்தபோது கூடவே யக்ஞத்தையும் சிருஷ்டித்துப் பிரஜாபதி சொன்னதாவது:

'' அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ
வோ அஸ்து இஷ்ட காமதுக் ''

''இதோ, காமதேனு! இதை வைத்துக் கொண்டு பிழை. இது உனக்கு எல்லாவற்றையும் தரும். உனக்கு வேண்டியவை எல்லாம் தரும்'' என்று சொன்னான் ஆதிகர்த்தா.

மனிதனுக்கு அவன் பிறவியுடன் வந்த பெருஞ் செல்வம் யக்ஞம். தான் விரும்பத்தக்க பொருளானாலும், அதை விரும்பும் பிறருக்குத் தந்து அதனால் ஒருவன் அடையும் மகிழ்ச்சியே பெருமகிழ்ச்சி.

''பொருள்கள் யாவும் ஈசனுடையது. அவற்றைக் கொடுத்து அனுபவிப்பாயாக'' என்றார் ஈசோ வாஸ்யோபநிஷத்து ரிஷி.

''தேன த்யக்தேன புஞ்ஜீதா''

மனிதனுக்கு இந்தச் சிறந்த சக்தியை ஈசன் தந்திருக்கிறான். பொருளில் புதைந்து கிடக்கும் இந்த மகிழ்ச்சியை அறிந்து, பொருளைச் சரியாகவும் பூரணமாகவும் அனுபவிப்போமாக.

பொருளில் பாத்தியம் கொண்டாடுகிறோம். அதை வைத்துக் கொள்ளவும், செலவு செய்யவும் பிறருக்குக் கொடுத்து அதனால் மகிழ்ச்சி அடையவும் நமக்கு உரிமையுண்டு. கடைசியில் சொல்லப்பட்ட உரிமையை மறந்து விட்டுப் பொருளிலுள்ள மிகச் சிறந்த மகிழ்ச்சியை இழந்து விடலாகாது.

''யக்ஞம் என்றால் தீயை வளர்த்து அதில் நெய்யை விடுவது அல்லவா? நீங்கள் என்ன, யக்ஞத்தையும் தியாகத்தையும் குழப்புகிறீர்களே!'' என்று கேட்பார்கள் சில பண்டிதர்கள்.

நெய்யையோ அல்லது நமக்கு வேண்டிய பொருளையோ தீயில் போட்டு விடுவது எளிதல்ல. பிறர் சம்பாதித்த பொருளையல்ல—பிறரிடமிருந்து பிச்சையாகப் பெற்ற பொருளையல்ல—நாமே கஷ்டப்பட்டு நமக்கென்று சம்பாதித்துக் கொண்டதைத் தீயில் போட்டு எரிப்பது எளிதல்ல.

தேவதைகளுக்குத் தியாகம் செய்வதாக மனத்தில் கொண்டு, பயிற்சி பெற்றுப் பிறருக்குக் கொடுப்பதுதான் வேள்வி. அந்த வேள்வியில் பொருளைச் செலவழிக்கப் பயின்று தியாகம் செய்வதே 'திரவ்யயக்ஞம்.' [கீதை 28]

மகாத்மா காந்தியின் ஆணையை மேற்கொண்டு வினோபாஜி இந்த யக்ஞத்தைச் செய்யச் சொல்லுகிறார். தானமே யக்ஞம். அது தரும் சிறந்த மகிழ்ச்சியை வேறு விதமான பொருள் விரயத்தில் அடைய முடியாது.

ராஜாஜி

இலக்கியச் செல்வம்

பேராசிரியர் அ. சீநிவாசராகவன்

1. பொலிக! பொலிக!

பல நூறு ஆண்டுகளுக்கு முன், என்றோ ஒரு நாள் நடந்தது.

திருநெல்வேலிச் சீமையில், ஆழ்வார் திருநகரி என்று இப்போது நாம் அழைக்கின்ற குருகூர் என்ற ஊரில், புளியமரம் ஒன்றின் அடியில், தியானத்தில் அழுந்தி இருந்த நம்மாழ்வார் கண் விழித்தார்.

எதிரே, வெய்யிலில், இருண்ட பனியைப் போல் புளிய மர நிழல் ஆடியது. நிழலின் விளிம்பில், காயாம் பூச்செடி ஒன்று நீல மலர் பூத்துக் குலுங்கியது. அப்பால், கழனி வெளியின் பசுமை, வான வளைவு வரை நீண்டு, அங்கே மின்னிய பிற்பகல் பூங்காரத்தில் கலந்தது. அதற்கப்பால் நீல மலைகள். அவற்றின் மேல் நாலைந்து மழை மேகங்கள்.

இளங்கருமை, பசுமை, நீலம், மேலே வானத்தின் நீல விதானம். அங்கே, இறைவனுடைய சக்கராயுதம் போலச் சுழன்ற அஸ்தமன சூரியனது தழல் வட்டம்.

ஆழ்வாருடைய உள்ள வெளியில் உணர்வொன்று கண் விழித்தது.

புளிய இலைகளை அசைத்து, வெய்யிலின் ஒளியைச் சிறைப்பிடிக்கும் தந்திரத்தை அவற்றிற்கு உபதேசம் செய்து விட்டு, 'என்ன செய்தி?' என்று கேட்டுக் கொண்டு, நம்மாழ்வாரிடம் வந்தது காற்று.

என்ன செய்தி, என்ன செய்தி, இந்த உலகம் முழுவதிலும் உள்ளே உறைகின்ற செய்தி என்ன?

நம்மாழ்வார் வடக்கு நோக்கித் திரும்பினார்.

நீலப் பாம்பொன்றைப் போல—இறைவனுடைய அரவணையைப் போல, வெய்யிலில் மின்னிப் புரண்டது தாமிரவருணி வெள்ளம். நம்மாழ்வார் காதருகே சென்று ஏதோ பேசியது காற்று.

காற்று, தாமிரவருணி நதி, செந்தழல் பிழம்பாய்ச் சாயும் சூரியன், பச்சை வயற் பரப்பு, மேலே கவிந்து நிற்கும் வானம்—ஐம் பூதங்களும் நடனமாடும் அரங்கான இந்த மண்ணுலகம்.

அவர் கண்களில் புதிய ஒளி பிறந்தது.

'வயலும், மலையும், நதியும், காற்றும், கதிரும், வானமும் கடல் வண்ணன் பூதங்கள். அவை என்னைச் சுற்றி, இந்த உலகாய் நின்று இசை பாடுகின்றன; இந்த மண்ணின் மேல் ஆடிக் களிநடம் புரிகின்றன. இதைக் கண்டு விட்டேன்.

கண்டோம், கண்டோம்,
கண்டோம்,
கண்ணுக்கினியன
கண்டோம்

கண்ணுக்கு மட்டுமா, கருத்துக்கும் இனியது.



உணவுக்கும் உயிருக்கும் இனிய ஒன்றைக் கண்டுவிட்டோம்.

உயிரின் சாபம்—அதை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு, கொடுமைப் படுத்தும் பாபம்—அது ஒழிந்தது. அழிவு என்பது அழிந்தது. பாபம் அகன்றதால் நரகமும் தொலைந்தது. சாவுக்கும், நரகத்துக்கும் அதிபதியான யமன் இருக்கிறானே, அவனுக்கு இனி இந்த உலகில் வேலை இல்லை. கொடுமையும், அறியாமையும் சூழ்ந்த இருட்காலமாகிய கலிகாலமும் மறைந்து விடும்.

இனி என்ன குறை? மண்ணுலகத்து உயிர்கள் வாழ்ந்தன, அழியாத பெருவாழ்வு பெற்றன. வாழ்க, வாழ்க, அவை என்றும் வாழ்க என்று பாடினார் நம்மாழ்வார்:

பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டு கொண்மின்
கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப்புகுந்து இசைபாடி ஆடி
உழிதரக் கண்டோமே.

இந்த உலகத்திலே எங்கும் உள்ள இயற்கைச் சக்திகள், அந்த சக்திகளின் பிணைப்பால் அமைந்த ஆயிரம் ஆயிரம் பொருள்கள், இவையெல்லாம் ஆழ்வாருக்குக் கடல் வண்ணன் பூதங்களாகக் காட்சி அளித்தன; இங்கேயே நம்மைச் சுற்றி ஒவ்வொரு பொருளிலும் கடவுள் தத்துவம் இருக்கிறது என்ற உணர்வைத் தந்தன. உலகம் உய்ந்தது. 'பொலிக, பொலிக' என்று பாடினார் அவர்.

இந்தப் பாடல், நம்மாழ்வார் பாடிய 'திருவாய் மொழி' என்ற பாடல் வரிசையில் உள்ள ஒரு பாட்டு. 'திருவாய் மொழி'க்குப் பழைய உரைகள் - பாட்டிலிருந்து தொடங்கி ஆழ்வாரின் இதயத்திற்கு நம்மை அழைத்துச் செல்கின்ற அற்புதமான விளக்கங்கள்—பல இருக்கின்றன. 'கடல் வண்ணன் பூதங்கள்' என்றால் பழைய



உரையாசிரியர்கள் என்ன சொல்லு கிறார்கள், தெரியுமா? பகவானுடைய பக்த கோடிகள் என்று சொல்லு கிறார்கள். இருக்கட்டுமே! ஆண்டவ னுடைய திருவுள்ளத்தைத் தவிர, வேறு தனி வாழ்வு பக்தர்களுக்கு உண்டா? இல்லையே? அவர்களைப் போலவே, இறைவன் விதித்த வழியில், அவன் சிறிய கோட்டிலிருந்து அணுவளவும் விலகாமல், இயற்கைச்சக்திகள் நிற்கின் றன. இதைப் பார்க்கும்போது, சக்திகள் இவற்றையும் அடியவர்கள் என்று நினைப்பதில் என்ன தவறு? பக்தர்கள் இதயத்தில் ஆண்டவன் இருக்கிறான் என்றால், உலகப் பொருள்களின் உள்ளே யும் அவன் கொலு வீற்றிருக்கிறான். 'பரந்த கடலின் ஒவ்வொரு துளியிலும், அண்டம் என விரிந்த நிலத்திலும், விசும்பிலும், இடம் முழுவதும், இடத் திலே திகழும் ஒவ்வொரு பொருளி லும், கரந்து - நமக்குப் புலப்படாமல் மறைந்து - அவன் இருக்கிறான்' என்று நம்மாழ்வாரே பாடினார்:

பரந்த தண் பரவையுள்
நீர்தோறும் பரந்துளன்
பரந்த அண்டம் இது என
நிலம் விசும்பு ஒழிவற
கரந்த சில் இடந்தோறும்,
இடம் திகழ் பொருள் தோறும்
கரந்து எங்கும் பரந்துளன்.

[பரவையுள்-கடலுக்குள்ளே; தண்-குளிர்ந்த; விசும்பு-ஆகாயவெளி; ஒழிவற-முழுவதும்; கரந்த-மறைந்த; சில்-நுண்மையான.]

இப்படிக் கரந்து எங்கும் பரந்துள்ள சத்தியத்தைத் தொடுகின்ற உணர்வு, ஞானியாகிய நம்மாழ்வாருக்கு இருந்தது. அவருக்கு இந்த உலகத்தில் உள்ள அனைத்தும் 'கடல்வண்ணன் பூதங்களா'கவே காட்சி அளித்தன. ஏனென்றால், அவர் பார்வையில் மெய் ஞானம் தோய்ந்திருந்தது.

கவிஞன் என்ற நிலையில் இருந்தே இந்த ஞானத்தை எட்டுவதும் உண்டு. பாரதியார் பாடுகிறார், நமக்கு நன்றாகத் தெரிந்த பாடல்:

காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்கள் எல்லாம் நந்தலாலா-நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா
கேட்கும் ஒலியில் எல்லாம் நந்தலாலா-நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா

இவ்வளவு பரவசத்தோடு பாடா விட்டாலும், மேல் நாட்டுக் கவிஞன் ஒருவன் இந்த அனுபவத்தை நெருங்கு கிறான். வசந்த காலம், காலைப் பொழுது.

வசந்த ருதுவில் தோய்ந்தது வருடம்:
வைகறை தோய்ந்தது பகலும்:

சூரிய உதயமாகி மூன்றே நாழிகை தான் ஆகி இருக்கிறது. ஆகவே இன்னும் மலையின் மார்பிலே பனித்துளி கள் முத்துப் போல் மின்னுகின்றன:

இசைந்த நாழிகை மூன்றிலே காலை:
இளம்பனி முத்து அகன் மலைமேல்;

வானம்பாடி ஒன்று சிறகடித்துச் செல்கிறது, வானிலே நீந்துகிறது. கீழே, முட்செடியின் மேலே நத்தை ஊர்ந்து செல்கிறது:

விசைத்தது சிறையினை வானம்பாடி:
விரிந்த முட்புதரிலே நத்தை.

வசந்த காலம், காலைப் பொழுது, மலைச்சரிவிலே பனித்துளி, வானம்பாடி, முட்புதர், நத்தை — இவற்றிலிருந்து புறப்பட்டுச் செல்கிறது கவிஞன் சிந்தை. எங்கே போய்ச் சேருகிறது? **இசைந்தனன் தனது வானிலே இறைவன்.** இறைவன் இருக்கின்றான், அவன் பீடத் திலே வீற்றிருக்கின்றான். என்ன குறை இங்கே? அவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து விட்டால்—இந்த இளவேனிற் காலைப் பொழுது அதை உணர்த்த வில்லையா?—அவன் இருக்கிறான் என்பதை மாத்திரம் அழுத்தமாக உணர்ந்து விட் டால், இந்த உலகத்திலே குறை ஏது?

யாவையும் நல்ல இவ்வுலகில்.

பாட்டை முழுவதும் பார்ப்போம், தமிழ் மொழிபெயர்ப்பில் தான்:

வசந்த ருதுவில் தோய்ந்தது வருடம்;
வைகறை தோய்ந்தது பகலும்:
இசைந்த நாழிகை மூன்றிலே காலை;
இளம்பனி முத்தகன் மலை மேல்:
விசைத்தது சிறையினை வானம் பாடி;
விரிந்த முட்புதரிலே நத்தை:
இசைந்தனன் தனது வானிலே இறைவன்:
யாவையும் நல்ல இவ்வுலகில்.

இந்தப் பாடலைப் பாடியவன் பிரௌனிங் என்ற ஆங்கிலக் கவிஞன். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந் தவன். மனித உள்ளத்தின் நுட்பமான, விசித்திரமான கதிகளைச் சித்திரிப்பதில் வல்லவன். ஆழ்ந்த சிந்தனை சக்தி அவனுடைய பாடல்களின் தனிப் பண்பு.

'பிப்பா செல்கின்றாள்' என்ற கவிதை நாடகத்தில் பிப்பா என்ற ஏழைச் சிறுமி ஒருத்தி, போகும்போதே பாடிச் செல் கின்ற பல பாடல்களில் ஒன்றாக, மேலே குறித்த பாடல் வருகிறது.

அந்தச் சிறுமி யார்? எங்கே செல் கின்றாள்? ஏன் பாடுகிறாள்? அவள் பாடல்கள் என்ன செய்கின்றன?

இக் கேள்விகளுக்கெல்லாம் விடை காண வேண்டும் என்றால் 'பிப்பா செல் கின்றாள்' என்ற தலைப்பில் பிரௌனிங் அமைத்த நாடக உலகத்துக்கு நாம் போக வேண்டி இருக்கிறது. வருகிறீர் கள் அல்லவா? (தொடரும்)



மனம்கவர் மணம்..
டிராலி
டால்க் பவுடர்
மஸ்க் சோப்
Dralle
TALC Powder
Finest Musk Soap
MADE IN INDIA BY
Dralle
E.V. சரோஜா.

வாழ்விக்க வந்த காந்தி

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்
குடிமையில் உயர்வு கல்வி
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை எய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

— மகாகவி பாரதி

சத்தியத்தால் மன் அரிச்
சந்திரனைத் தண்ணருளால்
புத்தபெரு மானையொத்த
புண்ணியனை — உத்தமனாம்
அந்தணனைக் காந்தி
அடிகளை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே
தினம்

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

தூக்கமும் கலைந்தது ஏக்கமும் குலைந்தது
துன்பக் கனவுகள் தொலைந்த தடா
வாழ்க்கையும் திருந்திட நோக்கமும் விரிந்தது
வள்ளலக் காந்தியின் நினைப்பாலே
ஏழைகள் எளியரின் தோழன்அக் காந்தியை
எப்படிப் புகழினும் போதாதே
வாழிய அவன்பெயர் ஊழியின் காலமும்
வையகம் முழுவதும் வாழ்ந்திடவே!

— நாமக்கல் கவிஞர்



உலகத்து ஒரு ஜோதி

பேராசிரியர் கல்கி



சொல்லினில் அடங்குவதில்லை; நினைவுக்குள் நிற்பதில்லை; கற்பனைக்கு எட்டுவதில்லை;—காந்தி மகாத்மாவின் பெருமை.

கவிதை திகைக்கிறது: காவியம் திணறுகிறது; கலைகள் தலைவணங்குகின்றன;—காந்தியடிகளின் அற்புத சரித்தை எண்ணி.

இமயத்தைக் காட்டிலும் உயர்ந்து நின்றவர்; கங்கை நதியைக் காட்டிலும் புனிதமானவர்; சூரியனைவிடத் தேஜஸ் படைத்தவர்; தாயைக் காட்டிலும் கருணை உள்ளவர்; கடவுளைப் போல நம்மைக் காக்க வந்தவர்; சத்தியத்தைப் போலச் சலியாது நின்றவர்;—உலகம் போற்றும் உத்தமர்.

> **காந்தி வாக்கு:**
>
> ### குடிப் பழக்கம்
>
> 1931-ம் ஆண்டு காந்தி மகான் லண்டனில் இருந்தார். அப்போது ஒரு பிரிட்டிஷ் மாணவர் காந்திஜியிடம் வந்து, "குடிப்பவர்களிடம் கொஞ்சம்கூட இரக்கம் காட்டமாட்டேன் என்கிறீர்களே, இது ஏன்?" என்று கேட்டார்.
>
> "ஏனென்றால் குடியின் தீமையினால் அவதிப்படுபவர்களிடம் எனக்கு அளவுகடந்த இரக்கம் இருப்பதுதான்!" என்றார் காந்திஜி.

பாரத புண்ணிய பூமியில் இன்றைக்கு எண்பத்தேழு வருஷங்களுக்கு முன்னால் அவர் பிறந்தார். 1869-ம் வருஷம் அக்டோபர் மீ 2-ந் தேதி இந்த உலகத்தை உய்விக்க அவதரித்தார். அந்தப் புனித தினத்தை இன்று நாடெங்கும் கொண்டாடுகிறோம்.

பாரத நாட்டில் இதற்கு முன்னால் இரண்டு அவதார புருஷர்களுடைய பிறந்த நாளைத்தான் தேசமெங்கும் கொண்டாடுவது வழக்கம். ஸ்ரீராமபிரான் அவதரித்த ராமநவமி உற்சவம் கொண்டாடுகிறோம். ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஜன்மம் தரித்த கோகுலாஷ்டமி அல்லது கிருஷ்ண ஜயந்தியைக் கொண்டாடுகிறோம்.

ஸ்ரீராமபிரான் கையில் கோதண்டம் ஏந்தி இராவணாதி ராட்சதர்களை வதம் செய்து மக்களைக் காப்பாற்றினார்.

ஸ்ரீ கிருஷ்ணபகவானே பூதகி, சகடாசுரன் முதல் கம்ஸன், ஜராசந்தன், சிசுபாலன், தந்தவக்ரன் வரையில் பல அசுரர்களையும் கொடுங்கோலர்களையும் வதம் செய்து சாது ஜனங்களை ரட்சித்து அருளினார்.

இவையெல்லாம் இதிகாசங்களில் நாம் படித்தவை. இந்நிகழ்ச்சிகளைப் பரம்பரை பரம்பரையாக உண்மை என்று நம்பி ராமநவமியும் கிருஷ்ண ஜயந்தியும் கொண்டாடி வருகிறோம்.

நம்முடைய காலத்தில் நம் கண்முன்னே நடமாடிய அவதார புருஷர் மகாத்மா காந்தி. இவர் பாரத மக்களை

அடிமைத்தனம் என்னும் கொடிய பூதத்தின் வாயிலிருந்து காப்பாற்றினார். தீண்டாமை என்னும் ராட்சதன், மதுபான மென்னும் அரக்கன், அறியாமை என்னும் காட்டேரி ஆகியவர்களிடமிருந்து நம்மைக் காந்திமகான் ரட்சித்து அருளினார்.

ஸ்ரீ ராமர் கோதண்டம் ஏந்தினார். ஸ்ரீகிருஷ்ணன் சக்ராயுதம் தரித்தார். ஆனால் காந்தி மகாத்மாவோ பலாத்கார ஆயுதங்களை அடியோடு புறக்கணித்து அஹிம்சையாகிய வில்லையும் சத்தியமாகிய சக்கரத்தையும் தரித்துப் பாழ்பட்டு நின்ற பாரத தேசந்தன்னை அடிமைத்தனம் முதலிய அரக்கர்களிடமிருந்து காப்பாற்றிப் பாரத மக்களுக்கு இன்ப வாழ்வை அளித்தார்.

அத்தகையவர் அவதரித்த புனித தினத்தைக் கொண்டாடுகிறோம்.

★

ஒருவர் நமக்கு ஒரு உதவி செய்தால் அதை உயிர் உள்ள வரைக்கும் மறக்கக் கூடாதென்பது மனித குலத்தின் தர்மம். மக்களில் உயர்ந்தோர் அனைவரும் இந்தத் தர்மத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்
துணையாக்
கொள்வர் பயன்
தெரிவார்"

என்று தமிழ் மறை சொல்லுகிறது.

காந்தி மகாத்மா நமக்குச் செய்திருக்கும் நன்றி தினைத் துணையானதா? அற்ப சொற்பமானதா? அதற்கு ஈடு, இணை சொல்ல வேறு ஒன்று உண்டா?

"இந்தியாவில் உள்ள முப்பது கோடி மக்களையும் முப்பது கோடிப் புழுக்களாக மதிக்கிறார்களே, அயல் நாட்டார்?" என்று சுவாமி விவேகானந்தர் அன்று கதறினார்.

காந்தி மகாத்மா தோன்றி இந்திய மக்களை அந்த நிலையிலிருந்து உயர்த்தினார். மாநிலத்தில் நம்மை மனிதர்கள் ஆக்கினார். உலக சரித்திரத்தில் கண்டும் கேட்டுமிராத அஹிம்சா தர்ம முறையினால் பாரத நாடு சுதந்திரம் பெறச் செய்தார். இதன் மூலம் பாரத தேசத்தை உலகத்துக்கே வழிகாட்டும் ஜோதியாக விளங்கச் செய்தார்.

அத்தகைய மகாபுருஷரை நாம் மறக்க முடியுமா? அவர் நமக்குச் செய்த நன்றியைத்தான் மறக்க முடியுமா?

காந்தி மகானும், அன்னை கஸ்தூரி பாயும்






தயாநிதி – வைத்திலிங்கம்

பினாங்கிலுள்ள பிரபல வர்த்தகரான சிங்கம்புணரி சே. க. சி. சின்னமுத்து அவர்களின் குமாரி சௌபாக்கியவதி தயாநிதிக்கும், ரெங்கூனிலுள்ள பிரபல வர்த்தகரான புதுப்பட்டி (திருப்பத்தூர் R. D.) வயி. செல்லையா அவர்களின் குமாரன் திரு. வைத்திலிங்கம் (மதுரா சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் லிட்., மதராஸ்) அவர்களுக்கும் சமீபத்தில் மணமகன் இல்லத்தில் திருமணம் விமரிசையாக நடந்தேறியது. மணமக்களுக்கு ஏரானமான பரிசுகளும் வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன.

வாழ்க, மணமக்கள்!



சிரஞ்சீவி : எஸ். ஆர். ஜி. ராஜாராம்
சௌபாக்கியவதி : ராமலக்ஷ்மி

சங்கரன்கோவில் மிராசுதார் ஸ்ரீ எஸ். ஆர். கோபால சுப்பிரமணிய பட்டரவர்களின் ஏக புதல்வன், சிரஞ்சீவி எஸ். ஆர். ஜி. ராஜாராம் (கல்பா கிராம முனிசிப்) அவர்கட்கும் சங்கரன் கோவில் ஸ்ரீ ரா. அம்பி பட்டரவர்கள் கனிஷ்ட புதல்வி சௌ. ராமலக்ஷ்மிக்கும் 7-9-56 வெள்ளிக்கிழமை அன்று திருமணமும் 9-9-56 ஞாயிறு அன்று ராஜபவனத்தில், வதூகிரகப் பிரவேசமும் சிறப்பாக நடைபெற்றன. வாழ்க, மணமக்கள்!

யாரைப் பொறுக்குவது?

நந்தி வழி விடுமா?

'யாரைப் பொறுக்குவது?' என்ற தலைப்பில் 23—9—56 'கல்கி' இதழில் எழுதப்பட்ட விஷயங்களைக் கவனித்தேன். வளர்ந்து வரும் பாரத சமுதாயம் இனி மேடைப் பேச்சாளர்களுக்கும், 'வெறும் அரசியல்'காரர்களுக்கும் மதிப்பளிக்கக் கூடாதுதான். ஆனால் தொழில்துறையிலும், நிர்வாகத் திறமையிலும் அனுபவம் பெற்றவர்கள் சுலபமாகப் பொதுத் துறைக்கு வருவதில்லை; வரத் தயங்குகிறார்கள். காரணம், அவர்களிடையே 'ராமன் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டால் என்ன? நமக்கு எதற்கு இந்த வம்பெல்லாம்?' என்ற மனப்பான்மை இருந்து வருகிறது. இந்த எண்ணம் நீங்கி ஒரு சிலர் பொதுத் துறைக்கு வந்தாலும், முன்னால் வந்து நிற்கும் 'நந்தி'கள் வழி மறைத்து அவர்களது உணர்ச்சியைத் தடுத்து விடுகின்றன. ஆனாலும் இம்மாதிரியான சிறு சிறு தடைகளை யெல்லாம் நீக்கிக் கொண்டு, திறன் படைத்தவர்கள், தொழில்துறை அறிஞர்கள் பொதுப் பணிக்கு வரவேண்டும். இல்லையேல் புதிய உருப் பெற்று வரும் நவபாரதம் நல்ல நிலைமையில் இருப்பது, கார்ப்பரேட்டர் சரியாக இருந்தும், இன்ஜின் சரியாக வேலை செய்யாத நிலையென்ற 'ராஜாஜி' அவர்களின் உதாரணத்துக்கோர் இலக்கணமாகி விடும்.

எனவே, தைரியமாக 'ஆக்க நிபுணர்'கள் பலர் அரசியலுக்கு வருவார்கள். அவர்களை வரவேற்க மேலிடம் தயாராக இருக்கச் செய்ய வேண்டியது அவசியம்.

சத்தினபுரி
25-9-56 — ம. சி. திருமலைசாமி

★

காங்கிரஸின் தூய்மை

''யாரைப் பொறுக்குவது?'' என்ற தலைப்பின் கீழ் செப்டம்பர் இருபத்தி மூன்றும் தேதி '' கல்கி '' இதழில், வட சென்னை ம. பொ. சி. மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில் ராஜாஜி அவர்கள் பேசியதாக எழுதியுள்ளதைப் படித்தேன்.

அவை பொன்னெழுத்துக்களிலே பொறிக்கப்பட வேண்டிய விஷயம். நேருஜி, தேபர், மற்றும், மத்திய, மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கும், அவரவர்கள் பிரதேச பாஷைகளில் மொழிபெயர்த்து அனுப்பப்படவேண்டிய ஜீவசக்தி பொருந்திய வாக்கியங்கள். மேலும் காங்கிரஸ்காரர்கள் என்று கூறிக் கொள்பவர்களும், காங்கிரஸில் பொறுப்பான பதவிகள் வகிப்பவர்களும், ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

ஒருவருக்குப் பதவியால் பெருமை ஏற்பட்டது என்பதை விட, அவர் அந்தப் பதவியில் இருப்பதால் பதவிக்குப் பெருமை என்ற ரீதியில் இருக்கவேண்டும். வரப் போகும் தேர்தலில் அங்கத்தினர்கள் பொறுக்கும் கமிட்டியின் சிபாரிசு. ராஜாஜி அவர்களின் யோசனையின்படி தேர்தல் கமிட்டியினர் அங்கத்தினர்களைப் பொறுக்கி எடுத்தால் காங்கிரஸ் கட்சியின் தூய்மை காப்பாற்றப்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

திருக்கோவலூர்
21—9—56 — ஆர். பழனி முதலியார்
தலைவர், நகர காங்கிரஸ் கமிட்டி.

★

உழைப்பவர்களே உயிர்

செப்டம்பர் 23ம் தேதியில் வெளியான ''யாரைப் பொறுக்குவது'' என்ற தலையங்கத்தைப் படித்தேன். அதில், இப்பொழுது காங்கிரஸ் உள்ள நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள். காங்கிரஸ் மீது மக்களுக்கு வெறுப்பு வளர, மூல காரணமா யிருப்பவர்கள் சுய நலமிகள் தான் என்று குறிப்பிட்டிருந்தது முற்றிலும் உண்மையே.

''நாடு'' என்பது மக்களின் பொதுச் சொத்து. ஒரு நாடு சீரழிகிறது என்றால், அந் நாட்டுமக்கள் சீரழிகிறார்கள் என்று அர்த்தம். நாடு முன்னேறுகிறது என்றால் மக்கள் முன்னேறுகிறார்கள் என்றுதான் பொருள். மக்களை, நாட்டை முன்னேற்றப் பலம் வாய்ந்த, திறமை வாய்ந்த ஒரு கட்சி அல்லது ஸ்தாபனம் அவசியப் படுகின்றது. மக்களுக்காகப் பாடுபடும் கட்சி மக்களின் நன்மை ஒன்றையே தன் கட்சியின் உயிர் நாடியாகக் கொண்டிருந்தால் தான், கட்சியும் உயிருடன் இருக்கும். மக்களிடம் அக்கறை காட்டாத கட்சியிடம் மக்கள் சிறிதும் அக்கறை காட்ட மாட்டார்கள்.

ஆகவே, நல்ல மரத்தில் ஏற்பட்ட ஒரு சொத்தையைக் களைவதைப் போல, தூய வெண்மை நிற ஆடையிலே காணும் கருமையைப் போக்குவதைப் போல, காங்கிரஸ் ஸ்தாபனத்தில் களையெடுப்பு அவசியம் வேண்டியதாகத்தான் இருக்கின்றது. ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல, சுயநலமிகளால் நோயுண்ட காங்கிரசுக்கு, உழைப்பவர்களே இனி உயிரூட்ட முன் வரவேண்டும்.

காரமடை
22—9—56 — துரை. முருகேசன்

★

புத்துயிர் அளிக்கும்

தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களாக யாரைப் பொறுக்குவது என்பது ஒரு சரியான பிரச்னை. இதற்கு ராஜாஜி கொடுத்திருக்கும் வழி ஓர் சிறந்த வழி. இதைக் கவனித்தே ஆகவேண்டும். இதனால் ஒரு சில இடையூறுகள் இருப்பினும் நன்மைகள் பல. தன்னலவாதிகளைவிட இவர்கள் எத்தனையோ மேல். சோஷலிஸ தத்துவம் தழுவி இருக்கும் ராஜாஜியின் இந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் அக்ராசனர்கள் கவனத்துக்குக் கொண்டு வந்து நடைமுறையில் செய்வதானால், பலமும் மதிப்பும் குறைந்து வரும் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு இந்தப் புதுமை புத்துயிர் அளிக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

திருவனந்தபுரம்
26—9—56 — சி. மது

வட ஆர்காடு வழி காட்டுகிறது



பகீரதன்

சென்ற ஆகஸ்ட் மாதம் பத்தொன்பதாம் தேதியன்று கப்பல் ஓட்டிய தமிழர் சிதம்பரம் பிள்ளை காந்தி மகாத்மாவைத் தேடிச் சென்று "மகாத்மாஜி! கேட்டீர்களா சங்கதியை!" என்றார்.

"என்ன சங்கதி?" என்றார் காந்தி மகான்.

"பாரத நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்துவிட்டு, கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் ராஜ்யம் நடைபெற வேண்டும் என்று சொன்னீர்களே! ஞாபகம் இல்லையா?" என்று கேட்டார் திரு சிதம்பரம் பிள்ளை.

"இல்லாமல் என்ன? ஆனால் இப்போது பாரத நாட்டில் கிராம ராஜ்யம் நடைபெறுகிறதா என்றுதான் தெரியவில்லை."

"தாங்கள் கண்ட கனவு இப்போது நனவாகிக் கொண்டு வருகிறது. பாரத நாட்டில் கிராம ராஜ்யம் நடைபெறுவதற்கு வழி செய்து வருகிறார்கள். அது நடைபெறுவதற்கு வேண்டிய வழிகளையும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களே மகாநாடு நடத்தி விவாதித்து உற்சாகமாகச் செய்து வருகிறார்கள், வருகிறீர்களா? அவைகளை நேரில் பார்த்து விட்டு வரலாம்!" என்று கேட்டார் திரு சிதம்பரம் பிள்ளை.

"நாம் பார்த்து என்ன ஆகப்போகிறது?" என்று காந்தி மகாத்மா தமது மோகனப் புன்னகையுடன் கேட்டார்.

"பாரதத்தின் சரித்திரத்தையே மாற்றி அமைத்த மகான் அல்லவா தாங்கள்? தங்களுடைய சக்தியினாலே கிராமங்களில் எல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டுக் கிராம ராஜ்யம் நடைபெற்று வருகிறது. பாழ்பட்டு நின்ற கிராமங்களுக்கும், கிராம மக்களுக்கும் கிராமக் கைத்தொழிலுக்கும் ஒரேயடியாக யோகம் பிறந்து விட்டதாகப் பூலோகத்திலிருந்து வந்தவர்கள் எல்லாம் கூறுகிறார்கள். இது உண்மையானால் நிச்சயம் தமிழ்நாட்டில் கிராமப் பஞ்சாயத்துக்கள் அமர்க்களமாய் நடைபெற வேண்டுமல்லவா? அவைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்று பார்த்து விட்டுத்தான் வருவோமே?" என்றார் செக்கிழுத்த தியாகி திரு வ. உ. சி.

"கப்பலோட்டிய தமிழரே! உமக்கு எப்பொழுதுமே தமிழ் நாட்டின்மீது அலாதியான மோகம்தான்; உமக்கு மட்டும் என்ன? எனக்கும் அப்படித்தான். வாருங்கள், நாம் இருவரும் இப்போதே சென்று தமிழ் நாட்டில் கிராமப் பஞ்சாயத்துக்கள் எப்படி நடைபெற்று வருகின்றன என்று பார்த்து விட்டு வருவோம்" என்றார் காந்தி மகாத்மா.

"என்னுடைய தெய்வத் தமிழ் நாட்டைத் தங்களுடன் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதில் எனக்கு மிகுந்த திருப்தி ஏற்படும்" என்று சொல்லிவிட்டு மீசையை முறுக்கிக் கொண்டு புறப்பட்டார் திரு வ. உ. சிதம்பரம் பிள்ளை.

காந்திஜியும், வ. உ. சி.யும் வான வீதி வழியாகத் தமிழகத்தின் பல இடங்களைப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். கிராமங்களை எல்லாம் பார்த்துக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டுக் கிராமங்கள் வளர்ச்சியடைந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்கள். கிராமத்து மக்களும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களும் சேர்ந்து கிராமங்கள் முன்னேற்

மேலே: கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் துவக்க உரை நிகழ்த்துகிறார்.

றத்துக்குப் பாடுபட்டு வரும் அதிசயத்தைப் பார்த்துப் பெருமித மடைந்தார்கள்.

இருவரும்தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டமாக வட்டமிட்டுப் பார்த்துக் கொண்டே வட ஆற்காடு மாவட்டத்துக்கு வந்து சேர்ந்தார்கள். வட ஆற்காட்டில் வேறு எங்கும் இல்லாத அளவுக்குக் கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டிருப்பதைப் பார்த்துக் காந்திஜிக்குப் பெரிதும் உற்சாகம் உண்டாகி விட்டது. ஆனால் ஒரு கிராமத்திலாவது அதன் தலைவரைக் காணவில்லை. அதைப் பற்றி யோசித்துக் கொண்டே வரும் போது, வந்தவாசிக்கு அருகில் உள்ள வல்லம் கிராமத்தில் ஏகக் கூட்டமா யிருந்ததைப் பார்த்தார்கள். சுமார் ஐயாயிரம் பேர்கள் இருக்கலாம். ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் கூடியிருந்தார்கள். அந்தப் பெரும் ஜனக் கூட்டத்தின் ஒரு பக்கத்தில் அழகான அலங்காரப் பந்தலும் அதனடியில் பிரசங்க மேடையும் காணப்பட்டன. மேடை மீது காந்தி மகான் படமும் இன்னும் பல தலைவர்களின் படங்களும் வைக்கப்பட்டிருந்தன. பந்தல் நிறைய வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் அத்தனை பேரும் வந்து குழுமி யிருந்தனர்.

''செக்கிழுத்த தியாகியே! இங்கு என்ன மகாநாடு நடக்கிறது?'' என்று கேட்டார் மகாத்மா காந்தி.

''சந்தேகம் என்ன? வட ஆற்காடு ஜில்லா கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடுதான்.''

''இவ்வளவு பேரும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களா?''

''ஆமாம். தமிழ்நாட்டில் மொத்தம் 6,000 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றனவாம். அதில் நாலில் ஒரு பங்கு 1,600 பஞ்சாயத்துகள் வட ஆற்காடு மாவட்டத்திலேயே இருக்கின்றன.''

''அதோ! வல்லம் கிராமத்து வீதியில் ஏதோ ஊர்வலம் வருகிறதே! யானை அல்லவா முன்னால் வருகிறது. யானைக்குப் பின்னால் யாருக்கு மாலைகள் போட்டு ஊர்வலமாக அழைத்துப் போகிறார்கள்?''

''அவர்தான் சென்னை ராஜ்யத்தின் கல்வி மந்திரி திரு சுப்பிரமணியம்.''

''அவருக்குப் பின்னால் வருகிறவர்?''

''ராஜாராம் நாயுடு என்னும் ஒரு எம். எல். ஏ.''

''உண்மையிலேயே இவ்வளவு கூட்டமும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டுக்காகவா? சரியாகப் பாரும்.''

''சந்தேகமே இல்லை. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டுக்காகவேதான்! எல்லாரும் தாங்கள் கூறிய வழியில் கிராம ராஜ்யம் நடை பெறுவதற்கு யோசனைகள் செய்து, தீர்மானங்கள் போட்டு, சர்க்காரின் உதவியைப் பெறப் போகிறார்கள்.''

இவ்விதம் சிதம்பரம் பிள்ளை சொன்னதும் ''என்ன இருந்தாலும் தமிழ்நாடு தமிழ்நாடுதான். நான் முன்னால் பார்த்த தமிழ்நாடு இப்போது எவ்வளவோ மாறுதல் அடைந்து விட்டது'' என்றார் காந்திஜி.

''ஆமாம்; ஆமாம். அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம். அதிலும் 1956ம் வருஷம் தமிழ்நாட்டுப் பஞ்சாயத்தின் சரித்திரத்தில் மிக முக்கிய வருஷமாகப் போகிறது. இந்த ஆண்டிலிருந்து பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்துச் சபைகளின் மூலம் கிராமங்களை வளர்ப்பதற்கு வேண்டிய தீவிர முயற்சிகளை எடுத்துக் கொண்டு உழைக்கப் போகிறார்கள்'' என்றார் வ. உ. சி.

** ** **

மேற்கண்ட விதமாகக் காந்திமகானும் வ. உ. சிதம்பரம் பிள்ளையும் தங்கள் சூட்சும சரீரத்தில் வந்திருப்பார்களா? வந்திருந்தாலும் மேற்சொன்னவாறு சம்பாஷித்திருப்பார்களா என்று நேயர்கள் சந்தேகப்படலாம். நிச்சயமாக வந்தார்கள். நிச்சயமாகச் சம்பாஷித்தார்கள். வல்லம் கிராமத்தில் வடாற்காடு கிராமப் பஞ்சாயத்து மகாநாடு நடைபெற்ற சமயம் மேற்கண்டவாறு அவ் விருதியாக மூர்த்திகளும் வான வீதியில் நின்று சம்பாஷித்ததாகவே எனக்குத் தோன்றியது.

ஆகஸ்டு மாதம் 19-ந் தேதி வல்லம் கிராமத்தில் கூடியிருந்த வட ஆற்காடு



மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்களையும், அந்த வட்டாரத்துக் கிராம மக்களையும் பார்த்தபோது எனக்கு ஒரே வியப்பாய்த் தான் போய் விட்டது. இந்த ஆண்டில் இதைப் போன்ற அதிசயங்கள் பல இடங்களில் நடை பெற்று வருகின்றன. சில கிராமங்களுக்குச் சாலைகள் போட்டிருக்கிறார்கள். சில கிராமங்களில் ஓலைக் குடிசைகளை மாற்றி ஓட்டு வில்லை வீடுகள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இவையாவும் கிராமப் பஞ்சாயத்துக்கள் செய்து வரும் அதிசயமான சாதனைகள்தான்.

கிராமப் பஞ்சாயத்துச் சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்காகவும், கிராமப் பஞ்சாயத்துக்கு மேலும் அதிக அதிகாரங்களைப் பெறுவதற்காகவும் தமிழ் நாட்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வல்லம் கிராமத்தில் ஐயாயிரம் மக்கள் கூடினார்கள். அதில் ஆயிரம் பேருக்கு மேல் கிராமத்துப் பெண்மணிகள். அவ்வளவு பேரும் கிராமப் பஞ்சாயத்து சம்பந்தமாக நடைபெற்ற காரசாரமான வாதப்பிரதிவாதப் பிரசங்கங்களைக் கேட்டார்கள் என்றால் அது 1955ம் வருஷம் வரையில் நம்பக்கூடிய காரியமாக யாரும் எண்ணியிருக்க மாட்டார்கள். நான் கூட இதை நேரில் பார்த்திரா விட்டால் நம்புவது கஷ்டமாகவே இருந்திருக்கும்.

** ** **

மேற்படி விழா சம்பந்தமான இன்னொரு ஆச்சரியமான சம்பவம் என்னவென்றால் கிராமப் பஞ்சாயத்து மகாநாடு உண்மையான கிராமத்திலேயே நடைபெற்றதுதான்.

இந்தக் காலத்தில் கிராமச் சீர்திருத்தங்களைப் பற்றி நகரத்திலேதான் பேசுவார்கள். கிராமத்துப் பக்கம் தலைவைத்துப் படுக்காதவர்கள் எல்லாம் கிராமச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பிரசங்கமாரி பொழிவார்கள். புத்தகம் புத்தகமாக எழுதிக் குவிப்பார்கள்.

அதற்கு நேர்மாறாகக் கிராமத்து மக்களும், தங்கள் கிராமத்துப் பஞ்சாயத்துத் தலைவர்களும் கிராமத்திலேயே கிராமப் பஞ்சாயத்து மகாநாடு நடத்தப் போகிறார்கள் என்பதைக் கேட்டதும் நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். மிகப் பிரயத்தனம் செய்து சென்னையிலிருந்து வல்லம் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். முப்பது பேர் உட்காரக் கூடிய பஸ்ஸில் நூறு பேர் நெருக்கி அடித்துக் கொண்டு பிரயாணம் செய்தோம். நாடு முழுதும் பூரண கிராம ராஜ்யம் ஏற்பட்ட பிறகு முப்பது பேர் உட்காரக் கூடிய பஸ்ஸில் இருபத்தொன்பதே பேர் உட்காருவார்கள் அல்லவா? அந்த நன்னாளை எண்ணிச் சந்தோஷப் பட்டுக் கொண்டே வல்லத்துக்கு நல்லபடியாகப் போய்ச் சேர்ந்தேன்.

வட ஆற்காடு ஜில்லா பஞ்சாயத்துத் தலைவர்கள் இரண்டாவது மகாநாட்டு விளம்பரத்தில் ''ஸ்ரீ கே. ராஜாராம் நாயுடு தலைமையில் நிதிமந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார். உதவி சபாநாயகரும், பத்து எம். எல். ஏ.க்களும், நான்கு எம். எல். சிக்களும் பேசுவார்கள். 1,600 பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்'' என்று இருந்தது. இதைப் பார்த்ததும் மேகமண்டலம் வரையில் என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

பேஷ்! இவ்வளவு பேரும் கிராமத்தில் ஒன்று கூடுவதே ஒரு பெரிய விசேஷம்தான்! மந்திரிகளும், சட்ட சபை அங்கத்தினர்களும் தேர்தல் காலத்திலும், விநோபாஜியோடும் மட்டுமே கிராமத்துப் பக்கம் போய் வருகிறவர்கள் அல்லவா? அதற்கு நேர்மாறாக, சேவை உணர்ச்சியுடன் மந்திரிகளும், எம். எல். ஏ.க்களும் கிராமத்தைத் தேடி வந்து கிராமப் பஞ்சாயத்துக்கள் சீர்திருத்தம் பற்றிப் பேசி முடிவு செய்யப் போகிறார்கள் என்றால் கிராம மக்கள் உற்சாகமாக வந்து மகாநாட்டில் கூடியதில் வியப்பென்ன இருக்கிறது?

---

1. விழாத் தலைவர் ஸ்ரீ கே. ராஜாராம் நாயுடு தலைமை உரை நிகழ்த்துகிறார். 2. வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ டி. கிருஷ்ணசாமி நாயுடு வரவேற்புரை கூறுகிறார். வட ஆற்காடு மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்களையும், மகாநாட்டில் கலந்து கொண்ட பெண்கள் கூட்டத்தில் ஒரு பகுதியையும் காணலாம்.





மகாநாட்டுத் தலைவர்களை ஊர்வலமாக அழைத்து வருகிறார்கள்.

மகாநாட்டைத் திறந்து வைத்த நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் உணர்ச்சியுடன் பேசினார். காந்திமகானின் தலைமையில் போரிட்டுச் சுதந்திரம் பெற்றது உத்தியோகத்துக்காகவும், பதவிகளுக்காகவும் அல்ல. அன்னியர் ஆட்சியை அழித்துவிட்டு நமது நாட்டையும், நாட்டு மக்களின் நலனையும் உயர்த்துவதற்காகத்தான். நமது நாடு கிராமங்கள் நிறைந்த நாடு. கிராமங்கள் வளம் பெற்றால்தான் நாடு உயர முடியும். கிராமங்கள் வளம்பெறக் கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலமாகத்தான் திட்டங்கள் வகுத்து நிறைவேற்ற முடியும் என்று கூறி மக்களின் கரகோஷத்தைப் பெற்றார்.

மேலதிகாரிகள் கிராமப் பஞ்சாயத்துக்கு அளிக்கும் தொல்லையை ஒப்புக்கொண்டு அதன் காரணத்தைப் பஞ்சாயத்துக்களின் தலையிலேயே தூக்கிப் போட்டு விட்டுத் தப்பித்துக் கொண்டார்.

''இல்லை; இல்லை; கிராமப் பஞ்சாயத்துக்கு மேல் அதிகாரிகள் பல வழிகளில் தொல்லை கொடுக்கிறார்கள். அவர்கள் தொல்லையிலிருந்து விடுபட்டால்தான் கிராமப் பஞ்சாயத்துக்கள் சீர்ப்படும்'' என்று கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் முணுமுணுத்தார்கள்.

''அதிகாரமும், சர்க்காரின் கண்காணிப்பும் இருந்தும் கடைசியில் சில பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்துப் பணத்தை ஏப்பம் விட்டு விட்டார்கள். அதைக் கண்டு பிடித்துச் சொல்லியும் சர்க்கார் அவர்களைத் தண்டிக்காமல் இருக்கிறது. இது என்ன சர்க்காரோ! என்ன மந்திரிகளோ'' என்று கிராம மக்கள் சலித்துக் கொண்டார்கள்.

மேற்கூறிய முணுமுணுப்பும் ஆத்திரமும் மந்திரியின் காதுக்கு எட்டிற்றோ என்னவோ!

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ ராஜாராம் நாயுடு வட ஆற்காடு ஜில்லா பஞ்சாயத்துக்கள்தான் தமிழ் நாட்டுக்கு வழிகாட்டி வருகிறது என்பதைப் பல உதாரணங்கள் மூலம் விளக்கிக் கூறினார்.

பஞ்சாயத்துத் தலைவர்கள் செல்வாக்கைக் கொண்டு நன்கொடைகள் வசூலித்துக் கிராமங்களை உயர்த்தி வருவது; ஜில்லா போர்டுகள் பார்த்துப் பாடம் கற்பித்துக் கொள்ளும் வண்ணம் பஞ்சாயத்துச் சபைகள் பாடசாலைகள் நடத்தி வருவது; அன்றாட நிர்வாகத்துக்காக வசூலிக்கும் வரிப் பணத்தை மூலதனத் தொகைகளுக்காகச் செலவிடாமல் இருப்பது முதலிய அதிசயமான காரியங்களை வட ஆற்காடு பஞ்சாயத்துக்கள் செய்து வருவதை வியந்து பாராட்டினார்.

பஞ்சாயத்து நிர்வாகம் சீராக நடைபெற்றால்தான் சர்க்காரின் பாரம் குறையும். உண்மையான ஜனநாயக ஆட்சி நடைபெறும். ஆகையால் சர்க்கார் பஞ்சாயத்துத் தலைவர்களின் குறைகளைக் கேட்டுப் பஞ்சாயத்து சம்பந்தமான சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்து நல்லமுறையில் அமுல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த மகாநாட்டைக் கூட்டி வெற்றிகரமாக நடத்திய வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ டி. கிருஷ்ணசாமி நாயுடு தமது வரவேற்புரையில் சர்க்காரின் ஆமை வேகத்தைச் சுட்டிக் காட்டினார். பஞ்சாயத்துக்களுக்கு நில வரிகளில் இருந்து நியாயமாகக் கிடைக்க வேண்டிய பங்குப் பணம் இன்னும் வந்து சேரவில்லை என்றும், புதிய நிலவரி சர்சார்ஜ் முழுவதும் பஞ்சாயத்துக்குத்தான் என்றும் சர்க்கார் வாக்குறுதி அளித்திருந்ததை எடுத்துக் காட்டி அது வெறும் பேச்சளவில் இருக்கும் விந்தையையும் விளக்கிக் கூறினார். பஞ்சாயத்துக்கள் நன்றாக நடைபெறச் சர்க்கார் உடனே அவைகளுக்குத் தாராளமாகப் பண உதவி செய்து ஊக்கமளிக்கக் கேட்டுக் கொண்டார்.

இன்னும் பல எம். எல். ஏ.க்கள், எம். எல். ஸி.க்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், சமுதாய நல ஊழியர்கள் பேசினார்கள். காந்தி மகான் நேருஜி, ராஜேந்திர பிரஸாத், நேதாஜி ஆகிய தலைவர்களின் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார்கள். படத் திறப்புக்கள் முடிந்தவுடன் என் அருகில் இருந்தவர் காரசாரமாக, ''தமிழ் நாட்டுத் தலைவர்களின் படத்தையும் இது போன்ற மகாநாட்டில் திறந்து வைத்துப் பேசும் வழக்கம் நமக்கு எப்பொழுதுதான் ஏற்படப் போகிறதோ! எப்பொழுது நம்முடைய தலைவர்களை நாம் பாராட்டக் கற்றுக் கொள்ளப் போகிறோமோ, அப்போதுதான் இந்த நாடு உருப்படும்'' என்று உணர்ச்சிமயமான குரலில் கூறினார். ஆமாம்; அவர் குறைப்பட்டதும்

வேர்க்குரு விலிருந்து

துரிதமாக, நீடித்த நிவாரணம் பெற
சுலபமான இரு-வழி சிகிச்சை

1

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப் தேய்த்து ஸ்நானம் செய்வதால், அமிலங்களால் அடைபட்டு வேதனையூட்டும் சருமத் துவாரங்களுக்கு நிவாரணம் ஏற்படுகிறது. அதன் ஔஷத சக்தி வாய்ந்த நுரை உங்கள் சருமத்தினூடே எளிதில் புகுந்து, எரிச்சலை அதன் ஆரம்ப ஸ்தானத்திலேயே நிறுத்துகிறது.



2

ஸ்நானத்திற்குப் பின் உங்கள் சருமத்தை குளுமையுடனும், சுகமாயும் வைக்க ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் உபயோகியுங்கள். இதமளிக்கும் இந்த கிருமிநாசினி பவுடர் வேர்க்குரு உபாதையிலிருந்து நீடித்த நிவாரணமளிக்கிறது.



Johnson's
TRADE MARK

JPH. 3310

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப் மற்றும் பவுடர்

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிட்.

B. 6 பிளாக் III - டெல்லி - ஆஜ்மீரி கேட் ஸ்கீம், புது டெல்லி-1

(பெட்ரோல் பங்கிற்கு அடுத்தது)

போன்: 27035 - தபால் பெட்டி நெ. 472 - தந்தி: 'EVERMENS'

குறைந்த கால ஏலச் சீட்டுகள்

சேரக் கடைசி தேதி 18-10-56 ... முதல் ஏலத் தேதி 21-10-56

25 மாதங்கள்	மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை ஏலங்கள் 1956 அக்டோபர் மாதச் சீட்டு	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
C	ரூ. 50/-	ரூ. 1250/-	G	ரூ. 20/-	ரூ. 500/-
F	ரூ. 25/-	ரூ. 625/-	H	ரூ. 15/-	ரூ. 375/-

நீண்ட கால ஏலச் சீட்டுகள்

எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க,
'B' & 'D' வகை சீட்டுகளில் புது குரூப் ஆரம்பித்துள்ளோம்

சேரக் கடைசி தேதி 25-10-56 - B & D வகுப்புகள் ஏலத் தேதி 28-10-56

50 மாதங்கள் 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	தொகை	குறித்த தள்ளுபடி	வகுப்பு	மாதச் சந்தா	தொகை	குறித்த தள்ளுபடி
B	ரூ. 50/	ரூ.2500/-	ரூ. 250/-	D	ரூ. 20/-	ரூ.1000/-	ரூ. 100/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்பிரமணியம், மானேஜிங் டைரக்டர்

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

"சாஸ்திரி கடைப் புடவை"

என்றவுடன் அலாதி மதிப்புள்ளதென்று தாங்கள் எண்ணுவது இயற்கைதான்

நவராத்திரி, தீபாவளி பண்டிகைகளை முன்னிட்டு கொள்ளேகாலம், மைசூர் கிரேப், புடவைகள், பாவாடைகள், சோளிகள், நூல் புடவைகள் வேஷ்டிகள் ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்.

★

A. சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்

(ஸ்தாபிதம்: 1902) - - - (போன்: நெ. 71719)

வடக்கு மாட வீதி : மயிலாப்பூர் : மதராஸ்-4

குறிப்பு :—எங்கள் நாணயமுள்ள சரக்குகளைக் கீழ்க்கண்ட இடங்களில் மதராஸ் விலைக்கே விற்கிறோம்.

டெல்லி: 4/75, கிருஷ்ணா மார்க்கெட், கரோல்பாக், புது டில்லி-5
ஜெம்ஷெட்பூர்: ஸ்ரீ D. V. V. சாஸ்திரி வீடு, "M" ரோடு

நியாயம்தானே! மகாநாட்டில் திறந்து வைக்கப்பட்ட தலைவர்களில் தமிழ் நாட்டுத் தலைவர்களின் படங்களும் இருந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்குமல்லவா?

கடைசி வரையில் இவ்வளவு பிரசங்கங்களையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்ததிலிருந்து ஆயிரம் கிராம மக்களும் தங்கள் தங்கள் கிராமங்கள் முன்னேறுவதில் எவ்வளவு அக்கறை காட்டி வருகிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது.

ஆனால் மகாநாடு வெறும் பிரசங்கங்களுடன் மட்டும் நின்றுவிட வில்லை. ஒரு சிறு கண்காட்சியும் வைத்திருந்தார்கள். அதில் கல்வி இலாகா, சுகாதார இலாகா, கைத்தொழில் இலாகா, விவசாய இலாகா எல்லாம் பங்கெடுத்துக் கொண்டு மகாநாட்டைச் சிறப்பித்தன. மக்கள் அந்தக் கண்காட்சியிலிருந்த ஒவ்வொரு பொருளையும் ஆவலோடு பார்த்துப் பார்த்து, துருவித் துருவிப் பல கேள்விகள் கேட்டனர். கிராமப் பஞ்சாயத்துக்கள் கிராம மக்கள் மத்தியில் அந்த உணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதே மிகப் பெரிய சேவை என்று சொல்லலாம்.

இரவு 8–30 மணிக்கு, சென்னை விளம்பர இலாகாவினரின் ஐந்தாண்டுத் திட்ட விளக்க சினிமாப் படம் ஒன்று காண்பித்தார்கள். இந்தப் படத்தைப் பார்த்ததும், "அடே அப்பா! இவ்வளவு காரியங்களைச் சர்க்காரா செய்திருக்கிறது?" என்ற வியப்புத்தான் ஏற்பட்டது. உண்மையிலேயே சர்க்கார் எவ்வளவோ நல்ல காரியங்களைத்தான் செய்து வருகிறார்கள் என்பதை ஓரளவு இந்தப் படத்தைப் பார்த்தவுடன் புரிந்து கொள்ள முடிந்தது!

** ** **

தமிழ்நாடு எல்லா வகையிலும் சிறந்த நாடு. ஆதிநாளிலிருந்து கிராமங்களின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் தமிழகம் பாரதத்துக்கு, ஏன், உலகத்துக்கே வழிகாட்டியாக இருந்து வந்திருக்கிறது.

இடைக் காலத்தில் அன்னிய ஆட்சியில் கிராமங்களின் வளர்ச்சி குன்றி நகரங்கள் பெருகத் தொடங்கின. இப்பொழுது காலம் அடியோடு மாறிவிட்டது. கிராமங்களில் புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கிராம மக்கள் விழிப்படைந்து விட்டனர். கிராமங்களின் செழிப்புத்தான் தேசத்தின் செழிப்பாகும். எனவே கிராமங்கள் செழித்தோங்குவதற்குக் கிராமப் பஞ்சாயத்துக்களே சரிய முறையில் இயங்கி ஆக வேண்டும்.

இதற்கு அநேக பஞ்சாயத்துக்களைக்கொண்ட வடஆற்காடே தமிழ் நாட்டுக்கு வழிகாட்டும் படியாக நடந்து கொள்ள வேண்டும். பஞ்சாயத்தார்கள் மகாநாடு கூட்டுவதோடு திருப்தியடைந்து விடக் கூடாது. பஞ்சாயத்துக்குள்ள குறைகளை ஓயாது எடுத்துச் சொல்லிக் கொண்டே இருந்தால்தான் சர்க்காரின் இரும்புக் காதுக்குள் சில விஷயங்களாவது ஏறும். பிறகுதான் அவர்கள் தங்கள் கண்களைத் திறந்து பார்ப்பார்கள்.

** ** **

வட ஆற்காடு ஜில்லா பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டில் பேசிய பேச்சுக்களையும், நிறைவேற்றிய தீர்மானங்களையும் பார்த்த போது கிராமப் பஞ்சாயத்துக்கள் யார் தடை செய்தாலும் வெகு வேகமாக முன்னேறியே தீரும் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்க முடியாது.

சர்க்கார் வெளியிட்டிருக்கும் பஞ்சாயத்துச் சீரமைப்பு வெள்ளை அறிக்கையைப் பார்த்த போது வல்லம் மகாநாடு நல்ல பலன் அளித்திருக்கின்றது என்று தான் சொல்லத் தோன்றுகிறது. ஆனால் பஞ்சாயத்துச் சட்டங்களைத் திருத்தும் போது பஞ்சாயத்துத் தலைவர்களின் ஒத்துழைப்பையும் சர்க்கார் பெற்று விட்டால் கிராமங்களில் சுலபமாகப் பல திட்டங்களை நிறைவேற்றி விடலாம். மதுவிலக்கு போன்ற மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய மாபெரும் காரியங்களைக் கூட வெற்றிகரமாக நடத்தி விடலாம்.

இதற்கு வட ஆற்காடு மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஒரு மகாநாடு கூட்டி வழிகாட்டியுள்ளார்கள். அவர்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன். வட ஆற்காட்டுக்குத் தேசத்தின் சார்பாக வந்தனை செய்கிறேன்.

"கல்கி" அக்டோபர் மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். தமிழ் நாட்டின் சூழ்நிலையை வைத்துச் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

கதைகள் "கல்கி"யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டு பக்கத்துக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாத மூன்றாவது வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி"யில் பிரசுரமாகும்.

கதைகள் அந்தந்த மாதம் 20-ம் தேதிக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேர்ந்து விடவேண்டும்.

கதைகளைத் திரும்பப்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கதைகளுடன் போதிய தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

தேவியின் கடிதம்

வாடகை வீடு



வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

வாடகை வீடு மிகவும் அசௌகர்யமாக இருப்பதால் சொந்த வீடு அவசியம் தேவையாக இருக்கிறதென்று நீ எழுதியிருக்கிறாய்.

எல்லோருக்குமே சொந்த வீடு அமைத்துக் கொள்வது சாத்தியமா? நூற்றுக்குப் பத்துப் பேருக்குக் கூட வீடு சொந்தமாக இருக்க முடியாது. 'முட்டாள் வீட்டைக் கட்டுகிறான். புத்திசாலி குடித்தனம் இருக்கிறான்' என்று சொல்வதுண்டு. வீட்டுக்குக் கொடுத்த வாடகையெல்லாம் சேர்த்தால் ஒரு வீடு வாங்கலாமென்று கணக்கு போடுவதுண்டு. நாம் கொடுக்கும் வாடகை அவர்கள் போட்டிருக்கும் முதலீட்டிற்கு வட்டி, வரி, கொஞ்ச லாபம் இவைகள் தானென்பதையும் மறந்து விடக் கூடாது.

சொந்தமாக எவ்வளவு பார்த்து வீடு கட்டினாலுமே ஏதாவது வசதிக் குறைவு இருக்கும். வாடகை வீட்டில் எல்லா வசதியும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமே யில்லை.

என் சிநேகிதி அடிக்கடி வீட்டை மாற்றிக் கொண்டிருப்பாள். அதற்கு அவள் சொல்லும் காரணம் மிகவும் வேடிக்கையாக இருக்கும். பக்கத்து வீட்டில் நாள் முழுவதும் ரேடியோ வைத்தார்களென்றும், சமையல் அறையில் ஆணி அடிக்க முடியவில்லை என்றும் எதிர் வீட்டில் இருமல் நோயாளி என்றும் பல காரணங்களைச் சொல்லுவாள். இவைகளுக்கெல்லாம் கூட வீட்டை மாற்றியும் விடுவாள். புது வீட்டுக்குப் போய் ஒரு மாதம் வரையில் அதைப் பற்றிப் புகழ்ந்து கொண்டும் அதற்கு முன் இருந்த வீட்டை இகழ்ந்து கொண்டும் இருப்பாள். இரண்டாந்தடவை மாறும்போது குற்றம் சொல்லுவது மட்டுமல்ல, பழைய வீடே நன்றாக இருந்ததென்றும் சொல்ல ஆரம்பித்து விடுவாள். பாவம், அவள் கணவருக்கு ஆயுளில் பாதிநாள் வீடுதேடுவதிலேயே கழிந்து விடும்! இப்படி அடிக்கடி வீடு மாற்றுவதில் ஏற்படும் சிரமம், அவகாசம், பொருள் செலவு, எல்லாவற்றையுமே தவிர்த்து விடலாமல்லவா?



நம் வீட்டுக்கு நாலு பேர்கள் வந்தால் ஆளுக்கு ஒன்று சொல்லி மனத்தைக் கலைப்பார்கள். 'வாடகை அதிகம். வெளிச்சம் போதாது. காற்றே இல்லை.' இப்படிச் சொல்பவர்களும் உண்டு. சிலர் நீங்கள் கொடுக்கும் வாடகைக்கு நன்றாகவே இருக்கிறதென்றும் சொல்வார்கள். பிறருடைய அபிப்பிராயத்துக்கெல்லாம் நம் மனத்தை குழப்பிக் கொள்வது மிகவும் தவறு. வாழ்க்கையில் நமக்குத் தேவையை யோசித்து நாமே சரியான முடிவுக்கு வருவது, அல்லது பெரியவர்களின் தகுதியான பழக்கத்தை அநுசரிப்பது இவைகள் தான் சரியான பாதை.

மேல் நாட்டாரிடம் ஒரு நல்ல பழக்கம் உண்டு. ஒரு மாதம் ஒரு வீட்டில் இருந்தால் கூட அதை அழகாக வைத்துக் கொள்வார்கள்.

'இந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் மாதம் பிறந்தால் கலை கலையாய் வாடகையை வாங்கிக்கொண்டு போவதிலேயே கண்ணாயிருக்கிறார்கள். ஆனால் வீட்டில் கூடத்தில் சுவரிலிருந்து காரை பெயர்ந்து விழுகிறது. ஆயிரம் தடவைகள் கால் கடுக்கப் போய்ச் சொல்லியும் கவனிக்கவில்லை' என்று குடியிருப்பவர்கள் முணுமுணுப்பார்கள். ஆனால் வீட்டுச் சொந்தக்காரர்களோ, 'இந்த வீட்டில் குடியிருப்பவர்கள் வீட்டைத் துவம்சம் செய்து விடுகிறார்கள். கண்ட கண்ட இடங்களிலெல்லாம் ஆணிகளை யடித்தால் சுவர் நாசமாகாமல் என்ன செய்யும்?' என்று குறைப்பட்டுக் கொள்வார்கள்.

அநேகமாக வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் வாடகைக்கு இருப்பவர்களுக்கும் சுமுகமான உறவு இருப்பதில்லை. நகரங்களில் சிலர் வீட்டை வாடகைக்கு விடுபவர்கள் 'பகடி' வாங்குவது போன்ற பழக்கங்கள் வைத்துக் கொண்டிருப்பதால் வீட்டுச் சொந்தக்காரர்களிடம் ஒரு கசப்பு ஏற்படுகிறது. நாளடைவில் இந்த வழக்கம் மாறினால் மக்கள் அந்தத் துறையிலும் பண்பட்டு வருகிறார்களென்று மகிழ்ச்சி அடையலாம்.

எனக்குத் தெரிந்த ஒரு வீட்டில் வீட்டின் சொந்தக்கார அம்மாள், வாடகைக்கு இருக்கும் அம்மாள் இருவருக்கும் சண்டை வந்து விட்டது. இருவரும் எனக்குத் தெரிந்தவர்கள். தனித் தனியாகப் பார்த்தால் இருவருமே நல்லவர்கள் தான். வாடகைக்கு இருக்கும் அம்மாள் தூங்கும்போது குறட்டை விடுவது தவறு என்று வீட்டுக்கார அம்மாளுடைய கட்சி. வீட்டுக்கார அம்மாள் தன்னையே நாள்முழுவதும் கவனிப்பதாக வாடகைக்கார அம்மாளின் குற்றச்சாட்டு. சண்டை வரவும், கோபம் வரவும் தகுந்த காரணமே அவசியமில்லை. ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுப்பதில் நிலைமையை எவ்வளவோ அழகாக மாற்றி விடலாமல்லவா!

பெரும்பாலும் வீட்டில் பெண்கள் இருப்பதால் வசதிகளைப் பற்றிக் குற்றம், குறைகளை அவர்கள் தான் சொல்லுவார்கள். இக்கரைக்கு அக்கரை பச்சையென்று சஞ்சலப்படாமல் பெண்கள் வாடகை வீட்டிலும் சந்தோஷமாக இருப்பதற்கு முயற்சி செய்யலாமல்லவா?

இப்படிக்கு,
பூமாதேவி


புதுமை பெறுக!
இதம் பெறுக! நளினமாய் இருங்கள்!
நாள்முழுதும்!
சிறந்த, இன்பகரமான மண முள்ள சார்மிஸ் டால்கம் பவுடரால் ஏற்படும் உணர்ச்சிகள் இவை. குளித்தபின் மேனிமுழுதும் சார்மிஸ் டால்கம்பவுடரைத்தூவுக. எத்தகைய புதுமை, குளுமை - தெய்வீகக்குளுமை ஏற்படுகிறது! அரிப்பு வராமல் அதன்பட்டுப் படலம் பாதுகாக்கிறது. சிக்கனமான. அத்யாவசியப் பொருள் சார்மிஸ் டால்கம் பவுடர். இன்பம், அழகின் இரகசியம் அது.
CHARMIS
சார்மிஸ்
டால்கம்பவுடர்
மிகவும்
சிறந்த இன்ப மணமுள்ளது
கால்கேட் சார்மிஸ் வாசனைத்திரவியங்கள் சகல-உபயோககிரீமும் ஸ்னோவும் உள்ளன-எல்லாவித சருமங்களுக்கும் ஏற்ற இரு பிரபல வதன கிரீம்கள்.





“ மணக்கும் பூவே! உன் தேனைக் குடித்து நாங்கள் சுகமாக வாழ்கிறோம். இந்தத் தித்திக்கும் தேனை உண்டாக்க நீ எப்படிக் கற்றாய்?” என்றது தேனீ.

“நீங்கள் எங்கள் தேனைக் குடிப்பதனால் எங்களுக்கு அளவற்ற சந்தோஷம்” என்றது பூச்செடி.

“நாங்கள் குடிக்கிறோம் உன் தேனை. உனக்கு என்ன அதில் லாபம்?” என்றது தேனீ.

“உங்களையும் அறியாமல் நீங்கள் எங்களுக்குத் தொண்டு செய்கிறீர்கள்” என்றது செடி.

“ரகசியத்தைச் சொல்வாயா?” என்றது தேனீ.

“சொன்னால் தேனைக் குடிக்காமல் போய் விடுவீர்கள். அப்புறம் நாங்கள் கஷ்டப்படுவோம்” என்றது செடி.

“சொல்லுவாயா, சொல்ல மாட்டாயா?” என்று தேனீ கொஞ்சிக் கேட்டது.

“சொல்லுகிறேன், கேள். நீ யாருக்கும் சொல்லக் கூடாது. ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டியது” என்றது செடி.

“அப்படியே ஆகட்டும்” என்றது தேனீ.

“பூவுக்கும் பூவுக்கும் நீங்கள் கலியாணம் செய்விக்கிறீர்கள். அதனால் சூல் கொண்டு, பூவெல்லாம் காயாகிப் பழுத்து, விதை முற்றி, நாங்கள் சந்தானம் பெறுகிறோம். உங்களுக்குத் தெரியாமல் உங்களால் நாங்கள் விருத்தியடைகிறோம்” என்றது செடி.

தேனீ மிக வியந்தது. “நாழி ஆயிற்று. நான் வீடு போய்ச் சேர வேண்டும். நேரமானால் அம்மா கோபித்துக் கொள்வாள்” என்றது தேனீ.





பூவும் பூச்சியும் புழுவும்

"வழி தெரியுமா? எங்கெங்கேயோ போய்ப் பூவிலிருந்து பூவுக்குப் பறந்து வந்திருக்கிறாய்" என்றது செடி.

"வழியா? வழி என்றால் என்ன? இங்கிருந்து நான் கிளம்பியதும் 'விர்' என்று இழுத்துக் கொள்கிறாள் எங்கள் தாய். நேராக வீடு போய்ச் சேருவோம்" என்றது தேனீ.

செடி ஆச்சரியப் பட்டது. "எனக்கும் சிறகு இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று எண்ணிற்று.

"பைத்தியமே!" என்றது செடியிலிருந்த குருவி. 'நீ இங்குமங்கும் பறந்தாயானால் நான் எங்கே உட்காருவது?"

"நல்ல குருவியே, ஒரு புழு என்னைத் தொந்தரவு செய்கிறது. என் தினவு பொறுக்க முடியவில்லை. அதைக் கொத்திக்கொண்டு போ, உன் குஞ்சுக்கு" என்றது செடி.

அப்படியே குருவியும் செய்தது.

இதற்குள் தோட்டக்காரன் வந்து செடிக்குத் தண்ணீர் வார்த்தான்.

"இவன் இருப்பதால் அல்லவோ தாகத்தில் செத்துப் போகாமல் நான் பிழைத்தேன்" என்றது செடி. ஆனால் தோட்டக்காரனுக்குச் செடியின் பாஷை தெரியாது. அவன் சும்மா தண்ணீர் விட்டுக்கொண்டே போனான்.

"பாவம்! இவன் வாழ்க்கை கஷ்டம்!" என்று பரிதாபப் பட்டது செடி.

அதற்குள் தோட்டக்காரனுடைய சிறு மகன் ஓடி வந்து. "அப்பா! நான் தண்ணீர் உகுத்துகிறேன்!" என்று சொல்லித் தகப்பன் கையிலிருந்த குடத்தைக் கொடுக்கச் சொன்னான்.

"உன்னால் தூக்க முடியாது" என்று அவன் சொல்ல, சிறுவன் அழ ஆரம்பித்தான்.


தோட்டக்காரன் ஒரு சின்னச் சொம்பைக் கொடுத்து அதில் நீர் நிறைத்துக் கொடுத்தான். அதை எடுத்து அந்தக் குழந்தையும் செடிகளுக்கு நீர் வார்த்தது. செடிகளுக்கு இது மிக மகிழ்ச்சி தந்தது. சிறு கைகளிலிருந்து விழும் தண்ணீரே செடிகளுக்கு மிகப் பிரியம்.

ராஜாஜி




உற்சாகம் செழித்திருக்க
புது சக்தியை அளிக்கும்
பை-கோலேட்ஸ்
முறையாக உபயோகியுங்கள்
ஊக்கமூட்டுவதில் மிகச் சிறந்தது
கெடுக்க முடியாத புது சீலுடன்


பெர்ல் பிராண்ட்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்
உத்தரவாதத்துடன் கூடிய பெர்ல் பிராண்ட் ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் மிக உயர்ந்த ரகத்தைச் சார்ந்தவை. சிறந்த வேலைப்பாடுடன் நேர்த்தியான அமைப்பும் கண்ணாடி போன்று பள பளப்பும் கொண்டவை. அதிக உறுதியும், அந்தஸ்தும் கொண்ட இப் பாத்திரங்கள் ஆயுட்காலம் வரை நீடித்து உழைக்கக் கூடியவை. விலையும் குறைவு.
உங்களது உள்ளூர் வியாபாரியிடம் கேளுங்கள் அல்லது எங்களுக்கு நேரிட எழுதுங்கள்.
எல்லா கடிதங்களையும் ஆங்கிலத்தில் எழுதவும்
WRITE FOR PARTICULARS
Pearl Metal Works
20 WADI BUNDER ROAD.
MAZGAON. BOMBAY 10.
பெர்ல் மெட்டல் ஒர்க்ஸ், 20, வாடி பந்தர் ரோடு, மஸகான், பம்பாய் - 10


PARKSONS
PLAYING CARDS
சிறந்தவை
பார்க்ஸன்ஸ் சீட்டுக் கட்டுகளால் விளையாடுவதே ஓர் அலாதி ஆனந்தம்.
ஏனெனில் பல ஆட்டங்கள் விளையாடினும், வழவழப்பாகவும் புதுமை குன்றாமலும், இருப்பதோடு சுகமாகவும் இருக்கிறது.
பார்க்ஸன்ஸ் பிரிண்டர்ஸ்
சேக்சரியா சேம்பர்ஸ், 139, மேடோ தெரு, பம்பாய்-1
PARKSONS



நிர்மலாவின் கேள்வி சொக்கனைக் கணநேரம் திகைக்க வைத்தது. தோட்டத்தில் தன்னோடு பேசிக் கொண்டிருந்தவள் அஞ்சுகம் என்பதை நிர்மலா அறிந்து கொண்டிருப்பாளோ என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டது. அவன் தன் மனத்திலிருந்த குழப்பத்தைக் காட்டிக் கொள்ளாமல் சிரித்துக் கொண்டே, ''யாரோ குறப் பெண். ஏதோ பிச்சை கேட்டாள். இல்லை என்றேன். அவர்கள் சாதாரணமாக விடுவார்களா? அவளை வெளியே அனுப்பப் பட்டபாடு பெரும் பாடாய்ப் போய் விட்டது...'' என்றான்.

''நான் மாடி ஜன்னல் வழியாகப் பார்த்தேன். குறத்தி என்று எனக்குத் தெரிந்தது. ஆனால் அவள் அவ்வளவு நெருங்கி வந்து நின்று, உங்களிடம் பேசினாளே, அதனால் கேட்டேன்...!'' என்றாள் நிர்மலா.

''தங்கராஜா, செல்லராஜா, தர்மராஜா என்றெல்லாம் என்னைத் தொட்டுத் தொட்டுப் பேசக்கூட வந்து விட்டாள். அப்பா! இந்தக் குறப் பெண்களிடம் சிக்கிக் கொண்டுவிட்டால் அவர்களிடமிருந்து மீண்டு வருவதே ரொம்பக் கடினம்'' என்றான்.

''ஆமாம்! அவர்களை நம்பவேகூடாது. நெருங்க விடவே கூடாது. திருடுவதிலும் கைகாரிகள்... அது போய்த் தொலையட்டும். ஒரு முக்கியமான விஷயம். என்னுடைய அறைக்கு வருகிறீர்களா...?'' என்றாள் நிர்மலா.

சொக்கன் அவள் வார்த்தைக்கு இணங்கியவன் போல் அவளைப் பின் தொடர்ந்தான். நிர்மலா தன் அறைக்குச் சென்றதும் அங்குமேஜைமீது இருந்த கடிதம் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு மேஜை விளிம்பில் அரைகுறையாக உட்கார்ந்த வண்ணமே கூறினாள். ''இது ஒரு முக்கியமான விஷயம். இதை மறந்து விட வேண்டாம். உங்களுடைய புதிய வாழ்க்கை நாடகத்திலேயே ஒரு முடிவான கட்டம் நெருங்கியிருக்கிறது. நீங்கள் இந்தச் சமயத்தில் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யத் தவறி விட்டீர்களானால் இது வரையில் செய்த முயற்சிகளெல்லாம் பாழாகி விடும். இந்நிலைமை நீடிக்காது. நீங்கள் அடைய வேண்டியதையும் அடைய மாட்டீர்கள். அதற்குப் பதில் ஆபத்துத்தான் வரும்...'' என்றாள் அவள் எச்சரிக்கை செய்வது போன்ற உறுதியான குரலில். நிர்மலாவின் இந்தப் பீடிகை சொக்கனின் மனத்தில் எதிர்பாராத வண்ணம் பெரும் பயத்தை உண்டாக்கியது.

''நீ சொல்லுவது எனக்கொன்றும் புரியவில்லையே...?'' என்றான் சொக்கன் நடுக்கத்தோடு கூடிய குரலில்.

நிர்மலா தன் கையிலிருந்த கடிதத்தை அவனிடம் கொடுத்து, ''இதைப் படித்துப் பாருங்கள். எல்லாம் புரிந்து விடும்'' என்றாள். அவன் பரபரப்போடு அந்தக் கடிதத்தைப் பார்த்தான்.

அபலை அஞ்சுகம்

12ம். கதைவசனமெல்லாம் கையிலே



கி.ரா.கோபாலன்



யான விஜயரங்கன். அவன் இங்கு வரப் போகிறானா? நாம் என்ன செய்வோம்?'' என்றான் சொக்கன் பீதி நிறைந்த குரலில்.

''முதலில் அந்தக் கடிதத்தைச் சரியாகப் படியுங்கள். அவன் எங்கெங்கோ பல ஊர்கள் சுற்றினானாம். இப்பொழுதுதான் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டுமென்று ஆவல் ஏற்பட்டிருக்கிறதாம். அவன் இங்கு வரப்போகிறானாம். இந்தக் கடிதத்தை அந்தக் கிழவி பார்க்கவில்லை. அவளுக்கு இதை நான் காட்டினால்தானே? அவன் கல்கத்தாவிலிருந்து எப்பொழுது புறப்படுகிறேன் என்பதற்கு மறுபடியும் கடிதம் எழுதுவதாக எழுதி இருக்கிறான். அது நாம் முன்னெச்சரிக்கையாகச் சில காரியங்கள் செய்வதற்கு அனுகூலமாக இருக்கிறது. அவன் இங்கு வருவதற்குள் நாம் பல காரியங்களைச் செய்ய அவனுடைய திட்டங்களே நமக்குப் பல விதத்திலும் சாதகமா யிருக்கின்றன. அவன் இங்கு வருவதற்கு முன்னால் தேவிப்பட்டினத்தில் இரண்டு நாட்கள் தங்கித் தன்னுடைய பழைய நண்பர்களை எல்லாம் சந்தித்து விட்டுத்தான் வரப்போகிறான். எல்லாவற்றுக்கும் அடிக்கடி தன் பெரியம்மாவுக்குக் கடிதம் எழுதுவதாக எழுதி இருககிறான். அவன் ஒவ்வொரு சமயமும் தான் தங்கும் இடத்து விலாசத்தை எழுதுவதாகவும் அதில் எழுதி இருக்கிறான்'' என்றான் நிர்மலா சிறிது கூடப் பதட்டமில்லாமல்.

ஆனால் சொக்கனின் நிலைமை அவள் நிலைக்கு ஒத்ததாக இல்லை. அவன் மனத்திலிருந்த சிறிது தைரியமும் தளர்ந்து விட்டது. அவன் மூளை குழம்பியவன் போல் மிரள மிரள விழித்துக் கொண்டு நின்றான். மெதுவாகக் கையிலிருந்த கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான். படித்து முடித்த



அது கல்கத்தாவிலிருந்து யாராலோ எழுதப் பட்டது என்று ஆரம்பத்தில் தெரிந்தது. கடிதத்தின் அடியில் 'விஜயரங்கன்' என்று போடப்பட்டிருந்த கையெழுத்தைப் பார்த்தவுடன் ஏதோ திகைப் பூண்டை மிதித்தவன் போல் நின்று விட்டான். தடுமாற்றத்துடன் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வந்தன. ''இது விஜயரங்கன் எழுதிய கடிதம். உண்மை

தும் சொக்கன்,'' அவன் கல்கத்தாவை விட்டு இன்று புறப்படுகிறேன் என்றல்லவா எழுதி இருக்கிறான். அவன் இன்னும் இரண்டு தினங்களில் தேவிப்பட்டினத்துக்கு வந்து விடுவான். இதற்கென்ன வழி செய்வது என்றுதான் எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் இந்தப் பெரும் சங்கடத்தில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டாம்'' என்றான் மனம் தளர்ந்தவனாக.

நிர்மலா ஏளனமாகச் சிரித்துக் கொண்டே, ''என்ன செய்வது? அது தான் உங்கள் சாமர்த்தியம். ஒரே சமயத்தில் இரண்டு விஜயரங்கன் இருக்க முடியாதல்லவா?'' என்றாள்.

''முடியாது. அது எப்படி முடியும்? நான் அடைந்த சுகமும் லாபமும் இதோடு போதும். நான் எங்கேயாவது ஓடிப் போய் விடுகிறேன். இதைத் தவிர வேறு வழி ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை'' என்றான் சொக்கன் நடுக்கத்தோடு.

'நெஞ்சில் துணிச்சலும் தைரியமும் இருந்தால் சரியான வழி புலப்படும். ஏதோ ஒரு காரியத்தில் இறங்கி விட்டு இடையே பயந்து கொண்டு ஓடி விடுகிறேன் என்று சொல்வது சரியான ஆண் பிள்ளைக்கு அழகல்ல. எப்படியாவது அந்த விஜயரங்கன் இங்கு வந்து சேருவதற்கு முன்னால் அவனைச் சாமர்த்தியமாகத் தீர்த்துக் கட்டுவதற்கு உங்களால் முடியாதா?'' என்று கேட்டாள் நிர்மலா.



இதைக் கேட்டதும் சொக்கன் பதறிப் போய் விட்டான். ''அவனைத் தீர்த்துக் கட்டுவதா? என்னைக் கொலை செய்யச் சொல்கிறாயா? அதுதான் முடியாது.

காந்தி வாக்கு:

ஆடும் சிங்கமும்

ஒரு சமயம் ஓர் இந்தியப் பத்திரிகையின் பிரதிநிதி காந்தி மகானை நாகபுரியில் சந்தித்துப் பின்வருமாறு கேட்டார்:

"ஒரு வருஷத்துக்குள் சுதந்திரம் கிடைத்து விட்டால் பிரிட்டனின் நிலை என்னவாகும்?"

"சிங்கம், ஆட்டின் பக்கத்தில் வந்து அமைதியாகப் படுத்துக் கொள்ளும்!" என்றார் காந்தி மகாத்மா.

நான் திருடன்தான். ஆனால் கொலைகாரனாக மாட்டேன்" என்றான் அவன் தீர்மானமான குரலில்.

இதைக் கேட்டதும் நிர்மலாவுக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வந்தன. உதட்டைக் கடித்துக் கொண்டே கண்களை உருட்டி விழித்தாள். சொக்கனின் பயந்தாங்கொள்ளித்தனத்தினால் தன்னுடைய திட்டங்களெல்லாம் நாசமாகித் தானும் ஆபத்தில் சிக்க நேருமோ என்று அஞ்சினாள். அவளுடைய உடல் நரம்புகள் உணர்ச்சிப் பெருக்கினால் கடினமுடைய இரும்பு போல் இருந்தன. அவள் இதையே இல்லாதவள் போல்தான் அப்பொழுது காட்சியளித்தாள். ஆனால் அவளுடைய கோபத்துக்கும் ஆத்திரத்துக்கும் சொக்கன் இணங்கக் கூடிய நிலையில் இல்லை என்பதை அவனுடைய கண்களே அவளுக்கு நன்கு விளக்கி விட்டன. அவனைத் தன் வசப்படுத்த வேண்டுமானால் கோபத்தைவிட மோகத்தை யூட்டும் நடிப்புத்தான் பயனளிக்கும் என்பதை அவள் எளிதில் உணர்ந்து கொண்டாள். அவள் சட்டென்று தன் முகத்திலிருந்த கோபக் குறியை மறைத்துக் கொண்டு இனிய புன்னகையோடும் ஆர்வத்தோடும் அவனை நெருங்கித் தன் கயல் விழிகளை உருட்டி விழித்தாள். அவள் தனக்கிருந்த பெண்மையின் வசீகர வனப்பு முழுவதையும் காட்டி அந்த அழகு வாகிரியில் அவனை மயக்கிவிட நினைத்தாள்.


நிர்மலாவின் இத்தகைய செய்கையினால் சொக்கன் சிறிது மதிமயக்கம் அடைந்தான். நிர்மலாவின் காந்த சக்தி போன்ற பார்வை கணத்தில் அவனை உணர்ச்சி வசத்தில் ஆழ்த்திவிட்டது. அவள் கொஞ்சுதலும் கெஞ்சுதலும் நிறைந்த குரலில், "நீங்கள் எனக்காகத் தயவு செய்து நான் சொல்வதைக் கேட்கக் கூடாதா...?" என்றாள்.

சொக்கன் அப்பொழுதுதான் சுய உணர்வோடு சிந்திக்கத் தொடங்கினான். 'நான் எத்தகைய மோச நடவடிக்கைகளுக்கு இணங்கிச் சிக்கிக் கொண்டிருக்கிறேன். நிர்மலா என்னை எத்தகைய பயங்கரமான காரியங்களெல்லாம் செய்யத் தூண்டுகிறாள். இவைகளிலிருந்தெல்லாம் தப்புவது எளிதா?' என்பதைப் பற்றி அவன் யோசிக்கத் தொடங்கினான். ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்ததும், அவன் உடல் நடுங்கியது. அவன் தாழ்ந்த குரலில் கெஞ்சுவதுபோல், "நிர்மலா! அது என்னால் முடியாது. நான் வேறு எதைச் செய்ய வேண்டுமானாலும் செய்கிறேன். ஆனால் ஒருவரையும் கொலை செய்ய மாட்டேன். விஜயரங்கன் இங்கு வந்து விட்டால் என்ன செய்வது என்பதை நாம் யோசிக்க வேண்டியதுதான். அதற்காக நான் எத்தகைய கொலைகாரத்தனத்துக்கும் உடன்பட மாட்டேன்" என்று கூறினான்.

நிர்மலா அவனைத் தன் அபிப்பிராயத்துக்கு இணங்க வைக்க முடியாது என்பதை உணர்ந்தாள். அப்பொழுது அவள் மனத்தில் கோபமும் ஆத்திரமும் பொங்கி வந்தன. ஆனால் அதை அவள் வெளியே காட்டிக் கொள்ளாமல் தன்னுடைய சாதுர்யமான நடிப்பினால் அடக்கிக் கொண்டாள். அவன் தன்னுடைய வார்த்தைகளுக்கு இணங்காத காரணத்தினால் அவனை எளிதில் விட்டு விடும் நோக்கம் அவளுக்கு இல்லை. அவன் இல்லாவிட்டால் அவள் போட்ட திட்டங்கள் எப்படி நிறைவேறும்? அவளுடைய முக்கிய லட்சியமே விஜயரங்கனைப் போல் உருவத்தில் ஒத்தவனாக இருக்கும் சொக்கனை வைத்துக்கொண்டு பார்வதி அம்மாளின் அளவற்ற சொத்துக்களை அடைந்து விட வேண்டுமென்பதுதானே? அவள் மிக இனிமையாகவும், காதல் உணர்ச்சியோடும் அவனோடு பேசினாள்.

"ரொம்ப சரி! நீங்கள் அப்படிப்பட்ட காரியம் எதுவும் செய்ய வேண்டாம். இதற்கு வேறு ஏதேனும் சுலபமான வழி உண்டா என்று யோசிப்போம். உங்களை முதன் முதலில் பார்த்த போது உங்கள் மேல் எனக்கு விழுந்த அன்புதான் என்னை இவ்வளவு காரியங்களும் செய்யும்படியாகத் தூண்டியது. எல்லாவற்றையும் விட உங்களைக் காப்பாற்றுவதுதான் என் முதல் கடமை. இதயபூர்வமாக நேசிக்கும் ஒருவருக்குக் கெடுதல் ஏற்படும்படி நான் செய்வேனா? உங்களைப் பிரிந்து நான் எப்படி உயிர் வாழ முடியும்? இதை நீங்கள் யோசித்தீர்களா....?" என்றாள் நிர்மலா.

உங்கள் கார்களுக்கு மார்பக் லூபிரிடெக்ஷன் வழங்கினால்




உங்களுக்கு ஆகாயத்தில் மிதந்து செல்லுவது போல் தோன்றும்

MARFAK
Lubritection

மார்பக் உபயோகிக்க ஆரம்பித்தால், 1000 மைல்கள் ஓட்டத்திற்குப் பின்பும், புறப்படும் பொழுது இருந்த அதே சவாரி சுகத்தையும், ஓட்டுமின்பத்தையும் அனுபவிக்கலாம். ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கள் சுகமான ஓட்டத்தை அளிப்பதற்கென்றே பிரத்தியேகமாக மார்பக் தயாரிக்கப்பட்டுள்ளது. மார்பக் வழிந்து ஓடவோ, இறுகி வெளிவரவோ, ததும்பவோ செய்யாது; கால்டெக்ஸ் ஸர்வீஸ் ஸ்டேஷன்களில், இதன் அளவு உத்தேசமாக நிர்ணயிக்கப்படாமல், குறிப்பிட்ட அட்டவணைப்படி வழங்கப்படும். உங்கள் காருக்கு இப்பொழுதே "மார்பக் உணர்ச்சி" ஊட்டுங்கள்

கால்டெக்ஸ் பெட்ரோலியம் பிராடக்ட்ஸ்

H 54


நரஸூ காபி
அருந்தி அதன்
பிரத்யேகமான
ருசியை
அனுபவியுங்கள்
நரஸுஸ்
மான்யுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.
சேலம் & சென்னை
NCZ-22 A-TM


கோடைகாலத்தில் நீலகிரியின்
குளுமையை உங்கள்
வாசஸ்தலத்திலேயே அடையுங்கள்
டி.எஸ்.ஆர்
சந்தனாதி, அரைக்கீரை விதை
பிருங்காமலகா தைலங்கள்.
டி.எஸ்.ஆர் & கோ. கும்பகோணம்.

சொக்கனுக்குத் தான் ஒரு பெரிய சிக்கலிலிருந்து மீண்ட உணர்ச்சி அப்பொழுது ஏற்பட்டது. ஏனென்றால், இத்தகைய அபூர்வமான பேரழகியின் காதல் வலையில் சிக்கிய அவன் அவளுடைய வற்புறுத்தலினால் ஒருவரைக் கொலை செய்ய வேண்டுமென்ற விருப்பத்துக்குக் கூட இணங்க வேண்டிய நிலைமையில் அல்லவா இருந்தான்? ஒரு கொலையாளி தெய்வாதீனமாகத் தூக்கு மேடையிலிருந்து தப்பியதுபோன்ற மன ஆறுதலும் நிம்மதியும்தான் அப்பொழுது அவனுக்கு ஏற்பட்டன.

"நிர்மலா! இதற்கு வேறு வழியே இல்லையா..? யோசித்தோமானால் வேறு ஏதாவது தந்திரமான வழிகள் புலப்படும். இந்தச்சொத்துக்கள் நம்வசமாகி விட்டால் நாம் இந்த இடத்தில் கண நேரம் கூடத் தரிக்க வேண்டாம். நாம் சந்தோஷமாக வாழுவதற்கு வழி எதுவோ அதைச் செய்வோம். பணத்தோடு சென்னைக்குச் செல்வோம். சொக்கன் ஸ்டுடியோ என்று ஒரு பெரிய சினிமா ஸ்டுடியோவை ஏற்படுத்துவோம். அதில் நிர்மலா புரொடக்ஷன் என்ற பெயரில் படம் எடுக்க ஆரம்பித்து விடுவோம். ஆனால் நாம் ஒரு கொலைக் குற்றம் செய்ய யோசித்தோமானால் நம்முடைய வருங்கால இன்ப வாழ்க்கையைப் பற்றிக் கனவு காணக்கூட யோக்கியதை இல்லை. கொலைக் குற்றம் இப்பொழுது நாம் வாழும் சாதாரண வாழ்வைக் கூடக் குலைத்து விடும்!" என்றான்.



நிர்மலா சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவளுடைய ஆழ்ந்த கண்பார்வையில் கபட விஷம் மறைந்திருந்தது. அவள் சொக்கனைப் புரிந்து கொண்டும் விட்டாள். அவள் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தாள்! எந்தக் காரியத்தையும் சாமர்த்தியமாகவும் வெற்றிகரமாகவும் செய்து முடிக்க வேண்டுமானால் அதைத் தன்னுடைய சொந்த முயற்சியினாலேயேதான் செய்து முடிக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டாள் நிர்மலா.

சொக்கனை ஏதேனும் ஒரு காரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் தான் அவளுக்கு. சொக்கன் ஏராளமாக அடையப் போகும் செல்வத்தில் தனக்கொரு பங்கு, அவனுக்கொரு பங்கு என்ற கொள்கைகளெல்லாம் அவளுக்கு இல்லை. சொக்கன் அவளுடைய கைப்பொம்மையாக இருந்து ஏராளமான சொத்தை அடையப் போகிறானே தவிர தன்னுடைய சொந்த முயற்சியாலா அடையப் போகிறான்? அந்தச் செல்வத்தில் அவள் மனம் இறங்கி ஏதாவது கொடுத்தால் தான் உண்டு. பார்வதியம்மாளின் செல்வத்தில் பைசாவைக் கூடப் பிறருக்கு அளிக்க அவள் தயாராயில்லை. சொக்கனைத் தன் வாழ்க்கையோடு பிணைத்துக் கொள்ளும் அபிப்பிராயமும் அவளுக்கு இல்லை. அப்பொழுது அவள் கைப்பொம்மையாக ஆட ஒரு மனிதன் வேண்டும். அவ்வளவுதான். காதல், மோகம், ஆசை, அன்பு, பாசம், எல்லாம் அவள் மனத்தில் வேரில்லாது படர்ந்து கவிந்திருக்கும் மாயக் கொடி போலத்தான். அவள் தயாரித்திருக்கும் வஞ்சனை நாடகத்தில் அவள்தானே பிரதான கதா நாயகி? அவள், தான் நடிக்க வேண்டியபாகங்களைத் திறம்பட நடித்துக் கொண்டிருந்தாள்.

"சரி! எல்லாவற்றையும் நீங்கள் மறந்து விடுங்கள். அதற்கான காரியங்களை நானே பார்த்துக் கொள்கிறேன்" என்றாள்.

அவள் முகக் குறிகள் மாறிச் சாதாரணமாக உள்ள அழகி நிர்மலாவாகத் தான் அப்பொழுது காணப்பட்டாள்.

அடிக்கடி மாறும் முகத் தோற்றங்களாலும் சாகச நடிப்புக்களாலும் மதி மயக்கமும், கலக்கமும் அடைந்திருந்த சொக்கன், "எனக்குத் தெரியும், நீ சாமர்த்தியமான வழி ஏதேனும் யோசனையில் வைத்திருப்பாய் என்று. இந்த உலகமல்ல, இன்னும் எத்தனை உலகங்களில் போய்த் தேடித் தேடிப் பார்த்தாலும் உன்னைப் போன்ற அதிசயமான பெண்ணைப் பார்ப்பதே அரிது. உன்னைப் போன்ற அழகும், படிப்பும், சாமர்த்தியமும், புத்திசாலித்தனமும் நிறைந்த பெண்தான் இன்றையச் சினிமா உலகுக்குத் தேவை. நீ சினிமா உலகில் புகும் போதுதான் அந்தக் கலை பிழைக்கும். உலகம் ஆறுதல் அடையப் போகிறது. வம்சவாரியாக எவ்வித நல்ல காரியத்

துக்கும் பயன்படாது கிடக்கும் பார்வதி யம்மாளின் ஏராளமான செல்வமெல்லாம் படவுலகுக்காகப் பயன்படப் போவது கண்டு உலகமே பெரு மகிழ்ச்சி கொண்டு பல காலம் உன்னை மனதார வாழ்த்தப் போகிறது. பார்க்குமிடம், நோக்குமிடம் எல்லாம் உன் பகட்டான அழகு முகம் படமாகக் காட்சிதரப் போகிறது. வீட்டுக்கு வீடு உன்னைப் பற்றிய பேச்சாகவே நிகழப் போகிறது..'' என்றான் அளவற்ற உணர்ச்சிப் பெருக்கோடு.

நிர்மலா விஷமமாகச் சிரித்துக் கொண்டே, ''சாதாரணமாகப் பேசும் போதே இப்படிச் சினிமாவில் பேசுவது போல் அழகாகப் பேசுகிறீர்களே! அசல் சினிமா வென்றால் எப்படி எப்படி யெல்லாம் பேசி என் மனத்தை வாதனையடையச் செய்யப் போகிறீர்களோ....? அதிருக்கட்டும்! உங்கள் முதல் படத்துக்குக் கதை தயார் செய்து விட்டீர்களா..?'' என்றாள்.

''முதல் படத்துக்கா கதை..? பத்துப் படங்களுக்குக் கதை வசனம் எல்லாம் தயாராகக்கையிலே இருக்கின்றன. என்னுடைய முதல் கதையின் பெயர் 'இறந்தவன் செத்தான்.' இரண்டாவது கதைக்கு 'ஓடிப் போ' என்று பெயர் வைப்பதா அல்லது 'அங்கேயே நில்' என்று பெயர் வைப்பதா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். என் முதல் படத்தில் கதாநாயகன் பேசும் முதல் வசனமே இதுதான். தமிழில் முதல் எழுத்து அ: அதில் பிடித்தேன். அதிலேயே அடுக்கடுக்காக அடுக்கி விடுவது என்று தீர்மானம் செய்து விட்டேன். நான்தானே கதாநாயகன். கொஞ்சம் பேசுகிறேன் கேள். 'அஞ்சுகம் அடடா! உன் அழகே அழகு. அமர உலகத்து அரம்பையரும் உன் அடியில் விழுந்து வணங்கி அருந்தவம் செய்தாலும் உன் அழகில் அணுவேனும் அடைவார்களா? அந்தரத்தில் நின்றாடும் அழகு சுந்தரியே! அவந்தி நகரத்து அழகியே! இதோடு 'அ' வசனம்முடிந்து விட்டது. ஆவன்னாவை எடுத்துக்கொண்டேன். அப்புறம், 'ஆட்டத்தில் சிறந்த ஆரணங்கே. ஆழ்கடலில் அன்று வந்த ஆரமுதே. ஆண்களெல்லாம் தோல்வியுறும் ஆற்றல் கொண்டாய்..இப்படி அதற்கப்புறம் 'இ' ......''

''போதும். 'இ'க்கு அப்புறம் 'ஈ' 'உ' இப்படித்தானே வரும். நல்ல ஏற்பாடு. படத்துக்குக் கதையை விட வசனம்தான் முக்கியம். எனக்குக் கதாநாயகியின் பெயர் அஞ்சுகம் என்று வைத்திருப்பது தான் பிடிக்க வில்லை. உங்களுக்கு இன்னும் அந்தத் திருடியின் பேரில்தானே மோகம் இருக்கிறது?''

''அவள் மீது எனக்கு மோகமில்லை. அவள் பெயர் 'அ'வில் ஆரம்பமானது தான் ஆபத்தாகப் போய் விட்டது. போனால் போகிறது! கதாநாயகியின் பெயரை அகிலம், அம்புஜம், அமிர்தம் இப்படி மாற்றிக் கொள்ளலாம்..''

''சரி! ஏதாவது செய்து கொள்ளலாம். ஆனால் முதலில் படம் எடுப்பதற்கு வேண்டிய பணம் தயாரிப்பது தானே முக்கியம்? மெதுவாக அந்தக் கிழவியை உங்கள் பேரில் சொத்துக்களை எழுதி வைக்கச் செய்து விடவேண்டும். அது அந்தக் கிழவியிடம் நீங்கள் நடந்து கொள்ளும் திறமையில்தான் இருக்கிறது'' என்றாள் நிர்மலா. (தொடரும்)

காந்தி வாக்கு

அன்புப் பரிசு

1915-ம் ஆண்டில் பம்பாயில் காங்கிரஸ் மகாநாடு. அந்தச் சமயம் காந்தி மகானுடன் இருந்த ஆசார்ய காகா கலேல்கர், ஒரு ரஸமான நிகழ்ச்சியைக் கூறுகிறார்.

ஒரு நாள் மிகுந்த பரபரப்புடன் காந்தி மகான் எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

நான், ''பாபு, தாங்கள் என்னத்தைத் தேடுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''ஒரு சிறு பென்ஸில்!'' என்றார். நான் என்னிடமிருந்த ஒரு பென்ஸிலைக் கொடுத்து, ''இப்பொழுது இதை வைத்துக் கொண்டு எழுதுங்கள். பின்னால் உங்கள் பென்ஸிலைத் தேடித் தருகிறேன்'' என்றேன்.

''நான் சொல்லுவது உங்களுக்குப் புரிய வில்லை. அந்தப் பென்ஸிலைக் கெட்டுப் போக்கக் கூடாது. அந்தப் பென்ஸிலைச் சென்னையிலிருக்கும் அந்தப் பிரமுகரின் சின்னஞ்சிறு பையன் எவ்வளவு அன்போடு ஓடி வந்து கொடுத்தான்! அதை எப்படி நான் தொலைக்க முடியும்?'' என்றார் காந்திஜி துயரத்தோடு.

இருவருமாகத் தேடினோம். கடைசியில் அந்தப் பென்ஸில் கிடைத்தது. பிறகுதான் காந்தி மகானுக்கு மனநிம்மதி ஏற்பட்டது.

அந்தப் பென்ஸிலின் நீளம் எவ்வளவு இருந்தது தெரியுமா?—ஒரு அங்குலம்.

[முன் காலத்தில் ராஜாக்கள் மாறுவேஷம் பூண்டு நகரசோதனை செய்வதுண்டு. அதைப் போல் நமது சென்னை முதல் மந்திரியும் மாறு வேடத்தில் புறப்பட்டால் என்ன நிகழும் என்பதைக் கற்பனை செய்து எழுதப்பட்ட ஒரு கட்டுரை. —ஆசிரியர்.]

மாறு வேஷத்தில் மந்திரி!

சாவி



ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை நமது முதன் மந்திரி ஸ்ரீ காமராஜுக்குப் பொழுதே போகவில்லை. அன்று அவருக்கு எவ்வித அலுவலும் இல்லாமல் போகவே என்ன செய்வதென்று யோசித்துப் பார்த்தார். சினிமா, நாடகம், நாட்டியம், கச்சேரி எதற்காவது போகலாம் என்றால் அங்கெல்லாம் முன் அறிவிப்பின்றிச் செல்வது அசந்தர்ப்பமாயிருக்கும் என்று எண்ணினார். அவருக்கு ஒரு யோசனை உதயமாயிற்று. கொஞ்ச தூரம்வரை நடந்தே போய்ப் பிறகு ஒரு பஸ்ஸில் ஏறிக் கடற்கரைக்குச் சென்று காற்று வாங்கிவிட்டு வரலாம் என்பதே அந்தயோசனை. ஆனால் பகிரங்கமாக அம்மாதிரி சென்றால் ஜனங்கள் தம்மைச் சூழ்ந்துகொள்வார்களே என்று அஞ்சினார்.

சில மாதங்களுக்கு முன்னால் சட்ட சபை அங்கத்தினர்களும், மந்திரிமார்களும், கவர்னரும் கூடி மாறு வேஷம் பூண்டு காட்சி அளித்தார்கள் அல்லவா? அதைப் போலத் தாமும் இப்போது ஏன் மாறுவேஷம் தரித்து ஒருவருக்கும் தெரியாமல் ஜனங்களிடையே பழகிவிட்டு வரக்கூடாது என்று எண்ணினார்.

எனவே, வழக்கமாக அணியும் அரைக் கைச் சட்டை, பட்டை மடிப்புத் துண்டு நாலு முழம் வேஷ்டி இவற்றுக்குப் பதிலாக 'ஸூட்டும் ஹாட்டும்' அணிந்துகொண்டார். அவற்றை அணிந்தவுடன் முதன் மந்திரியின் தோற்றமே அடியோடு மாறிவிட்டது! கண்ணாடி முன் போய் நின்று ஒரு தடவை தம்மைத் தாமே பார்த்துக் கொண்டபோது அவருக்கே அடையாளம் தெரியவில்லை! சரி; இனி யாரும் தம்மைக் கண்டுகொள்ள முடியாது என்று தீர்மானித்தவராய்த் தைரியமாக வெளியே கிளம்பினார்.

வெளியே மாறு வேஷத்திலிருந்த முதன் மந்திரியை ஒருவர்கூடத் தெரிந்து கொள்ளவில்லை. வீதிகளிலும் நாற்சந்திகளிலும் நின்ற போலீஸார்கள் முதன் மந்திரியை அடையாளம் தெரியாததால் 'ஸல்யூட்' அடிக்காமலேயே இருந்து விட்டார்கள். முதன் மந்திரி நடைபாதையில் நடக்காமல் சாலை ஓரமாக நடந்து கொண்டிருந்தார். அப்போது எதிரில் ஒரு போலீஸ் லாரி வந்தது. அந்த லாரியிலிருந்து புறப்பட்ட அசரீரிக் குரல், "மிஸ்டர் புல்ஸூட்! உங்களைத்தான். தயவு செய்து பிளாட்பாரத்தின் ஏறி நடந்து போங்கள், ஸார்!" என்று மிகவும் மரியாதையாக அறிவித்தது. (அப்போது போலீஸில் மரியாதை வாரம் நடத்திக் கொண்டிருந்தார்களோ, என்னவோ?)

முதன் மந்திரி தம்முடைய ஆட்சியில் போலீஸார் ஜனங்களிடம் மரியாதையாகப் பழகுவதையும், போக்குவரத்து ஒழுங்கான

இயற்கை உறவு

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இயற்கைக்கு விரோதமான உறவு — அதாவது ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற உறவு - இருந்து வருகிறது. இது இரு நாடுகளுக்கும் நேர்மையல்ல. எனவே, இரு நாடுகளுக்கும் இயற்கைக்கு முரணில்லாத நல்லுறவு ஏற்படவே நான் முயற்சித்து வருகிறேன். எனது ஒத்துழையாமையின் பொருள் இது தான். நல்லதோடு ஒத்துழைப்பது எவ்விதம் கடமையோ, அதே போலத் தீமையுடன் ஒத்துழையாமை செய்வதும் கடமையாகும்.

—காந்திஜி

முறையில் கட்டுப்படுத்தப் படுவதையும் கண்டு மகிழ்ச்சியுடன் பிளாட்பாரத்தின் மீது ஏறி நடந்தார். மெள்ள நடந்து ஆயிரம் விளக்கு சமீபமாக வந்தபோது பிளாட்பாரத்தின் குறுக்கே ஒரு பெரிய ஆலமரம் விழுந்து கிடந்தது. பிளாட்பாரத்தை விட்டுக் கீழே இறங்காமல் மரத்தைத் தாண்ட முடியவில்லை. கீழே இறங்கி நடக்கவும் போலீஸார் விடமாட்டார்கள். முதன் மந்திரி சாய்ந்து கிடந்த மரத்தின் மீது துணிந்து காலை வைத்து ஏறி அந்தப் பக்கம் குதித்தார். எதிரில் வந்த பாதசாரியைப் பார்த்து, ''ஏன் இந்த மரம் கீழே விழுந்து கிடக்கிறது?'' என்று விசாரித்தார்.

''தெரியாதுங்களா? ராத்திரி அடித்த காற்று மழையில் இந்த மரம் ஒரு பஸ்மீது விழுந்து மூன்று பேர்கள் இறந்து விட்டார்களே!'' என்றார் அந்தப் பேர்வழி.

''அடப்பாவமே! இந்தக் கார்ப்பொரேஷன் சுத்த மோசம். இம்மாதிரி காற்றிலே விழுந்து விடக்கூடிய மரங்களை யெல்லாம் முன் கூட்டியே சோதித்துப் பார்த்து வெட்டிப் போட்டிருக்க வேண்டாமா?'' என்று குறை கூறினார் புல்ஸைட் வேஷத்திலிருந்த முதல் மந்திரி. மெதுவாகப் பேச்சுக் கொடுத்துப் பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதற்காகவே அவர் அவ்வாறு கூறினார்.

''கார்ப்பொரேஷனைச் சொல்லி என்ன ஸார், பிரயோஜனம்? எல்லாம் இந்தக் காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்! காமராஜ் மந்திரிசபை தூங்கிக் கொண்டிருந்தால் கார்ப்பொரேஷன் என்ன செய்யும்? முதல் மந்திரி கார்ப்பொரேஷன் கமிஷனரைக் கூப்பிட்டுக் கேள்வி கேட்டால்தானே? இந்த லட்சணத்துக்கு மராமத்து மந்திரி ஒருவர். ஸ்தல ஸ்தாபன மந்திரி ஒருவர். இவர்களுக்கு மேல் முதன் மந்திரி ஒருவர்!'' என்று படபட வென்று பேசினார் பாதசாரி.

''மராமத்து மந்திரியும் ஸ்தலஸ்தாபன மந்திரியும் மரங்கள் விழுகின்றனவா என்று பார்த்துக் கொண்டிருக்க முடியும்? ஏன் ஐயா, இப்படிப் பொறுப்பில்லாமல் பேசறீங்க!'' என்று கேட்டார் வேஷதாரி.

''நானா பொறுப்பில்லாமல் பேசுகிறேன்? இதே சாலையில் சில தினங்களுக்கு முன்னால் ஜனாதிபதி 'பவனி' சென்றார். இன்னும் பொழுது போய்ப் பொழுது விடிந்தால் தினமும் மந்திரிகளும், அதிகாரிகளும், அயல்நாட்டு ஸ்தானிகர்களும், தலைவர்களும் இந்த வழியாகத்தான் போகிறார்கள். இந்த விபத்து நமது தலைவர்கள் யாராவது வரும்போது நேர்ந்திருந்தால் என்ன ஆகிறது?'' என்று மிகவும் கோபமாகப் பேசினார் பாதசாரி.

''நீங்க சொல்றது வாஸ்தவம்தானுங்க!'' என்று கூறிவிட்டு முதன் மந்திரி அந்த இடத்தை விட்டு அப்பால் நழுவினார்.

இன்னும் சற்றுத் தூரம் நடந்த பிறகு வழியில் ஒரு மளிகைக் கடை தென்பட்டது. அந்தக் கடைக்குள் நுழைந்து ''கடைக்காரரே, 'அரிசி இருக்கிறதா?' என்று விசாரித்தார்.

''இருக்குதுங்க!'' என்று கூறிக் கடைக்காரர் சர்க்கார் விநியோகம் செய்யும் அரிசியை எடுத்துக் காண்பித்தார்.

''அரிசி ரொம்ப மோசமா யிருக்கிறதே!'' என்றார் மாறுவேஷ மந்திரி.

''ஆமாம்! அதை என் கிட்டே சொல்லி என்ன பிரயோசனம்? உங்க காங்கிரஸ் மந்திரிங்க கிட்டே போய்ச் சொல்லுங்க!'' என்றார் கடைக்காரர்.

''இப்படி எல்லாருமாகச் சேர்ந்து காங்கிரஸைப் பல முனையில் தாக்கினால் அது என்னங்க செய்யும், பாவம்! காந்தி மகாத்மா வளர்த்த நல்ல ஸ்தாபனம் ஆச்சுங்களே அது! சரி; அரிசி விலை என்ன சொல்லுங்க'' என்று கேட்டார் மாறுவேஷ மந்திரி.

''ஒரு ரூபாய் இரண்டே காலணா!''

''அதென்ன காலணா வேறே கொசுறு?''

''அதுதானுங்க விற்பனை வரி! காங்கிரஸ் ஆட்சி இப்படிப் பல முனையில் விற்பனை வரிபோட்டால் வியாபாரிங்க என்ன செய்வாங்க, பாவம்!....'' என்று ஒரு போடு போட்டார் கடைக்காரர்.

''ஆனாலும் அரிசி விலை அநியாயமா ஏறிப் போச்சுங்க!'' என்றார் முதன் மந்திரி.

''ஆமாங்க, அதை உங்க முதல் மந்திரி கிட்டே போய்ச் சொல்லுங்க!'' என்றார் வியாபாரி. மாறுவேஷக்காரர் மறு பேச்சுப் பேச வழியின்றிக் கடையை விட்டு நடையைக் கட்டினார்.

சற்றுத்தூரம் நடந்துபோய் அங்கே இருந்த ஒரு பஸ் ஸ்டாண்டின் பக்கத்தில் போய் நின்றார். அங்கு ஏற்கெனவே ஒரு பிரயாணி பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். மாறுவேஷ மந்திரி அவரைப் பார்த்து, ''இங்கே எந்த பஸ் வரும்?'' என்று விசாரித்தார்.

''நீங்க எங்கே போகணும்?'' என்று கேட்டார் பஸ் பிரயாணி.


''கடற்கரைக்குப் போகணும். இங்கே பஸ் வருமா?'' என்று கேட்டார் முதல் மந்திரி அந்தப் பிரயாணியிடம்.

''அதோ மரத்தடியில் உட்கார்ந் திருக்கும் ஜோஸ்யரைக் கேளுங்க.''

''என்ன, அப்படிச் சொல்றீங்க? பஸ் எப்போது வரும்னு சொல்ல முடியாதா?''

''அதெப்படிச் சொல்ல முடியும்? சர்க்கார் பஸ் ஆச்சே!....... நீங்க பட்டணத்துக்குப்





பாமா — நாராயணசாமி

கோடிபாண்டி திரு அ.ரா. கண்ணுச்சாமி சேண்டப்பிரியரின் குமாரியும், திரு எஸ். விவேகானந்தன் B. Sc., (H.EL.A. Dept., Secretariat, Madras) அவர்களின் மைத்துனியுமான செல்வி பாமாவுக்கும் மன்னார்குடி திரு சா. அப்பாவுகண்டியர் அவர்களின் புதல்வன் திரு நாராயணசாமிக்கும் செப்டம்பர் 9-ந் தேதி மன்னார்குடி மணமகன் இல்லத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினர்கள். வாழ்க, மணமக்கள்!



பெங்களூர் இந்திய விஞ்ஞானக் கழகத்தின் மாணவர்கள் செப்டம்பர் 16ல் பாரதி விழா கொண்டாடினார்கள். விழா முடிவில் "கனவும் நனவும்" என்ற நாடகத்தை நடத்தி அதன் மூலம் பாரதியார் கண்ட கனவு எவ்வளவு தூரம் நனவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதைக் கற்பனைச் செறிவுடன் நன்றாக நடத்திக் காட்டினார்கள். மேற்படி நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்ட மாணவர்களை மேலே படத்தில் காணலாம்.

புதிசு போல இருக்குது. எந்த ஊருங்க ?....."

காந்திஜி வழி வந்த ஸ்ரீ காமராஜரால் உண்மை பேசாமல் இருக்க முடியவில்லை.

"எனக்கு விருதுநகருங்க" என்று பதில் கூறினார்.

"அடடே! அப்படிச் சொல்லுங்க. நம்மமுதல் மந்திரி காமராஜ் ஊர்தான்னு சொல்லுங்க !"

"ஆமாங்க."

இதற்குள் கடற்கரைக்குப் போகும் பஸ் அங்கே வந்து நின்றது. புல்ஸைட் வேஷதாரியும் சகோதர பஸ் பிரயாணியும் பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள். பஸ் பெருமூச்சு விட்டு அலறிக் கொண்டே நின்று விட்டது. கண்டக்டர் பிரயாணிகளைக் கீழே இறங்கிப் பஸ்ஸைத் தள்ளச் சொன்னார். முதல் மந்திரியும் கும்பலோடு சேர்ந்து பஸ்ஸைத் தள்ளினார். அவருக்குப் பெருமூச்சு வாங்கியது. சக பிரயாணி ஒருவர் வேடிக்கையாக "இது நம் சொந்த 'டிரான்ஸ்போர்ட்' ஸார்! மக்களே சர்க்கார். சர்க்காரே மக்கள்!...... பெருமூச்சுவிட்டால் முடியுமா ?" என்றார்! இவ்வாறு வேடிக்கையாகப் பஸ்ஸைத் தள்ளிக்கொண்டே எல்லாரும் கடற்கரை அடைந்து விடடார்கள்.

அங்கே கடற்கரையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நமது முதல் மந்திரி யாருக்கும் தெரியாமல்அங்கே போய்க் கூட்டத்தோடு கூட்டமாக உட்கார்ந்து கொண்டார். காங்கிரஸுக்கு எதிர்க் கட்சிக் கூட்டம் அது. பிரசங்கி காங்கிரஸ் சர்க்காரையும் காமராஜ் மந்திரி சபையையும் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார். கூட்டத்திலர் எல்லோரும் ஆரவாரமாகக் கையைத் தட்டிப் பிரசங்கியை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். வேஷத்திலிருந்த முதல் மந்திரி சும்மா இருக்க முடியுமா? அவரும் கூட்டத்தோடு சேர்ந்து கை தட்ட வேண்டியதாயிற்று! பிரசங்கி பேசினார்:

"தோழர்களே! காமராஜ் மந்திரி சபை என்னத்தைச் சாதித்துவிட்டது? அரிசி விலையைக் குறைக்க ஆளும் கட்சிக்குத் திறமை இல்லை. ஆடை விலையைக் குறைக்க அமைச்சர் குழுவுக்கு அக்கறை இல்லை. பள்ளிப் பிள்ளைகளுக்குப் படிக்க வசதி இல்லை. எல்லைக்கு ஒரு கமிஷன் இல்லை. ஐந்தாண்டுத் திட்டமாம்! ஏட்டிலே தீட்டுகிறார்கள், நாட்டுக்கு நல்ல திட்டம் என்று! ஏழை விவசாயி ஏங்கி நிற்கிறான். கைத்தறி நெசவாளி கதறிப் பதறுகிறான். நாம் கேட்கிறோம்—இதுதானா திட்டம் என்று. மக்கள் குரலுக்கு மந்திரிகள் பதிக் கொடுக்கட்டும். (கரகோஷம்!) இல்லையென்றால் வரும் தேர்தலில் மக்கள் தீர்ப்புக் கூறுவார்கள்." (மீண்டும் கரகோஷம்!)

முதல் மந்திரிக்குத் தலை சுற்றுவதுபோல் இருந்தது. வேகமாக எழுந்து நடக்கத் தொடங்கினார். இன்னும் வேகமாகச் சென்று நமது மந்திரி திரு சி. சுப்பிரமணியம் வீட்டை அடைந்தார். சட்டென்று முதல் மந்திரியை அடையாளம் தெரியாத திரு சி. சுப்பிரமணியம் "தாங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று வியப்புடன் கேட்டார்.

"என்ன இப்படிக் கேட்கிறீங்க? என்னைத் தெரியவில்லையா!" என்றார் முதல் மந்திரி.

"அடடே! நீங்களா? இதென்ன இந்த வேஷத்தில் வந்திருக்கிங்க?"


"என்ன போங்க; பொழுது போகவில்லையென்று மாறு வேஷம் போட்டுக் கொண்டு இப்படிக் கடற்கரைவரை நடந்தே போயிருந்தேன். என்னை ஒருத்தருக்கும் அடையாளம் தெரியவில்லை. ஆனால் ஒன்று தெரிந்தது."

"என்னங்க அது?"

"எல்லாரும் காங்கிரஸ் மந்திரி சபையைப் பற்றி ரொம்பச் சலிப்பாகப் பேசறாங்க. எனக்குக்கூட அடுத்த தேர்தலில் நிற்கலாமா அல்லது குமாரசாமி ராஜா மாதிரி சீடரான ஒருவரை நிறுத்தி வைக்கலாமா என்று ஒரு யோசனை வந்துட்டுது, சுப்பிரமணியம்!" என்றார் முதல் மந்திரி.

ஸ்ரீ சுப்பிரமணியம் சிரித்துக் கொண்டே, "இப்படி நீங்க மனசைத் தளர விடலாமா? தங்களுக்கு நம் தமிழ் நாட்டிலே இருக்கிற செல்வாக்கை அவங்க என்ன கண்டாங்க? தேர்தலுக்கு நீங்க நிற்கணும் என்பதுகூட இல்லை. உட்கார்ந்தபடியே ஜெயிச்சுடுவீங்களே!" என்றார்.

"அப்படிச் சொல்லுங்க....சரி; போதும் இந்த மாறுவேஷம்! நம்ம வேஷம்தான் நமக்குச் சரி!" என்றார் மாறுவேஷ மந்திரி!



வாழ்விலே ஒருநாள்

காந்தன்

"நல்ல படாதிபதியும் கிடைத்து, நல்ல கதையும் கிடைத்துவிட்டால், நான் நன்றாக நடித்து நல்ல பெயர் வாங்கிவிடுவேன்" என்று நினைக்கிறார் நடிகர்.

"நல்ல நடிகர்களும் கிடைத்து, நல்ல கதையாயும் இருந்து விட்டால் நான் நல்ல படமும் எடுத்து, போட்ட பணத்தையும் எடுத்து, நல்ல பெயரும் எடுத்து விடுவேன்!" என்று நினைக்கிறார் படாதிபதி.

"நல்ல படமாக இருந்தால் நிச்சயம் போய்ப் பார்ப்பேன்!" என்று நினைக்கிறார் படம் பார்க்கும் ரஸிகர்.

பார்க்கப்போனால் எல்லோரும் நல்லதைத் தான் விரும்புகின்றனர். ஆனால் நல்லதையே விரும்புகிறவர்களுக்குப் பலனும் நல்லதாகவே கிடைப்பதில்லையே! அது ஏன்?

ஒருவருடைய விருப்பம் நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. அந்த விருப்பத்தைச் செயலாக்கும்போது செய்யும் முயற்சியும் நல்லதாக இருக்க வேண்டும்.

நல்லபடியாகச் சிரமப்பட்டு நடிப்பதென்று நடிகர் தம் மனத்தில் உறுதி செய்து கொண்டு அதைச் செயலிலும் காட்ட முயல வேண்டும்.

நல்ல பெயர் சம்பாதித்துக் கொடுக்கக் கூடிய படத்தையே எடுப்பதென்று படாதிபதி கங்கணம் பூண்டு அதைக் காரியத்திலும் காட்ட வேண்டும்.

அதேமாதிரி, நல்ல படங்களையே பார்ப்பது என்று படம் பார்க்கும் ரஸிகரும் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும்.

தான் ஏற்றுக் கொண்டிருக்கும் பாத்திரத்தை உணர்ந்து நடிக்க முற்படும் நடிகர் யாராயிருந்தாலும் அவர் விரைவில் முன்னணிக்கு வந்து விடலாம்.

மெர்க்குரி பிலிம்ஸாரின் "வாழ்விலே ஒரு நாள்" என்னும் படத்தில் கதாநாயகனாக நடித்திருக்கும் சிவாஜி கணேசன் அந்த உண்மைக்குச் சான்றாக விளங்குகிறார்.

உற்றார் உறவினரின்றி, பெற்றுவளர்த்த பெற்றோர்களின்றி, வேலையிலாத் திண்டாட்டத்தினால் வாழ வழியுமின்றித் தவித்த படித்த வாலிபன் கண்ணன்; அவன் வாழ்வில் ஒளியாகத் திடீரென்று தோன்றி, விதியின் சதியினால் பிரிக்கப்பட்டவள் ஜானகி; அவர்கள் வாழ்வில் துய்த்த ஒரு நாள் இன்பத்தின் பலனாகப் பிறந்தவன் முத்து; அவனை ஈன்றெடுத்த தாய் தந்தையர்களான ஜானகியும் கண்ணனும் தாங்கள் செய்யாத குற்றத்துக்குச் சிறைத் தண்டனை அடைந்தவர்; உலகம் அறியாமல், ஒரு பாவமும் அறியாமல் தாய் வயிற்றில்

இருந்த சிசு (முத்து) நந்த குமாரனைப் போல் சிறைச்சாலையில் பிறந்தாலும் அநாதை ஆசிர மத்தில் சேர்க்கப்பட்டு, வளர்ந்து பெரிய வனாகிப் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டராகிறான்; அவன் அன்னையையும் பிதாவையும் முதன் முதலிலே பார்த்ததும், பிதாவைத் தானே கைது செய்து கொண்டு போக வேண்டிய கொடிய நிலை ஏற்பட்டது. தந்தையென்று அறிந்ததும் தன் கடமையையே பெரிதாக நினைத்த மகனைக் கண்ணால் பார்த்து விட்டுக் கண்ணை மூடுகிறான் கண்ணன்.

பணக்காரனான வாழவந்தானிடம் வேலை கேட்கப் போன கண்ணனுக்கு வேலை கிடைக்க வில்லை; ஆனால் வாழவந்தானின் வெறுப் புக்கும், அவன் வீட்டு வேலைக்காரி ஜானகி யின் அன்புக்கும் பாத்திரமாகிறான். திரைக் கதை இதிலிருந்துதான் களை கட்டுகிறது.

ஜானகியிடம் அன்பு மொழி பேசி அவளை மணந்தபோதும், இன்ப வாழ்வை இழந்து, அன்பு மனைவியைப் பிரிந்து வாடியபோதும், தான் கைப்பிடித்த காதலியின் கற்பைக் கவர முயன்ற காதகன் வாழவந்தானைக் கையும் மெய்யுமாய்ப் பிடித்துக் கதற அடித்த போதும், நீதிமன்றத்தில் கூண்டில் ஏறி நின்ற போதும், சிவாஜி கணேசன் பிரமாதமாக நடித்திருக்கிறார். வாழவந்தானைப் பழி தீர்க்க முனைந்து, சேட்ஜியாக உருமாறி வந்த சிவாஜி கணேசன் நடிப்பின் சிகரத்துக்கே போய் விட்டார் என்று கூறலாம். விரக்தி, மகிழ்ச்சி, வெறுப்பு, குரோதம் முதலிய சகல உணர்ச்சி வேறுபாடுகளிலும் அவர் நடிப்பில் பாவம் ததும்பி நிற்கிறது.

ஜானகியாக நடித்த ஜி. வரலக்ஷ்மி, காத லிக்கும் கன்னிப் பெண்ணாக நடித்துக் கடைசி யில் தலைநரைத்த முதியவளாக வும் நடிக்கத் திரைக் கதை இடம் அளிக்கிறது. வரலக்ஷ்மி இது வரையில் நடித்த படங் களி லெல்லாம் அனேகமாக அவர் கிழவியாக வராத படமே இல்லையென்று கூறலாம்.

பலர் வாழ்வைக் கெடுக்கும் வாழவந்தானாக வி. கே. ராமசாமி நடித்திருக்கிறார். பொல்லாதவனாக நடித்து நல்ல பெயர் வாங்குவது மிகவும் சிரமமான காரியம். அவர் பேச்சு, நடிப்பு, முகத்தோற்றங்கள் யாவும் பாத்திரத் துக்கு ஏற்றபடி நன்றாக அமைந்திருக்கின்றன.

இந்தப் படத்தில் இரண்டு தடவைகள் கண்ணனுக்கும் வாழவந்தானுக்கும் கடும் போர் நடக்கிறது. இந்த இரண்டு கட்டங் களிலும் வி.கே. ராமசாமியும் சிவாஜி கணேச னும் அற்புதமாகச் சண்டையிட்டு ஒருவரை யொருவர் மிஞ்சி விடுகின்றனர்.


இந்தப் படத்தில் இன்னொரு முக்கியமான நடிகர் முத்துவாக நடிக்கும் ஸ்ரீராம். காதல் புரியவும், கண்ணீர் விடவும், உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டு கடமையைச் செய்ய வும் அவருக்கு இந்தப் படத்தில் சந்தர்ப் பங்கள் கிடைத்திருக்கின்றன. சந்தர்ப்பங் களுக்கு ஏற்றபடி அவர் நடிப்பும் சோபித் திருக்கிறது. வேலைக்காரனாகவும் சப் - இன்ஸ் பெக்டராகவும் திறமையுடன் நடித்திருக் கிறார் ஸ்ரீராம். ''மர்ம வீரன்'' படத்தில் மர்மமாகி விட்ட அவர் திறமை இந்தப் படத் தில் பூரணமாக வெளிப்பட்டிருக்கிறது!

வாழவந்தானின் மகள் லக்ஷ்மியாக நடிக் கும் ராஜசுலோசனா இந்தப் படத்தில், சப் - இன்ஸ்பெக்டரைக் காதல் புரிந்து, களிநட மும் புரிந்திருக்கிறார். ஏனோ அவரது நடிப்பு சோபிக்கவில்லை என்பது நமக்குப் புரியவில்லை.

மரணத் தறுவாயிலிருந்த வாழவந்தான் கண்ணனைக் கைத் துப்பாக்கியினால் சுட்டு விட்டுத் தானும் உயிர் துறக்கும் காட்சி உணர்ச்சியின் சிகரமாக அமைந்து விட்டது. நல்ல நடிகர்கள் நல்ல முறையில் நடித்திருக் கும் இப்படத்தில், கணிசமாகக் கத்திரிக் கோலை உபயோகப்படுத்தி யிருந்தால் படம் விறு விறுப்பாக அமைந்திருக்கும்.

இப்படத்துக்குக் கதையும் வசனமும் எழுதியவர் திரு ஏ. வி. பி. ஆசைத் தம்பி; உணர்ச்சி ததும்பும் இந்தக் கதைக்கு இனிமையாக வசனம் எழுதி யிருக்கிறார்.

கதை அம்சத்தில் புதுமை, ஆழ்ந்த கருத்து, அரிய படப் பிடிப்பு இவைகளை எதிர் பார்த்து இப்படம் பார்ப்பதில் பயன் இல்லை; நல்ல நடிப்பை மட்டும் நாடினால் பலனுண்டு.



ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

47

ஈசுவரன் நம்மைப் போன்ற ஒரு வியக்தி புருஷன் அல்ல. தனி மனிதனுக்குள்ள வரம்புகள் அவனுக்கு இல்லை. பகவான் ஒரு மனிதனாக அவதரித்தான் என்று நாம் சொல்லும்போது அதன் கருத்து என்னவென்றால் அந்த மனிதன் தெய்விக நிலைக்கும் பண்புக்கும் நெருங்கியவன் என்பதே.

கடவுள் எங்கும் நிறைந்த பொருள். ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும் பகவான் கோயில் கொண்டிருக்கிறான். ஆனபடியால் நாம் அனைவருமே அவனுடைய அவதாரங்கள். இது உண்மைப் பேச்சாயினும் அதில் பயனில்லை. ராமனும் கண்ணனும் பகவத் அவதாரம் என்றால் அவர்கள் நம்மைப் போன்றவர்களல்ல; தெய்விக குணங்கள் கொண்டவர்கள் என்பது பொருள். சரித்திர உண்மையாக ராமனும் கண்ணனும் பிறந்து வாழ்ந்தார்களா அல்லது மக்களுடைய வெறும் கற்பனையா என்கிற கேள்வியைப் பற்றி நாம் ஆராய்ந்து குழப்பம் உண்டாக்கிக் கொள்ள வேண்டியதில்லை. மக்கள் ராமன், கண்ணன் என்று தெய்விக குணங்களை ஏற்றித் தோற்றுவித்துக் கொண்டிருக்கும் கற்பனைச் சித்திரமே யாயினும் அதுவே போதும்.

பிரபஞ்சத்திலுள்ள சக்தி யெல்லாம் கடவுளே. உயிருக்கெல்லாம் உயிரும் அவனே! சுத்த சித்த சொரூபமான அவனுக்கு முதலுமில்லை, முடிவுமில்லை. ஆயினும் எங்குமுள்ள அவனைக் காணவில்லை. கண்டு பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. மின்சாரம் பெரும் சக்தி அல்லவா? ஆனாலும் முறைப்படி அதை நாம் தோற்றுவித்த பிறகு அதன் பயனை அடைய முடியும். மின்சாரத்தின் லட்சணங்களை அறிந்து அந்த அறிவைக் கொண்டு எந்திரங்களை அமைத்து முயன்றால் தான் மின்சாரத்தின் பயனை நாம் அடைய முடியும். அவ்வாறே பராசக்தியான ஆண்டவனின் விதிகளுக்கு அடங்கி முயன்றால் தான் நமக்குள்ளும் நம்மோடும் இருக்கும் ஆண்டவனைக் காணலாம். [ஹரிஜன் 22-6-47]

ஹிந்து தர்மமானது ஒரு வரம்பற்ற கடலைப் போன்றது. ரத்தினாகரம், மதிப்பிட முடியாத மணிகளை அதில் காணலாம். எவ்வளவு ஆழம் மூழ்குகிறோமோ அவ்வளவுக்கு அதில் மணிகளைக் கண்டெடுக்கலாம். ஹிந்து சாஸ்திரத்தில் கடவுளுக்கு அனேகம் பெயர்கள் உண்டு. ஸ்ரீ ராமனும் கிருஷ்ண பகவானும் அவதரித்து இந்த நாட்டில் வசித்து வந்தார்கள் என்று பல்லாயிர மக்கள் நம்பி வருகிறார்கள். அவர்களைத் தியானித்து முக்தியடையலாம் என்பது அவர்களுடைய உறுதியான நம்பிக்கை. உண்மையும் புராணமும் கற்பனையும் பிரிக்க முடியாத கதம்பமாகப் போயிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து பொறுக்கி எடுக்க முடியாது. என்னைப் பொருத்த மட்டில் எல்லா நாமங்களும், எல்லா வடிவங்களும் எங்குமுள்ள வடிவமற்ற ஒரு ராமனுடைய இலக்கணங்களாகவே வைத்துக் கொண்டிருக்கிறேன். என்னைப் பொருத்த மட்டில் தசரதனுடைய குமாரன் சீதையின் நாயகன் என்று சொல்லப்படும் ராமன் எங்கும் பரந்து நிற்கும் ஈசனுடைய உருவமே. அவனுடைய நாமத்தை நம் உள்ளத்தில் எழுதிக் கொண்டோமானால் நம்முடைய கஷ்டங்கள் அனைத்தும் துயரங்கள் அனைத்தும், பாபங்கள் அனைத்தும் தீரும். [ஹரிஜன், 2—6—46]

காந்தி வாக்கு

சத்திய போதனை

ஒரு சமயம் சர்க்கார் அதிகாரி ஒருவர், தாம் சர்க்காருக்கு அனுப்பியிருக்கும் அறிக்கையின் நகல் ஒன்றை ரகசியமாக எங்களுக்கு அனுப்பி வைத்தார். இதை நாங்கள் மகாத்மாவிடம் கொண்டு போனோம். அதைப் படித்துப் பார்ப்பதற்கு முன்னும், அது எங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்பதை மகாத்மா தெரிந்து கொண்டு விட்டார். உடனே, அதைப் படித்துப் பார்க்க மகாத்மா மறுத்து விட்டதோடு அதை அந்தச் சர்க்கார் அதிகாரியிடமே திருப்பிக் கொடுத்து விடும் படியும் எங்களிடம் கூறினார். எங்களுக்கு ரகசியமான வழியில் கிடைக்கும் எந்தக் காகிதத்தையும் நாங்கள் பயன் படுத்திக் கொள்ளக் கூடாது என்றும் எங்களுக்குக் கட்டளை யிட்டார். நடைமுறையில் சத்தியத்தை இவ்வகையில் மகாத்மா காந்திஜி எங்களுக்குப் போதித்தார். — பாபு ராஜேந்திர

படித்துப் பாருங்கள்

சுதந்திரச் சுவடுகள்

உலகில் எத்தனையோ நாடுகள் சுதந்திர நாடுகளாக இருக்கின்றன. அங்கு மக்கள் எல்லாரும் சுதந்திரமாக இருக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும். அங்கு, ஏழை பணக்காரர் போராட்டம் நடைபெற்ற வண்ணமாகத்தான் இருக்கிறது.

உண்மையிலேயே, சுபிட்சமும் சந்தோஷமும் மக்கள் அடையக்கூடிய மார்க்கம் ஏதாகிலும் உண்டா என்று உலகில் பல அறிஞர்கள் ஆராய்ச்சி செய்த வண்ணமாகவே இருந்திருக்கிறார்கள்.

பெட்ராண்ட் ரஸ்ஸல் உலகப் பெரியார்களில் ஒருவர். இவரது முயற்சியின் பயனாகவே சமீபத்தில் அணுகுண்டுப் பரிசோதனைகளை நிறுத்துவதற்குப் பல விஞ்ஞான அறிஞர்களின் கையெழுத்துக்களுடன் வல்லரசுகளுக்கு ஒரு அறிக்கைவெளியிடப்பட்டது நினைவிருக்கும். இவர் லட்சிய சமுதாயம் உருவாக்க என்னென்னவெல்லாம் வழி வகைகள் இருக்கின்றன என்று ஆராய்ச்சி செய்து இந்நூலில் முடிவு கட்டியிருக்கிறார். முதல் மகாயுத்தம் முடிந்ததும் எழுதப்பட்ட நூலாயினும், ஆசிரியரின் கருத்துக்கள் இன்றும் ஜீவசக்தியோடு இருக்கின்றன.

''பெரும்பாலான ஆண் பெண்களின் தினசரி வாழ்க்கையில் நம்பிக்கையைக் காட்டிலும் அச்சம் பெரிய பாகத்தை வகிக்கின்றது. அவர்கள் தங்களுடைய சொந்த வாழ்க்கைகளிலும் அவர்களுடன் தொடர்பு உண்டாகும் மனிதர்களின் வாழ்க்கையிலும் உற்பத்தி செய்யக் கூடிய ஆனந்தத்தைப் பற்றிய சிந்தனையைக் காட்டிலும், அதிகமாகத் தங்களிடமிருந்து மற்றவர்கள் எடுத்துக் கொள்ளக் கூடிய உடைமைகளைப் பற்றிய சிந்தையால் நிரம்பி யிருக்கிறார்கள்.

'' வாழ்க்கையை இந்த மாதிரி வாழக் கூடாது.' இம்மொழிகள் இன்றைய நிலைக்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றன, பாருங்கள்.

சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ள இந்நூலை, திரு கு. ச. சீனிவாசன் நல்ல தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். கருத்துச் செறிவு கொண்ட வாக்கியங்களை அமைக்கும் பெட்ராண்ட் ரஸ்ஸலின் ஆங்கிலத்தைத் தமிழில் எளிதில் புரியும் வகையில் மொழி பெயர்ப்பது மிகவும் கஷ்டம். இந்தச் சிரம சாத்தியமான காரியத்தை ஸ்ரீ சீனிவாசன் வெற்றிகரமாகச் சாதித்து விட்டார்.

[பிரசுரம்: சுத்தரப் பிரசுராலயம் 193, மௌண்ட்ரோடு, சென்னை 2. விலை: ரூ. 5.]'

குடிசைத் தொழில்

மக்கட் குலத்தை வாட்டி வருத்தும் பசியும் பிணியும் நீங்க வேண்டும்; மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமானால் நாட்டின் தொழில் வளம் சிறக்க வேண்டும்.

' நம்முடைய நாட்டிலுள்ள தற்போதைய கல்வித் திட்டமானது புரட்சிகரமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். கைத்தொழில் மூலமாகப் பிள்ளைகளின் அறிவு பெருகி விசாலமடைய வேண்டும். தொழிற் கல்வியைப் புறக்கணித்து விட்டு ஏட்டுக் கல்வியை மட்டும் பயிற்றுவிப்பது மாணவ குலத்துக்கு இழைக்கப்படும் மகத்தான தீங்காகும்'' என்று காந்தி மகான் கூறியுள்ளதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வீட்டிலிருந்த வண்ணம் யந்திரங்களின் உதவியின்றிச் செய்யக் கூடிய சிறு கைத்தொழில்கள் ஏராளமாக இருக்கின்றன. மேற்படி தொழில்களில் அக்கறை காட்டுவதன் மூலம் வறுமைப்பேயை விரட்டி யடிக்கலாம். குடிசைத் தொழில்களைப் பற்றிய விவரங்களை அறியக் கீழே காணும் சிறு நூல்கள் பெரிதும் உபயோகமாயிருக்கும்:

குடிசைத் தொழில் களஞ்சியம்: எழுதும் மை, பிஸ்கோத்து, பற்பொடி, சோப்பு, தீப்பெட்டி முதலிய மிகவும் உபயோகமான பொருள்கள் செய்வதற்கு வேண்டிய குறிப்புகள் கொண்டது. விலை: ரூ. 1—0—0.

தேனீ வளர்த்தலும் தேன் சேகரித்தலும்: மிகவும் லாபகரமான இந்தத் தொழிலைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் கொண்ட நூல் இது. விலை: ரூ. 1—8—0.

கற்பலகைகள் செய்தல்: ஊதியம் தரும் உயர்ந்த தொழில் இது. இது பற்றிய விஷயங்களை விவரமாகக் கூறுகிறது இந்நூல். விலை: ரூ. 1—0—0.

சோப் செய்தல்: குளிப்பதற்கும் துணி வெளுப்பதற்கும் இன்றியமையாத பொருள் சோப்பு. பலன் தரும் கைத்தொழில்களில் இதுவும் ஒன்று. விலை: ரூ. 1—0—0.

புகைப்படம் பிடிப்பது எப்படி?— உற்சாகமும் ஊதியமும் தரவல்ல இத் தொழிலில் பலருக்கு ஊக்கமிருக்கும். விலை: ரூ. 1-0-0.

இங்கி செய்தல்: எழுதுவதற்கு இன்றியமையாத சாதனமாகிய இங்கி வகைகளையும் அவற்றைச் செய்யும் முறைகளையும் கூறுவது இந்நூல். விலை: ரூ. 1—0—0.

சர்பத் செய்தல்: குளிர்ந்த பானம் பருக விரும்பாதவர் இல்லை. மேற்படி பான வகைகளைச் செய்யும் விதங்களைக் கூறுவது இந்நூல். விலை: ரூ. 1—0—0.

இந்நூல்களைத் தவிர, **கற்றாழை நாரினால் பிரஷ்கள் செய்தல், ரொட்டி—கேக், பிஸ்கட் செய்தல், ரோமசங்காரி செய்தல், ரப்பர் ஸ்டாம்பு செய்தல், வாசனைத் தைலங்கள் செய்தல், மேனாட்டுக் கீழ்நாட்டுத் தொழில் முறைகள் 101, பேனாக் கட்டைகள் செய்தல், பற்பொடி—பல்பசை செய்தல், சாயத் தொழில் நூல்** ஆகிய குடிசைத் தொழில்களைப் பற்றிய நூல்களும் வரப் பெற்றோம். இந்நூல்களின் விலையும் மிகச் சொற்பம்.

மேற்படி குடிசைத் தொழில்களைப் பற்றி ஆய்ந்தறிந்து அருமையான சிறு பிரசுரங்களை எழுதிப் பதிப்பித்தவர் திரு மே. சக்கரவர்த்தி என்பதையறிந்து மகிழ்ச்சி யடைகிறோம். கிடைக்குமிடம்: குடிசைத் தொழில் பதிப்பகம், 77, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை — 1.



இதன் இனிமையான மணம்
உங்களை மகிழ்விக்கும்.
காஸ்டரோமா கூந்தல்தைலம்பிரான்ஸ்
தேசத்திலுள்ள வாசனை மிக்க புஷ்பங்
களிலிருந்து தயார் செய்யப்படுகிறது.
இம் மாதிரி வாசனை மிக்க தைலம்
இது நாள் வரை நீங்கள் உபயோகம்
செய்திருக்கமாட்டீர்கள். தினமும் காஸ்
டரோமா உபயோகிப்பதால் நீளமாக
கேச வளர்ச்சி ஏற்படுவதுடன், கேசத்
திற்கு புது வாழ்வும் கிடைக்கிறது.
கண்ணுக்கும் குளிர்ச்சி தருகிறது.
கருமையானதும், அழ
கானதும், நீளமானது
மான கேசத்திற்கு
காஸ்டரோமா
வாசனை தைலம்
BOCIL
ஸ்டான்டர்ட் சைஸ் பாட்டில்
ரூ 1/10
பெரிய சைஸ் பாட்டில் ரூ 3/12
(உள் நாட்டு வரிகள் தனி)
போஸில்
தபால் பெட்டி நீர். 1611,
பம்பாய்-1.
BOCIL BOCIL
இலவம்
டோக்கன்
K/2/10
5 தோலா பிடிக்கும்படியான காஸ்ட
ரோமா பாட்டில இலவமாக கிடைக்க,
எட்டு அணா தபால் தலைகளுடன், உங்
கள் பெயர், விலாஸத்தை இந்த டோக்
கனுடன் சேர்த்து போஸில் தபால்
பெட்டி 1611, பம்பாய்-1க்கு அனுப்பவும்.
TAL BOC.36,1
டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மெஸர்ஸ் கெனடர்ஸ், அவினாசி ரோடு, கோயமுத்தூர்
மெஸர்ஸ் டேவிட் & கம்பெனி, (பிரைவேட்) லிமிடெட்
310/311, லிங்கி செட்டித் தெரு, சென்னை

'அனாசின்'

வில்லைகளில் கலந்துள்ள நான்கு மருந்துகளால் உங்கள் வலியை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்



'அனாசின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசைநார்களில் நோவு இவற்றை நீக்கும்.

அனாசினில் அடங்கிய மருந்துகள் :—

1. கொயினா : ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. அஸிடைல்ஸலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் நிறுத்துவதற்கு உபயோகமுள்ளது.



அனாசினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனாசின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல் வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம்பெற எப்பொழுதும் அனாசினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

கொலு அகராதி

மகரம்

அங்கவஸ்திரம்:—நவராத்திரியின் முக்கிய அங்கமாகிய கொலுப்படியை அலங்கரிப்பது.

அடிப்படி:—ஓநாயும், ஆடும்; சிங்கமும், யானையும்; புலியும், மானும்; கிரியும், பாம்பும். இவை அகிம்சையின் அடிப்படையில் ஒன்று சேராவிட்டாலும் கொலுவின் அடிப்படியில் ஒன்று சேருவதை நவராத்திரியில் காணலாம்.

ஆணி:—ஆண்களின் வேஷ்டிக்கும் அங்கவஸ்திரத்துக்கும் ஹானி விளைவிப்பதற்காகவே கொலுப்படியில் தலை நீட்டியது.

ஆயுதபூஜை:—அணுகுண்டுகளைக் கடலுக்கு அடியில் போட்டு விடுவதுதான் உண்மையான ஆயுதபூஜை. அப்போதுதான் சமாதான தேவதை மகிழ்ச்சியுடன் கொலுவீற்றிருப்பாள் என்பது பல அறிஞர்களுடைய தீர்ப்பு.

எருமை:—மஹிஷம். பராசக்தியை எதிர்க்க வந்த அசுரன் கொண்ட உருவம். குட்டையில் பார்க்கவும்.

ஒன்பது:—எண்களின் சிகரம். மற்றப் பண்டிகைகள் எல்லாம் ஒன்றிரண்டு நாட்களில் ஓய்ந்து விட, ஒன்பது நாட்கள் தொடர்ந்து நடப்பதால் நவராத்திரியைப் பண்டிகைகளின் சிகரம் எனலாம்.

குட்டை:—மந்தபுத்தி படைத்த மஹிஷாசுரனின் வாசஸ்தலம். சூக்ஷ்ம அறிவு இல்லாதவர்களால் குழப்பப்படுவது! அரசியலில் அதிகம் காணலாம்.

கோலுவமாகத. கோலுவையுன்னுடே:—கொலுவுக்கு வரும் பெண்கள் சாதாரணமாகக் 'கொலை' செய்யக் கூடிய கீர்த்தனைகள்.

சுண்டல்:—கண்ணுக்கும் காதுக்கும் விருந்து முடிந்த பிறகு நாவுக்குத் தரப்படுவது. சுண்டல் இல்லாத விநாயக சதுர்த்தியைக் கற்பனை செய்தாலும் செய்யலாம். சுண்டல் இல்லாத நவராத்திரியைக் கற்பனை செய்ய முடியாது.

தலையாட்டிப் பொம்மைகள்:—தஞ்சாவூரில் மாத்திரம் இல்லை. பெண்கள் சூத்ரதாரிகளாக உள்ள இடங்களில் எல்லாம் காணக் கூடியவை.

தேங்காய்:—நவராத்திரியின் போது வெற்றிலை பாக்குடன் பெண்களுடைய கைமாறிப் பிறகு இரவுக்கிரவே துவையலாக உருமாறுவது!

தொப்பைச் செட்டியார்:—இவருடைய பொம்மை இல்லாத கொலு சப்பை.

நவராத்திரி:—ஆண்களுக்கு ஒன்பது யுகங்கள்; பெண்களுக்கு ஒன்பது நிமிஷங்கள்.

படி:—குளத்தின் படியும் மாடிப்படியும் மிகவும் பழையன. சமீபகாலத்தில் பத்திரிகைகளில் கண்ணில் படுவது பஞ்சப்படி.

பரண்:—கொலுப் பொம்மைகள் வருஷத்தில் 355 நாட்கள் எலிகளுடனும் கரப்பான்களுடனும் கொலுவீற்றிருக்கும் இடம். (மீதி நாட்களில் கொலுப் படிகளில் இருக்கும்.)

பலகைகள்:—பரணிலிருந்து பலகைகளை இறக்கிக் கொலுப்படி அமைக்கும் போது, நமக்குப் பகவான் ஏன் பல கைகள் கொடுக்கவில்லை என்று தோன்றும்.

பாட்டு:—''பாடு பாடு என்று அரை மணியா கேட்டுண்டிருக்கேன். நீ பாட்டுக்கு வாயையே திறக்காமல் இருக்கிறுயே!'' என்று கெஞ்சின பிறகு பிகுவுடன் வெளிக் கிளம்புவது.

பிகு:—பாடுவதற்கு முன் இருப்பது. பாட்டில் இல்லாதது.

புச்சேரி பொம்மை:— புதுச்சேரி பொம்மை!

புரட்டாசி:—புதுக் கொலுப் பொம்மைகளுக்காகவும் புதுப் புடவைகளுக்காகவும் நம்முடைய பணம் 'கோவிந்தா' ஆகும் மாதம்!




மரப்பாச்சி:—கொலு விளையாட்டின் ஆரம்பப்படி. இதை வைத்து விளையாடின குழந்தைப் பருவம்தான்.

வீணை:—கலைமகள் இதனுடைய ஒலியில் வசிக்கிறாள். புழுதியில் எறிந்து விடாமல் போற்ற வேண்டிய புனிதமான இசைக் கருவி என்பது பாரதியாரின் கருத்து.

வேஷம்:—பெண் குழந்தைகளை எல்லாம் கிருஷ்ணராக மாற்றுவது. ஒன்பது இரவுகளும் தெருவிலெல்லாம் இந்தத் தீராத விளையாட்டுப் (பெண்) பிள்ளைகளின் விஷமம்தான்!

ஸரஸ்வதி பூஜை:— புஸ்தகங்களைப் பூஜையில் வைக்கும் நாள். வருஷம் முழுவதும் இப்படியே இருக்கக் கூடாதா என்று நம்முடைய அம்பிப் பயல் வேண்டிக் கொள்ளும் அரிய நாள்!

அம்பிகையின் அருள்



"அம்மா!"

"ஏன், கமலா?"


"அவருக்கு என்னவோ அவசர வேலை இருக்கிறதாம்! இன்றைக்கே ஊருக்குப் போக வேண்டுமாம்!"

"இன்றைக்கு வெள்ளிக் கிழமையாயிற்றே!"

"நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன், அம்மா!"

கமலாவின் குரலில் ஒலித்த வேதனை, அவள் தன் அழுகையை எவ்வளவு சிரமத்துடன் அடக்கப்பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்கிறாள் என்பதைக் காட்டிற்று. அப்படியிருந்தும் கண்களில் அவளையும் மீறி, நீர் கசிய ஆரம்பித்து விட்டது.

மீனாட்சி ஒரு நிமிஷம் செயலற்றுப் போய் விட்டாள். கிண்ணத்திலிருந்து வடித்துக் கையில் ஏந்திக் கொண்டிருந்த எண்ணெயைத் தலையில் வைத்துக் கொள்வதா, அல்லது மறுபடியும் கிண்ணத்திலேயே சாய்த்து விடுவதா? என்று புரியாமல், அறை வாயிலில் நின்றாள். கண்களைக் கசக்கிய வண்ணம் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டிருக்கும் தன் மகளின் முதுகுப் புறத்தை வேதனையுடன் நோக்கினாள் மீனாட்சி.



"மாப்பிள்ளைக்கு ஏதாவது கோபமா, கமலா?" மீனாட்சியிடமிருந்து வார்த்தைகள் உணர்ச்சியற்றுப்போய் வெளிவந்தன.

கமலா தன் தாயின் கேள்விக்கு உடனே பதில் கூறும் நிலையில் இல்லை. இருந்தும் ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள். வெளி வந்தது வார்த்தையல்ல! அழுகைதான்!

"உன்னை ஏதாவது சொன்னாரா, கமலா?" தாயின் குரலில் தொனித்த பரிவு கமலாவுக்குச் சற்று இதமாக இருந்தது. புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே கமலா சொன்னாள்:—

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை, அம்மா! இருந்தாற் போலிருந்து 'இன்று பகல் வண்டிக்கே ஊருக்குப் புறப்படுகிறேன்!' என்று குதிக்கிறார்!"

"நேற்று ராத்திரி கூடத் திங்கட்கிழமை காலை வண்டிக்குப் போவதாகத்தானே சொல்லிக் கொண்டிருந்தார்?"

"ஆமாம், அம்மா! என்னைக் கூட இன்று 'பகற் காட்சி'க்கு அழைத்துப் போவதாகச் சொல்லியிருந்தார்!"

"பின் ஏன் இப்படித் திடீரென்று?..."

"அதுதானம்மா எனக்கும் தெரியவில்லை. காலையில் காப்பி கொண்டு போனபோதுகூடச் சிரித்துக் கொண்டுதான் இருந்தார். பத்து மணிக்குக் குளிப்பதற்கு அழைக்கச் சென்ற பொழுதுதான்..."

"காரணம் என்னவென்று அவரை நீ மெதுவாகக் கேட்பதுதானே?"

"ஆயிரம் தடவைகள் கேட்டேன், கெஞ்சினேன்! முகத்தைப் பெரிதாக்கிக் கொண்டு என்னவோ போலப் பேசுகிறார். 'இன்று வெள்ளிக்கிழமை, நம்மை ஊருக்கு அனுப்ப மாட்டார்கள்' என்று சொன்னதும், 'யார் யாரை அனுப்புவது? எனக்கு வழி தெரியும்! நான் கண்டிப்பாய்ப் போய்த்தான் ஆக வேண்டும். நீ வந்தால் வா! இல்லா விட்டால் இங்கேயே இருந்து விடு' என்றார்...!"

கமலாவுக்குத் தன் அழுகையை அடக்க முடியவில்லை. வாய்விட்டே சற்று அழுது விட்டாள். மீனாட்சியின் நெஞ்சில் சுரீரென்று ஒரு வலி எடுத்தாற் போலிருந்தது. கைகளும் கால்களும் படபடக்க அவள் தடுமாறியபடி எழுந்தாள்.

"எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு எதற்காக அழுகிறாய், கமலா! நல்ல நாளும் கிழமையுமாக அபசகுனம்

போன் இப்படிக் கண் கலங்கி நிற்கலாமா?" என்று ஆறுதலாகக் கூறிக் கொண்டு தன் மகளின் தலையைப் பரிவுடன் தடவிக் கொடுத்தாள் மீனாட்சி.

கமலாவுக்குச் சென்ற ஆண்டில்தான் திருமணம் நடைபெற்றது. தாசில்தார் தர்மலிங்கத்துக்கும்—மீனாட்சிக்கும் ஒரே மகளாகப் பிறந்து சீரும் சிறப்புமாய் வாழ்ந்தவள் கமலா. படிப்பு, பாட்டு, எதிலும் குறைந்தவள் இல்லை. வீணையைக் கையில் வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால், சாட்சாத் சரஸ்வதி தேவியே அமர்ந்திருப்பதைப் போலத் தோன்றும். கண்களைப் பறிக்கும் அழகு. குறுகுறுத்த செய்கைகள், எப்பொழுதும் சிரித்த முகம்.

இந்து வருடங்களாக அலையாத இடமெல்லாம் வரனுக்காக அலைந்து முடிவில் சிவசங்கரன், ஐ. ஏ. எஸ்.ஸைப் பிடித்து அவன் கையில் தாலியையும் கொடுத்து அவள் கழுத்தில் கட்ட வைத்தார் தர்மலிங்கம்.

மீனாட்சிக்கு மாப்பிள்ளையின் படிப்பையும் தோற்றத்தையும் கண்டு அளவற்ற பெருமை.

கமலா சிவசங்கரனைப் பார்த்தவுடன் பூரித்துப் பொங்கினாள். அவள் அழகைக் கண்டு சிவசங்கரன் அயர்ந்து போய்விட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

வழக்கம்போல் மணமக்கள் தங்கள் காதலைக் கடிதங்களின் மூலம் வளர்த்துக் கொள்வதற்காக, சிவசங்கரன் சென்னையிலும், கமலா விழுப்புரத்திலும் இருந்து கொண்டு தபால் சேவகர்களுக்கு நிறைய வேலை கொடுத்து வந்தார்கள். இரண்டு மாதங்களுக்கு முன் தான் சிவசங்கரன் டிப்டிகலெக்டர் விருதுடன் வடக்கே எங்கேயோ ஒரு ஊருக்கு அனுப்பப் பட்டிருந்தான்.

இனி, தனிக் குடித்தனம் வைக்க வேண்டியதுதான் என்று இருதரப்புப் பெரியவர்களும் நிச்சயித்தார்கள். அதற்கு நாளும் குறிக்கப் பட்டு விட்டது.

சிவசங்கரன் கமலாவை அழைத்துப் போவதற்காக விழுப்புரம் வந்து நான்கு நாட்கள் ஆகி விட்டன. வருகிற திங்கட்கிழமைதான் நல்ல நாள் என்று தீர்மானித்து அன்று காலை வண்டிக்குக் கமலாவைக் கணவனுடன் அனுப்ப ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

கட்டுக்கோப்புடன் அழகாக உருவாகிக் கொண்டிருந்த பிரயாண ஏற்பாட்டில் இன்றுகாலை ஒரு சிறு கீறல் கண்டுவிட்டது.

மீனாட்சிக்கு ஒன்றுமே ஓடவில்லை. இருபது ஆண்டுகளில் ஒரு நாள் கூடத் தன் அருமை மகள் இப்படிக் கண் கலங்க அவள் பார்த்ததில்லை. விளையாட்டுக்காகக் கூடக் கமலா அழுதது கிடையாது.

எத்தனையோ செல்வமாக வளர்த்து, சீரும் சிறப்புமாக மணம் செய்வித்து, முதன் முதலாக இப்பொழுதுதான் தன் மகளைக் கணவன் வீட்டுக்கு அனுப்பப் போகிறாள். இத்தனை நாட்களும் வீட்டில் கலகலப்புடன் வளைய வந்து கொண்டிருந்த மகள் தன்னை விட்டுப் பிரிந்து செல்லப் போகிறாள் என்ற நினைப்பே அவளை இந்த நான்கு நாட்களாக வதைத்துக் கொண்டிருந்தது.

என்ன இருந்தாலும் பெண்ணைப் பெற்றவர்கள் இதைப் போல ஒரு சோகத்துக்கு ஆளாகித்தானாக வேண்டும் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு மனத்தில் மகளின் பிரிவினால் உண்டாகும் துயரத்தை மூடிமூடி வைத்துக் கொண்டிருக்கும் அவளுக்கு, மாப்பிள்ளையின் திடீர் மனமாற்றம் தாங்க முடியாத வேதனையைத் தந்தது.

அவள் பழைமையில் ஊறியவள். நாளிலும் கிழமையிலும் பரிபூரண நம்பிக்கை உடையவள். நல்ல நேரம், கெட்ட நேரம் பார்க்காமல் அவளால் எதுவும் செய்ய முடியாது.

தனக்கு இருப்பது ஒரே மகள். அவள் நன்றாக வாழ்ந்து தழைக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு லட்சியம் இல்லாதவள்.

'என்ன இருந்தாலும் வெள்ளிக்கிழமையில், மகளை முதன்முதலாகக் கணவன் வீடு அனுப்புவதா? சுமங்கலிகள் வீட்டை விட்டுப் போகவே கூடாது என்பார்களே!'

"அம்பிகே! ஏனம்மா என்னை இப்படிச் சோதிக்கிறாய்?" என்று புலம்பிய வண்ணம் பூஜை யறையில் தேவியின் படத்



துக்கு முன்னால் விழுந்து கதறினாள் மீனாட்சி. தருமலிங்கம் மருமகனிடம் மன்றாடிப் பார்த்தார். தமது மேல் அதிகாரியான மாவட்டக் கலெக்டரிடம் கூட அவர் இதைப் போல் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதில்லை.

"நாளாவது—கிழமையாவது! 'வெள்ளிக் கிழமையில் கிளம்பினால், எங்கள் வாழ்க்கை பாழாகிவிடும்' என்று நம்பும் அளவுக்கு நான் இன்னும் அவ்வளவு முட்டாளாகிவிடவில்லை" என்று ஒரே போடாகப் போட்டு விட்டான் சிவசங்கரன்.

மீனாட்சியைப்போல் நாள் கிழமைகளில் ஒரேயடியாக நம்பிக்கை வைக்காதவர் என்றாலும், வெள்ளிக்கிழமையில் தம் மகள் புருஷன் வீடு செல்வது ஏனோ தருமலிங்கத்துக்கும் வேதனையாகத்தான் இருந்தது.

"இப்பொழுது கமலாவை என்னோடு அனுப்பாவிட்டால், பிறகு எப்பொழுதும் அவள் உங்களோடுதான் இருக்க வேண்டி வரும்!" என்று சிவசங்கரன் சொல்லவே, தருமலிங்கம் தனியாய்த் தவித்தார். பிறகு, 'ஈசன் விட்ட வழியாகிறது!' என்று தேற்றிக் கொண்டு கமலாவைச் சிவசங்கரனுடன் அன்று பகல் வண்டிக்கே அனுப்பி வைக்க முனைந்து விட்டார்.

எப்படியோ நேரம் நெருப்பாகக் கழிந்தது. மகளையும், மருமகனையும் வழியனுப்ப ரயில் நிலையம் சென்றிருந்த தருமலிங்கம், எதையோ பறி கொடுத்து விட்டு வருபவரைப்போல், வீடு திரும்பினார்.

தெரு வாயிற்படியில் கண்ணீரும் கம்பலையு மாக, அவர் வருகையை எதிர் நோக்கி நின்று கொண்டிருந்த மீனாட்சி "குழந்தையைப் பத்திரமாக ரயிலில் ஏற்றி விட்டீர்களா?" என்று கேட்டுக்கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

தருமலிங்கம் தலையை அசைத்தார்.

கூடத்தில் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டு இரண்டு வீணைகள் வாசிப்பதற்குத் தயாராய் வைக்கப்பட்டிருந்தன. வீணைகளுக்கு எதிரில் பராசக்தியின் பெரிய திருஉருவப்படம் காட்சி தந்து கொண்டிருந்தது.

தினமும் தாயும் மகளும் சேர்ந்து அம்பிகையின் படத்துக்கு முன்னால் வீணை வாசிப்பது வழக்கமாகையால் அன்றும் வேலைக்காரர்கள் வாசிப்பதற்குத் தயாராய் வாத்தியங்களைத் துடைத்து அழகாக வைத்திருந்தார்கள்.

வீணைகளைக் கண்ட மீனாட்சிக்கு, வயிறு பகீரென்றது. கமலா முதல் நாள் மாலை அவளிடம் கூறியது நினைவுக்கு வந்தது.

"'அம்மா! நாளைக்கு வெள்ளிக்கிழமை! தன்யாசிக் கீர்த்தனம் வாசிக்க வேண்டும்; அவரும் அதைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்!' என்று குழந்தை ஆசையுடன் சொன்னதை நிறைவேற்ற முடியாமல் செய்து விட்டாயே தேவி!" என்று உருகினாள் அவள்.

வீணையின் இரு மருங்கிலும் குத்து விளக்குகள் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

"மீனாட்சி! ஏதாவது வாசியேன்!" தருமலிங்கத்தின் குரல் தழுதழுத்தது.

கலங்கிய கண்களுடன் கணவனை நோக்கினாள் மீனாட்சி. "நான் மட்டுமா வாசிப்பது?" துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

தாயும் மகளும், போட்டி போட்டுக் கொண்டு தினமும் வீட்டையே நாத வெள்ளத்தில் அமிழ்த்திக் கொண்டிருந்ததைக் காணும் வழக்கமுடைய தருமலிங்கத்துக்கும், மீனாட்சி மட்டும் தனியாக வீணையை மடியில் வைத்துக் கொண்டு உட்காருவதைக் கண்டபோது என்னவோ போலிருந்தது.

சில விநாடிகளுக்குப் பிறகு, தன்யாசி ராகம் வீணைத் தந்திகளில் நர்த்தனமிட்டுக் கொண்டிருந்தது. இராக ஆலாபனையும், தானமும் முடிந்து கீர்த்தனை தொடங்கிற்று. மீனாட்சி தன்னை மறந்தாள். எதிரிலுள்ள அம்பிகையின் திருஉருவத்தில் கண்களைப் பதிய வைத்துக் கொண்டாள். மகளின் பிரிவினால் அவள் உள்ளத்தில் இதுகாறும் குமுறிக்கொண்டிருந்த சோகம் தூய பக்தியாகப் பரிணமித்து விட்டது.

கீர்த்தனை உருப் பெற்றது. அவள் அதிலேயே லயித்து விட்டாள்.

"ஐயா!" குரல் மெதுவாக ஒலித்தாலும் அதில்கண்ட படபடப்பு, இசையின் இன்பவட்டத்தில் கிறங்கிக் கொண்டிருந்த தர்மலிங்கத்தைத் தூண்டிலைப்போல் குத்தி இழுத்தது.

"ஐயா! விக்ரவாண்டி அருகில் ரயில் கவிழ்ந்து விட்டதாம்!" பதறிக் கொண்டே கூறிய பொன்னனின் குரல் நடுங்கிக் கொண்



வருந்துகிறோம்

டாக்டர் எம். ஆர். குருசாமி முதலியாரின் அருமை மனைவியார் ஸ்ரீமதி ருக்மிணி அம்மாள் செப்டம்பர் 11-ந் தேதி, சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள தமது இல்லத்தில் பரம பதம் அடைந்தார். 59 வயதான ஸ்ரீமதி ருக்மிணி அம்மாள் பாரதப் பெண்மணிக்குள்ள அருங்குணங்கள் வாய்ந்தவர். தர்மசிந்தனைக்கும் தெய்வ பக்திக்கும் எடுத்துக் காட்டாக அவர் பல நற்பணிகள் புரிந்துள்ளார். மறு தினம் நிகழ்ந்த ஈமச்சடங்குக்கு ஏராளமானவர்கள் விஜயம் செய்து அந்த அம்மையாருக்கு இறுதி மரியாதை செலுத்தினர். ஸ்ரீ குருசாமி முதலியாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காந்தி வாக்கு:

கவியும் காந்தியும்

மகாகவி ரவீந்திரநாத் டாகூரின் எண்பதாவது பிறந்த தினத்தின் போது காந்திமகான் பின் வரும் வாழ்த்துத் தந்தியை அனுப்பினார்.

"எண்பது வயது. போதாது. நூறு வயது வாழ்வீர்களாக. அன்பு."

இதற்கு ரவீந்திரர் அனுப்பிய பதில் இதுதான்:

"தங்கள் வாழ்த்து வந்தது. நன்றி. எண்பது வயது வாழ்ந்ததே அதிகப் பிரசங்கித்தனம்! நூறு வயது-தாங்க முடியாது!"

டிருந்தது. "என்ன....?" ஒரு விநாடி தருமலிங்கத்தின் இதயம் துடிப்பை மறந்துவிட்டது.

"ஆமாங்க! தெருவில் ஜனங்கள் பேசிக் கொண்டு போகிறார்கள்....!"

மறு கணம் வாயிலைப் பார்க்க வேகமாக ஓடினார் தருமலிங்கம்.

இந்தச் சம்பாஷணை மீனாட்சியின் காதில் விழாமல் இருக்க நியாயமில்லை. ஆனால் அவள் அசையவில்லை. பாட்டை நிறுத்தவும் இல்லை. முன்னைவிட இன்னும் உருக்கத்தோடு கீர்த்தனையில் ஒன்றிவிட்டாள்.

ரேழியில் யாரோ தடதடவென்று நடப்பதும் பேசுவதும் ஒன்றுமே அவளையும் அவள் பாட்டையும் பாதிக்கவில்லை.

ஆ! இது என்ன விந்தை! திடீரென்று இன்னொரு குரல் கேட்கிறாற் போலிருக்கிறதே! அட! வீணையும் இன்னொன்று ஒலிக்கத் தொடங்கிவிட்டதே! ஆகா! என்ன அற்புதம்? எத்தனை இனிமை! எவ்வளவு குழைவு!

கீர்த்தனம் முடிவு பெற்றதும்தான் தன் உணர்வு பெற்றாள் மீனாட்சி. இதுவரையில் மூடியிருந்த அவள் கண்கள் பக்திப் பெருக்கில் படிந்துள்ள நீர்த் திவலைகளுடன், மெதுவாகத் திறந்து கொண்டன.

சற்று முன் வேலைக்காரப் பொன்னன் தன் கணவனிடம் சொன்ன செய்தி அப்பொழுது தான் அவள் நினைவுக்குள் பாய்ந்தது. அக்னித் திராவகத்தை யாரோ அவள் உடலெங்கும் வாரி அடித்தாற் போலிருந்தது. 'ரயில் கவிழ்ந்து விட்டதாம்! விக்ரவாண்டி அருகில் வண்டி கவிழ்ந்து விட்டதாம்! ஐயோ! இந்தப் பயங்கரச் செய்தியைக் கேட்ட பிறகுமா நான் இப்படிப் பாட்டில் மூழ்கிப் போய்விட்டேன்?'

"ஐயோ! கமலா!" இத்தனை நேரம் சுத்த ஸ்வரங்களுடன் இசைத்துக் கொண்டிருந்த அழகிய தொண்டையா இப்படி அபஸ்வரத்துடன் விகாரமாக அலறுகிறது?

மீனாட்சியின் இந்த கோரக் குரல் எதிரொலிப்பதற்குள் "அம்மா!" என்ற ஸ்நாதம் எங்கிருந்தோ கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினாள் மீனாட்சி!

'ஹா! இது என்ன கனவா! எதிரில் வீணையுடன் அமர்ந்திருப்பது யார்? கமலாவா! இவள் எப்படி இங்கு வந்தாள்? என் கூடப் பாடியதும், வீணை மீட்டியதும், என் அருமை மகள் கமலாவேதானா?'

மீனாட்சிக்கு, வியப்பிலிருந்து மீள வெகு நேரம் பிடித்தது. உண்மைதான்! மருமகன் சிவசங்கரன் கூட அருகில் நின்று கொண்டிருக்கிறானே! "ஏன் நீங்கள் திரும்பி விட்டீர்கள்? என்ன நேர்ந்து விட்டது?" என்று கேட்டாள் மீனாட்சி திகைப்போடு.

"அம்மா! உன் அம்பிகை எங்களை வழி மறித்து விட்டாளம்மா! இன்று வீட்டை விட்டு நாங்கள் போகவில்லை. போக முடியவில்லை!" என்றாள் கமலா.

"...................!"

"ஆமாமம்மா! நான்தான் கமலா! சென்னையிலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு கூட்ஸ் வண்டி விக்ரவாண்டி அருகில் தடம் புரண்டு கவிழ்ந்து விட்டது. பாதை சீர்ப்பட்டு மறுபடியும் ரயில் அந்த மார்க்கமாகப் போக இரண்டு நாட்களாகும் என்று சொல்லி விட்டார்கள். நாங்கள் ஏறியிருந்த வண்டி பக்கத்து ஸ்டேஷனிலேயே நின்று விட்டது. அதனால் நாங்கள் உடனே பஸ்ஸில் ஏறித் திரும்பி விட்டோம்" என்றாள் கமலா.

"அம்பிகே, எல்லாம் உன் செயல்தான். அம்மா!" என்றாள் மீனாட்சி.

"மாப்பிள்ளை மனம் கூட இன்று மாறி விட்டது! இன்று காலை அவருடைய நண்பர்களில் யாரோ, 'இதெல்லாம் மூடப்பழக்கம்; நீ படித்தவன் தானே? ஏன் நாளும் கிழமையும் பார்த்து ஊருக்குக் கிளம்புகிறாய்? இன்று வெள்ளிக்கிழமை; உன் மனைவியை அழைத்துக் கொண்டு புறப்படு, பார்க்கலாம்!' என்று கூறிப் பந்தயம் வைத்தார்களாம். அதற்காகத்தான் இப்படி ஒரு கூத்தடித்து விட்டார்" என்று சிரித்துக் கொண்டே சொல்லி விட்டுத் தன் கடைக்கண் வீச்சை மோகனமாகச் சிவசங்கரன் மேல் பாய விட்டாள் கமலா! சிவசங்கரன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

மகளை அன்பாக வளர்த்து, உருவாக்கி உயிருக்குயிராய் நேசித்து, எங்கிருந்தோ வந்த தனக்கு உவகையுடன் கொடுத்து விட்டு நிற்கும் இந்த நல்ல மனிதர்களின் உள்ளங்களைத் தன் வெறும் வீம்புச் செய்கை எவ்வளவு பாடுபடுத்தி விட்டது என்று நொந்துகொண்டு நீர் மல்கும் தன் கண்களைத் திறந்து அநுதாபத்துடன் நோக்கினான் சிவசங்கரன்.

கண்களை மூடியவண்ணம் அம்பிகையின் பீடத்துக்கு முன்னால் நன்றிப் பெருக்கோடு நின்று கொண்டிருந்த மீனாட்சி, "தேவி! எல்லையற்ற உன் அருளை என்னவென்று சொல்லுவேன்! என்றைக்கிருந்தாலும் கமலா என்னை விட்டுப் பிரிந்து வாழ வேண்டியவள் தான். ஆனால் என்றைக்கும் நீ என்னைப் பிரிய மாட்டாய்! இனி மகளின் பிரிவு என்னை ஒன்றும் செய்துவிடாது! பிரிந்து வாழும் வகையை இன்று எனக்கு நீ கற்றுக் கொடுத்து விட்டாய்!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.


எக்லா
தென் இந்தியா
விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க
தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப்போல், நீங்களும் தென்னுட்டின் அதி உஷ்ண கால நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம். மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால் குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE



த்வார்க்கின்ஸ்

கை ஆர்மோனியப் பெட்டிகள் செய்வதில் கைதேர்ந்தவர்கள். மேற்படி ஆர்மோனியப் பெட்டிகள் தயாரிப்பதில் புதுமையைப் புகுத்தியவர்களில் '**த்வார்க்கின்ஸ்**' முன்னணியில் நிற்கிறார்கள்.

விலை விவரம் : ரூ. 40/-லிருந்து ரூ. 550/-

விலை விவர ஜாபிதாவுக்கு ஆங்கிலத்தில் எழுதுங்கள்

த்வார்க்கின் & சன் பிரைவேட் லிட்.

8/2, எஸ்பிளனேடு ஈஸ்ட், கல்கத்தா-1

5,00,000 கதிர்கள்

பருத்தி நூல்கள்

நெ. 80 வரை நூல்கள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை

மில்கள் : மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்

○●○

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான சகலவிதமான நூல்கள்

○●○

விசேஷ ரகங்கள் :

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள்-தையல் நூல்-முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன

○●○

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

போன் : 420 (4 லைன்) மதுரை தந்தி : "ஹார்வி"

குணஜோதி சூரணம்

வயிற்று வலி, புளித்த ஏப்பம், நெஞ்சு எரிச்சல், ஆகாரம் வாந்தி, வயிறு உப்புதல், அஜீரணம் இவைகளுக்கு சஞ்சீவி

தேவையானோர் ரூ. 3/- மணியார்டர் செய்யவும்

இடைக்குமிடங்கள் :

குணஜோதி வைத்யசாலை, 514, அவின்யூ ரோடு, பெங்களூர்-2
S. T. பல்டோரு & சன்ஸ், புரசவாக்கம் ஹைரோடு, மதராஸ்
மாருதி மெடிகல் ஸ்டோர்ஸ், மலைக்கோட்டை, திருச்சி
கடம்பவனம் ஹவுஸ், 25, மேலாவணி மூல வீதி, மதுரை



காலம் பல விதம்!


ஜோஸ்யர்
"உனக்கு இப்போ கொஞ்சம் போதாத காலம்! கிரக சாந்தி செய்யணும்!"
கவர்ன்மெண்ட் அரிசி கிடைக்கும்
"இதென்னய்யா! ரேஷன் காலத்து அரிசி போல இருக்குது!"
"யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வராமலா போகும்?"
"இப்போ எங்கேடா போறே? ராகுகாலமாச்சே!"
"மாட்டுப் பெண்ணுக்குத் தினமும் நான்தான் காப்பி போட்டுத்தரணும்! காலம் மாறிப் போச்சுடி அம்மா!"
"அட கடவுளே! எந்தக் காலத்திலே தான் பஸ் ஒழுங்கா வருமோ, தெரியல்லியே!"



பாலர் தொடர் கதை

ஊமை ராஜா

துரோணன்

6. மல்லிகாவின் கோபம்

கோயில் மண்டபம் போன்றிருந்த ஒரு பாறையின் மீது, இருபதடி உயரத்தில் ஒரு கோர ரூபமான தேவதையின் சிலை இருந்தது! அதன் முகத்தில் உக்கிரக்களை சொரிந்தது! அதன் கொடூரமான விழிகளும், பயங்கரமான வாயும், அதிலிருந்த பற்களும் பைசாசத்தைப் போன்றிருந்தன! அவ்வுருவத்துக்கு எவ்வளவு கரங்களென்பதைக் கூட விஜயனால் எண்ணிச் சாத்தியமில்லை. ஒவ்வொரு கரத்திலும் ரக வாரியான ஆயுதங்களை அது வைத்திருந்தது.

அச்சிலைக்கு எதிரேயும் ஒரு அழகான மேடையிருந்தது. அதில் ராஜகுமாரனை உட்கார்த்தி வைத்தனர். பின்னர், அக்கூட்டத்தினரெல்லாம் மண்டியிட்டவாறு பிரார்த்தனை புரிந்தனர்.

இக்காட்சிகளைக்கண்ட விஜயனின் நெஞ்சில் எல்லையற்ற பீதிகள் நிறைந்து விட்டன. அவனது உடல் முழுமையிலும் வியர்வை வெள்ளம் ஆறாகப் பெருகியோடிற்று. அவனது விழிகள் அசைவற்றுக் குத்திட்டு விட்டன.

பின்னர், அசுரக் கூட்டத்தினர் எழுந்து மீண்டும் கூத்தாடத் தொடங்கினர்! சுற்றிலும் இருந்த வாத்தியக்காரர்களும் கூட அவற்றை முழக்கியவண்ணமே ஆடினர். ஆஹா! எத்தகைய கோர நர்த்தனம்! உண்மையில், விஜயனுக்கு அப்பொழுது செவிகள் மட்டிலும் சுவாதீனத்துடன் இருந்தால் அவை அந்தக் கணமே செவிடாகவேயல்லவா ஆகியிருக்கும்? அச்சப்தங்களினால், அவனது இதயமும் கூடச் சுக்குநூறாகவல்லவா வெடித்திருக்கும்? நல்லவேளையாக அவனுக்குச் செவியுணர்ச்சி இல்லாமல் போய் விட்டது.

ஏறக்குறைய இரண்டு நாழிகை காலம் அவ்வசுரக் கூத்துக்கள் நிகழ்ந்தன. முடிவாக ஒருவன், பயபக்தியுடன் அந்தச் சிலையினிடம் சென்று, அதன் காலடியில் இருந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டு வந்தான். ஆ! அது என்ன? 'பளபள' வென்றிருந்த ரம்பக் கத்திதான் அது! அதன் ஒளியில் கண்களே கூசின.

விஜயனுக்கு விஷயம் முழுமையும் இப்பொழுது தான் விளங்கிற்று. அவனது இதயத்தின் துடிப்புகள் நிமிஷத்துக்கு ஆயிரமாயிரம் தடவைகள் முழங்கின. நெஞ்செல்லாம் வறண்டுபோய் விட்டது.

அந்தக் கத்தியைக் கையில் எடுத்தவன், நடனமிட்டபடியே ராஜகுமாரனை நெருங்கி வந்தான். பக்கத்திலிருந்த கூட்டம் முழுமையும் அட்டகாசமான ஆரவாரங்கள் செய்தன. வாத்தியங்களின் முழு ஒலிகளும் பீறிட்டுக் கொண்டு வெளியாயின.

கொலைகாரன் ராஜகுமாரனை நெருங்கி வந்து நின்று, அவனை நோக்கி ஏதோ சைகையிட்டான். பின்னர், கைவாளை அவனது தலைக்கு நேரே உயர்த்தித் தூக்கிப் பிடித்தான். அப்பொழுது ராஜகுமாரனின் கண்களுக்கு உலகம் வேகமாகச் சுழன்றது—!

* * *

ராஜகுமாரன் காணமற் போன மறுதினம் காலை, அரண்மனையில் பெரும் திமிலோகமே நிகழ்ந்தது! ராஜகுமாரன் படுத்திருந்த மஞ்சத்துடன் அவனைக் காணோம் என்பதை முதன் முதலாக இளையராணியான மல்லிகா தான் அறிந்தாள். பின்னர், விஜயனை



வளர்ந்த செவிலித்தாய் அறிந்தாள். அதன் பின்னரோ-செய்திகள் பலவாறாகப் பெருகி, அரண்மனையின் மூலைமுடுக்குகளிலெல்லாம் பரவின!

விக்கிராந்த பூபதி பெரும் கவலைகள் கொண்டு, நாலாபுறங்களிலும் ஆட்களை அனுப்பினார். தாமே சென்று அரண்மனையின் பல பாகங்களையும், தோட்டம், துரவு முதலிய இடங்களிலும் தேடத்தொடங்கினார். இளைய ராஜகுமாரனோ, உள்ளம் பதறினான். ஒரு கணமும் அண்ணனை விட்டுப் பிரியாத அவன் மனத்துக்கு எல்லையற்ற துயரங்களும் கவலைகளும் ஏற்பட்டிருந்தன. ஆனால்-பாவம்! யாருடைய முயற்சியிலும் ராஜகுமாரன் கிடைக்கவில்லை.

ஒரு நாள், இரண்டு நாள் — இவ்வாறாக, ஒரு வார காலமும் சென்று விட்டது.





நாலாதிசைகளிலும் சென்றிருந்த அரண்மனைச் சேவகர்கள், தோல்வியுடன் திரும்பி வந்து, இல்லையென்ற செய்தியைத் தான் அறிவித்தார்கள்.

அன்று விக்கிராந்தபூபதி சபையைக் கூட்டியிருந்தார். வழக்கம் போன்று, மந்திரிகள், சேனாபதிகள், நகரத்தின் முக்கியஸ்தர்கள், யாவரும் சபையிலிருந்தனர். அரசர், சபையில் தம் மூத்தகுமாரனை விஜயன் காணாமற் போன செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துவிட்டு, இளைய குமாரனை விமலனுக்கு இளவரசாகப் பட்டம் சூட்டுவதைப் பற்றி ஆலோசனைகளைக் கோரினார். வெகு நேரம் வரையில், மந்திரிகளோ, பிரதானி

களோ எத்தகைய பதிலும் கூறுமலே உட்கார்ந்திருந்தனர். பின்னர் ஒவ்வொருவராக எழுந்து தத்தம் அபிப்பிராயங்களையும் கூறினர். ஒரு சாரார், அரசர் பெரிய மகாராணிக்குக் கொடுத்த வாக்குகளின்படி விஜயனுக்கே முடி சூட்ட வேண்டுமெனவும், அவனைத் திரும்பவும் தேடிக்கண்டு பிடித்து வரும் வரையில் முடி சூட்டு விழாவை ஒத்தி வைக்கலாமென்றும் கூறினர். மற்றொரு கூட்டத்தினரோ, பெரிய ராஜகுமாரனைக் கண்டு பிடித்துக்கொண்டு வந்தாலும், அவன் ஊமையாக இருப்பதால் அவன் பட்டத்துக்குத் தகுதியற்றவனென்றும், அதனால் விமலனுக்கே முடி சூட்ட வேண்டு மெனவும் கூறினர்.

இத்தகைய நிலைமைகளினால் அரசர் எவ்விதமான முடிவுக்கும் வரமுடியாதவராகி, கவலைகளுடன் உட்கார்ந்திருந்தார். ஆனால், முதல் மந்திரியான மித்திரகேதுவின் ஆலோசனைகளின்படி, அச்சபையில் வாக்குப்பதிவுகளும் நடத்தப்பட்டன! பெரியவனான விஜயனுக்கே முடி சூட்ட வேண்டுமென்று கூறியவர்களெல்லாம், மீண்டும் தங்களது கருத்துக்களைப் பற்றிக் கடுமையாக விவாதித்தனர். அப்பொழுது 'கணீ'ரென்று ஒரு இளங் குரல் கேட்டது!

"தந்தையே! பிரதானிகளே! என்னை மன்னிக்க வேண்டுகிறேன்! இளவரசுப் பட்டம் எனக்கே சூட்டவேண்டுமென்று நீங்களெல்லாம் கோருகின்றீர்கள். அப்பதவியை வகிக்க நான் தயாராகவில்லை! அத்தகைய ஸ்தானத்தில் இருக்கவேண்டியவர், எனது தமையனான விஜயன் தான்! அவன் வாயற்ற பிறவியாயிற்றே யென்று நீங்கள் கருதலாம். ஆனால், பட்டத்தை வகிக்கும் அவனுக்கு, என்னுடைய நாவன்மையும், செவிகளுமே உற்ற கருவியாக இருக்கும்! ஆகவே, அவரைக் கண்டுபிடித்து அழைத்து வரும்வரையி , முடி சூட்டு விழாவையே நிறுத்தி வைக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்!" இவ்வாறு கூறிக் கொண்டே அரசகுமாரன் விமலன் எங்கிருந்தோ ராஜசபைக்கு வந்து கொண்டிருந்தான்!

அரண்மனையின் அந்தப்புரத்துக்குள் ராணியான மல்லிகா துயரமான முகத்துடன் உட்கார்ந்திருந்தாள். அவள் எதிரே இளைய ராஜகுமாரனான விமலன் கடுங் கோபத்தைக்கொண்ட இளம் சிங்கம் போன்று குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்தான்.

"குழந்தாய்! உனக்குப் பட்டம் சூட்டப்பெற்று, நீ இந்த நாட்டை ஆள வேண்டுமென்று நான் எவ்வளவு ஆசை கொண்டுள்ளேன், தெரியுமா?" என்றுள் தாயான மல்லிகா.

"அம்மா! உங்களுக்கு ஆசையிருப்பது இயற்கைதான். ஆனால்! எதில் நியாயமிருக்கிறதோ, எதை மக்கள் நீதியாக நினைக்கிறார்களோ, அதைத்தானே நாம் செய்ய வேண்டும். ஆகவே, எனது தீர்மானத்தைத் தாங்கள் மாற்றக் கூடாது" என்றுன் விமலன்.


தாய் அவனைத் தம் அருகில் உட்கார வைத்துக்கொண்டு, அவனது முதுகை அன்புடன் வருடினுள். "குழந்தாய் நீ சிறுவன். ஒன்றுமறியாமல் உளறுகிருய். நீ முடிசூட்டிக் கொண்ட பின்னர், இந்த நாட்டை மட்டிலுமா ஆளப் போகின்றாய்? அடுத்துள்ள உன் அத்தையின் ராஜ்யத்தையும் கூட, நீ தான் ஆளப்போகின்றாய்! கணவரை இழந்த உன் அத்தை, இப்பொழுது தானே மகாராணியாக இருந்து அரசாண்டு வருகிருள். அவளது பெண்ணான மேகலாவை நீ பார்த்திருக்கிறாயா? பார்த்திருந்தால் என்ன சொல்லுவாயோ? நீ அத்தையின் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளுவதன் மூலம், அந்த அரசுரிமையும் உனக்குத்தான் கிடைக்கப் போகிறது!" என்றுள் மல்லிகா.

அப்பொழுது விமலன் பதில் கூறுமல் பெருமூச்செறிந்தான். "அம்மா! நீங்கள் சொல்லுவதை மறுக்கவேண்டுமென்று நான் எண்ணவில்லை. ஆனால், என் தந்தையார் பெரியம்மைக்குக் கொடுத்த வாக்குகளினால் உள்ளம் உருகித் துயரப்படுவதை என்னால் சகிக்க முடியவில்லை. தவிரவும் அண்ணன் இருக்கும்போது, தம்பியான நான் பட்டத்தை ஏற்பதை நான் சிறிதும் விரும்பவில்லை" என்றுன்.

விமலனின் பதிலால், ராணிமல்லிகாவுக்குக் கடுங்கோபமே ஏற்பட்டு விட்டது. "நீ ஒரு முட்டாள்! உன்னைச் சிம்மாதனத்தில் அமர்த்திக் காண வேண்டுமென்ற ஆசைக்காக, எவ்வளவோ கஷ்டங்களுடன் முயன்றேனல்லவா? நான் பைத்தியக்காரி!—" என்று கூறினுள் மல்லிகா.

விமலன் திடுக்குற்றவாறு தாயை நோக்கினுன். "அம்மா! அப்படியானால், அண்ணன் காணமற் போனதற்கு நீங்கள் தானு காரணம்?—" என்று கேட்டான் பதற்றத்துடன்.

ராணி அப்பொழுது தன் கோபம் நிறைந்த விழிகளால் அவனை நோக்கினுள். "உன் அண்ணனை நான் ஒன்றும் செய்து விடவில்லை! உலகத்தில் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் தலை விதிப்படிதான் நடக்கும்!" என்றுள் மல்லிகா. (தொடரும்)



மணமக்கள் : முத்தையா — தனபாக்கியம்

திருச்சி ஜில்லா வீரமச்சாம்பட்டி ஸ்ரீ கருப்பையா பிள்ளை குமாரரும், இலங்கை டிக்கோயா கலைமகள் கம்பெனி பங்காளியுமான திருவளர் செல்வன் முத்தையாவுக்கும், மேற்படியூர் ஸ்ரீ மருதை பிள்ளை அவர்களின் திருவளர் செல்வி தனபாக்கியத்திற்கும் 30-8-56 அன்று மணமகன் இல்லத்தில் வெகு விமரிசையாக நடைபெற்ற திருமணத்தின்போது சமூகமளித்தும், வாழ்த்துச் செய்திகள் அன்பளிப்புகள் அனுப்பியும் சிறப்பித்த அன்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எங்களின் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


கடல்
கண்ட
கனவு
சோமு
மூன்றாம்
பாகம்
பல்லவ விஜயம்

கடல் கொண்ட கனவு

முதல் அத்தியாயம்

விடி வெள்ளி

சமணத் துறவி வானத்தைப் பார்த்தார். விடி வெள்ளி எழுந்து நின்றது. சாருகேசியின் கதையை நிறுத்தி விட்டு, அந்த ஏழடிப் பட்டத்திலிருந்து புறப்படுவதற்கு முனைந்தார் அவர்.

''என்ன துறவிகளே! அதற்குள் எழுந்திருக்கப் பார்க்கிறீர்கள்!'' என்றான் சித்திராங்க பூபதி.

''விடி வெள்ளி முளைத்து விட்டதல்லவா!'' என்று சொல்லிச் சிரித்தார் சமணத் துறவி.

''சாருகேசியை நடுத் தெருவில் நிறுத்தி யிருக்கிறீர்களே! கையில் குழந்தையை ஏந்திக் கொண்டு வெறியோடு ஓடிய சாருகேசி என்ன ஆனாள்?'' என்று கேட்டான் பூபதி.

''ஓ! அது கூடச் சொல்லித் தெரிய வேண்டிய விஷயமா! வலம்புரி அம்மனுடைய கோவிலின் சுவரிலே யிருந்த ஓவியத்தைப் பார்த்தாள் அல்லவா? அதிலிருந்து யூகித்துக் கொள்ள வேண்டியதுதானே?'' என்றார் துறவி.

''அப்படியானால்?''

''இளவரசே! சுவர்ச் சித்திரத்திலே காணப்பட்ட ஒரு தாயின் உள்ளத்தை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டதாகச் சாருகேசி சொன்னாள் அல்லவா? அப்படியானால் என்ன அர்த்தம்?'' என்று துறவி கேட்டார், சித்திராங்க பூபதியைப் பார்த்து.

''அடடா! அப்படியானால் சாருகேசியும் தன்னுடைய குழந்தையைப் படகிலே மிதக்க விட்டு விட்டாளோ?'' இப்படிக் கேட்டான் பூபதி. அவனுடைய குரலில் ஆற்றாமை தொனித்தது.

''சித்திராங்க பூபதி! நீங்கள் ஏன் இத்தனை வேதனையோடு இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள்? சாருகேசி அத்தனை பரிதாப நிலையில் வேறு என்ன செய்யக் கூடும்! வலம்புரித் தீவின் மீது படையெடுத்து வந்திருந்த பாண்டியச் சேனை அந்தத் தீவை ஒரே தரை மட்டமாகச் செய்வதற்கு முனைந்திருந்தது. சாருகேசியோ தன்னுடைய முயற்சியினால் அந்தத் தீவுக்கு ஒரு மகத்தான சேவை செய்யத் தீர்மானித்தாள். அந்தத் தீர்மானத்தின்படி அவள் நடந்து கொள்ளவும் செய்தாள்! அந்த மகத்தான காரியத்தைச் செய்வதற்கு முன்பு தனது குழந்தைக்கு இப்படி ஒரு வழி வகுத்து விட்டாள் அவள்!''

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? சாருகேசி அத்தனை தூரத்துக்குத் தனது மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாளா?'' என்று கேட்டான் பூபதி.

''ஆமாம். ஆனால் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாள் என்று எப்படிச் சொல்ல முடியும்! தனக்கு மரணம் வரப்போவது நிச்சயம் என்று கண்டு கொண்ட சாருகேசி, தனது குழந்தைக்கு இப்படி ஒரு பிழைக்கும் வழியை அன்பினால் வகுத்துக் கொடுத்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்!'' என்றார் சமணத் துறவி.

''பெரியவரே! நீங்கள் பாசபந்தங்களைக் களைந்து நிற்கும் ஒரு துறவி! உங்களுடைய உள்ளத்துக்கு அப்படித்தான் தோன்றும். ஆழ்கடலிலே தன்னந்தனியாக ஒரு குழந்தையை அதிலும் பெண் குழந்தையைப் படகிலே வைத்துத் தள்ளிவிட வேண்டும் என்றால் அது...''

சித்திராங்க பூபதி அந்த வாக்கியத்தை முழுதும் சொல்லி முடிக்கும் முன்பே சமணத் துறவி குறுக்கிட்டார்:

''அதுதான் அன்பு! சாருகேசியின் நிலைமையில் இன்னொரு தாய் அப்படித்தான் செய்திருப்பாள். ஏனென்றால் தனது குழந்தையைப் படகிலே மிதக்கவிட்டு விட்டுச் சாருகேசி உயிரோடு வாழவில்லை. தனது தாய் நாட்டை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்து அந்த முயற்சியிலே தானும் வீர மரணம் அடைந்தாள் உத்தமி சாருகேசி!''

இப்படிச் சொல்லிக் கொண்டே சமணத் துறவி பெருமூச்சு விட்டார்! அவருடைய கண்கள் கலங்கின. சற்று நேரத்துக்கு முன்பு துறவியின் உள்ளத்தைப் பற்றிப் பூபதி விமர்சனம் செய்தான் அல்லவா. அதே பூபதி இப்பொழுது அதே துறவியின் கண்கள் கலங்குவதைப் பார்த்ததும் வியப்போடு துயரமுமே அடைந்தான்! இதைக் கவனித்த துறவி தமது பேச்சை நிறுத்தாமல் மேலும் சொல்லுவார் :—

''வலம்புரித் தீவின் இளவரசே! இந்தத் தமிழ் நாட்டில் சாருகேசியைப் போன்ற எத்தனையோ வீரப் பெண்மணிகள் பிறந்திருக்கிறார்கள். தமிழ்க்

குலம் பெண்மையின் தியாகத்துக்கும் வீரத்துக்கும் புகழ் பெற்ற புண்ணிய பரம்பரை! அப்படிப்பட்ட வீரத்திருக் குலத்தின் ஒரு கிளைதான் வலம்புரி நாட்டு மக்களின் பரம்பரையும்! எனவே, சாருகேசியின் அன்பையும் வீரத்தையும் தியாகத்தையும் பாண்டிய மன்னனே உரிமையோடு பாராட்டி வியந்ததில் வியப்பில்லை!''

துறவி இப்படிச் சொன்னதும் சித்தி ராங்க பூபதி கேட்டான்: ''பெரியவரே! அப்படியானால் சாருகேசியைப் பற்றி யும் அவளுடைய இணையற்ற தியாகத் தைப் பற்றியும் பாண்டிய மன்னன் தெரிந்து கொண்டானா? தமிழ் நாட்டி லிருந்து வலம்புரித் தீவுக்குப் படை யெடுத்துச் சென்ற பாண்டிய அரச குமாரன் அந்த வீராங்கனையான சாரு கேசியைச் சந்தித்தானா?''

சித்திராங்க பூபதி இந்தக் கேள்வி யைக் கேட்டதும் சமணத்துறவி நீண்ட நேரம் விடையே சொல்லாமல் மௌன மாக இருந்தார். அவருடைய விழிகள் கலங்கியதோடு நிற்கவில்லை. சாந்தமும் அமைதியும் நிறைந்த அந்தப் பெரிய வரின் கண்களிலிருந்து 'மள மள' என்று கண்ணீர்த் துளிகள் பொழிந் தோடின! இதைக் கண்டதும் பூபதிக் குக் குழப்பம் உண்டாயிற்று. கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்டு விட் டோமோ என்று ஒரு கணம் துணுக் குற்றான். சொன்னான்:

''பெரியவரே! சாருகேசியின் வர லாற்றை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்திவிட்டு நீங்கள் இந்தப் பாறையி லிருந்து எழுந்திருக்க முயன்றதும் முதலில் நான் திகைப்பு அடைந்தேன். அவளுடைய முடிவு என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ள விரும்பிய தால் மேலே மேலே கேள்விகளைப் போட் டேன். ஆனால் என்னுடைய கேள்வி களுக்கு விடை சொல்வதற்கு நீங்கள் எவ்வளவு தயங்குகிறீர்கள் என்பதும், சாருகேசியின் வரலாற்றை மேற் கொண்டு சொல்ல ஆரம்பிக்கும்போதே உங்களுடைய உள்ளம் எத்தனை வேத னைப் படுகிறது என்பதும் எனக்கு இப் பொழுது நன்றாகத் தெரிகிறது! பாச பந்தங்களைக் களைந்தெறிந்த துறவி யென்றும், உங்களுடைய உள்ளத்தில் ஈரம் இராது என்றும் ஆத்திரத்தில் நான் சொல்லி விட்டதற்காக என்னை மன்னிக்க வேண்டும். இந்த வரலாற் றைக் குறையும் சொல்லுவதற்கு உங்க ளுடைய மனம் வேதனைப்படுமானால், என்னுடைய ஆவலை அடக்கிக் கொள்ளு கிறேன். உங்களை இனிமேல் துயரத் துக்கு உள்ளாக்க மாட்டேன்!'' என்றான் சித்திராங்க பூபதி.

மௌனமாக இருந்த சமணத் துறவி தமது கலங்கிய கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டார். ஏதேதோ சஞ்சல மான நினைவுகளிலே சென்ற மனத்தை மீண்டும் தன் வயத்துக்கு இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தி, இடத்தோடு சித்திராங்கனைப் பார்த்துச் சொன்னார்:

''பூபதி! சந்திரசூடன் செய்துவிட்ட அந்தக் கடுமையான பாபத்தை நினைத் தால் எனக்கு அவனிடம் எல்லை மீறிய கோபம் உண்டாகிறது! அவனை எப்படி யெல்லாமோ தண்டிக்க வேண்டும் என்று சீற்றம் ஏற்படுகிறது. அதே சீற்றத்துக்கு மத்தியில் சாருகேசி அனு பவித்த துன்பங்களை எண்ணும் போது உள்ளம் நிலையிழந்து கண்ணீர் வடிக் கிறது. இந்த உணர்ச்சிகளை யெல்லாம் உங்களிடம் காட்டிக் கொள்ளாமல் கதையை மட்டும் சொல்லலாம் என்று முயன்றேன். முடிய வில்லை. ஆதலால்



தான் இந்தக் கட்டத்தில் மெதுவாகத் தப்பித்துக் கொள்ளலாம் என்று எழுந் திருக்கக்கூட முயற்சி செய்தேன்! ஆனால் அது தவறு. விடிவெள்ளி முளைத்து விட்டது என்பது உண்மைதான். ஆனால் சூரியோதயம் இன்னும் ஆகவில்லை! சூரியன் உதிக்கும் வரை இந்த ஏழடிப் பட்டத்தை விட்டு நகருகிற உத்தேசம் எனக்கு இல்லை. ஆகையினால் சாருகேசி தன்னுடைய பெண் குழந்தையைப் படகிலே மிதக்க விட்டு விட்டுத் தன் னுடைய மரணத்தை எப்படி எதிர் கொண்டு அழைத்தாள் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அதைக் கேட்டு முடித்த பிறகு, சந்திரசூட னிடம் உங்களை அழைத்துப் போவேன். நீங்கள் மாமல்லபுரத்திலும், குங்கும மாளிகையிலும் சந்தித்த விசித்திர சித்தரையும் விடியற்காலையிலே சந்திக் கப் போகிறீர்கள்! அப்பொழுது நாம் இருவரும் அவரிடம் சில முக்கிய

மான முடிவுகளைத் தெரிவிக்க வேண்டும்; புரிந்ததா?'' என்றார் சமணத் துறவி.

''சித்தரா? அவர் இங்கே வரப் போகிறாரா? சந்திர சூடனும் அவரோடு இங்கே வரப் போகிறாரா?'' என்று எல்லையற்ற வியப்புடன் கேட்டான் சித்திராங்க பூபதி.

''ஆமாம்'' என்று ஒரே வார்த்தையில் விடை கூறிவிட்டுச் சமணத் துறவி மேலே கதையைத் தொடர்ந்தார்.

இரண்டாம் அத்தியாயம்
அன்னை பூமி!

கையிலேந்திய பெண் குழந்தையைக் கடலிலே விட்ட பிறகு, சாருகேசி மீண்டும் கோட்டை வாயிலை நோக்கி நடந்தபோது, வலம்புரித் தீவின் பரிதாபக் காட்சியை அவளால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை; கோபுரங்கள் எல்லாம் இடிந்து பொடி பொடியாகக் கிடந்தன! மாடமாளிகைகள் இருந்த இடங்கள் செங்கல்லும் கருங்கல்லுமாகச் சின்னா பின்னமாகக் கிடந்தன! இரத வீதிகள் ருத்திர பூமியாகக் காட்சி தந்தன. வலம்புரியம்மன் கோவிலின் சில பகுதிகளைத் தவிர மற்றச் சுற்று வட்டாரங்கள் அனைத்தும், சூனிய வெளியாக நின்றன! சாருகேசிக்குக் கண் கலங்கியது. உள்ளம் பதறியது. உடம்பெல்லாம் ஆடியது.

''வலம்புரித் தீவே! புண்ணியத் தாய் நாடே! நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகக் கலையை வளர்த்து வந்த கரங்கள் இப்பொழுது உன்னை அழித்து விட்டனவா! எந்த நாட்டிலிருந்து சித்திரமும், சிற்பமும், சங்கீதமும் இங்கே கைகோத்துக் கொண்டு வந்து குடியேறி வளர்ந்து நிலை பெற்றனவோ, அதே தாய்நாட்டு மக்கள் இப்பொழுது சேய் நாட்டைக் கொன்று தீர்த்து விடுவதற்குக் கங்கணம் கட்டி விட்டார்களா? வலம்புரி அன்னையே! உன்னுடைய கோவிலிலிருந்து பேரியாழ் போய்விட்டது என்றால் இத்தனை விபரீதங்களும் நடக்க வேண்டுமா? நூற்றுக் கணக்காக, ஆயிரக் கணக்காக, உன்னுடைய குழந்தைகளின் உதிரத்தைக் குடிக்க வேண்டும் என்று உனக்குப் பசி எடுத்து விட்டதா? யாழின் ஒலி உன்னுடைய செவிகளைக் குளிர வைக்கவில்லையென்றால், உன்னுடைய நெஞ்சிலும் உன்னுடைய வயிற்றிலும் இத்தனை பயங்கரமான பசி பெரும் நெருப்பாகக் கிளம்பி அனல் விட்டு எரியுமா! என் அருமைத் தாய் நாடே! உனக்கு இத்தனை பயங்கரமான முடிவு வந்து விட்டதா!''

இப்படியெல்லாம் கதறினாள், ஓலமிட்டாள் சாருகேசி!

பாண்டிய சேனை நகரத்தைப் பாதி அழித்தும் அங்கங்கே அவசரத்தில் பாதி அழியாமல் விட்டும் ஒரே கோபாவேசத்தோடு கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது!

''நில்லுங்கள்! நில்லுங்கள்!'' — இப்படி ஒரு கதறல் கேட்டது.

''ஏ மனித பூதங்களே! நில்லுங்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வரும் அழகையெல்லாம் அழித்துக் கொண்டு செல்லும் காலதூதர்களே! நில்லுங்கள்!''

இப்படிக் கதறினாள் சாருகேசி! குதிரைகளும், யானைகளும், ரதங்களும் வாளேந்திய வீரர்களுமாக வேகத்தோடு நடந்தார்கள்! சாருகேசி நின்ற இடத்துக்கு முன்னாலும் சேனைக் கூட்டம்; அவளுக்குப் பின்புறமும் புதிது புதிதாக வந்து கொண்டிருந்தது படை!

சாருகேசி எத்தனை கதறியும் முன்னால் படர்ந்து சென்ற வீரர்கள் பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை! பின்னால் நடந்து வரும் வீரர்களோ சாருகேசியை இலட்சியம் செய்யவேயில்லை! ஆனாலும் கதறினாள் சாருகேசி. மறு விநாடி அந்த ரத வீதியிலே விழுந்து பாதையை மறித்தாள் அவள்!

''என்னை மிதித்துக் கொண்டு செல்லுங்கள்! கோட்டை வாசலை அழிப்பதற்கு முன்பு இந்த ஏழைப் பெண்ணின் உடம்பை அழித்து இந்தப் புண்ணிய பூமியிலே தேய்த்து மெழுகி விடுங்கள்!''

இவ்வாறு பைத்தியம் பிடித்தவளைப் போலக் கதறி கொண்டே, வலம்புரி மண்ணின் புழுதியிலே புரண்டாள் சாருகேசி! கோட்டை வாசலிலே கண்ணும் வானிலே கையும், தங்களுடைய அரசனின் கட்டளையிலே மனமுமாக வெறியிலே நடந்த வீரர்கள் சாருகேசி என்ற பெண்ணை, சாருகேசி என்ற மனித உடம்பை, சாருகேசி என்ற புழுதி மூட்டையை, கவனிக்கவில்லை.

ஆயிரம் ஆயிரம் குதிரைக்குளம்புகள்! ஆயிரம் ஆயிரம் மனிதக் காலடிகள்! மிருகம், மனிதன் என்ற வேற்றுமை



இல்லாமல் சாருகேசியின் உடம்பிலே நடந்தன! ஆனால் இதோ! அரச குமாரனின் ரதம் வருகிறது. '' நிறுத்துங்கள்! தேரை நிறுத்துங்கள்!'' — பதற்றத்தோடு இப்படி ஒரு கட்டளை பிறந்தது! ஒருகண நேரத்தில் தேர் நின்றது. அதே கணம் அத்தனை வீரர்களும் நின்றார்கள்.

'' என்ன பரிதாபம்! ஒரு பெண்ணை மிதித்துக் கொண்டா செல்கிறீர்கள்! அட தமிழ்க் குலமே! அட வீரர்களே! உங்களுடைய ஆண்மையும் வீரமும் எங்கே போயிற்று! வழிவழியாக வந்த தமிழ் மரபு எங்கே போயிற்று?'' இப்படி வந்தது ஒரு கம்பீரமான குரலிலே தவழ்ந்த எல்லையற்ற அந்த அநுதாபம்! அரசப் பண்போடு வந்தது அது.

சேனையை நடத்திச் சென்று கொண்டிருந்த பாண்டிய அரச குமாரன் மேற் கண்டவாறு வார்த்தைகளைச் சொல்லும் போதே அவனுடைய கையும் காலும் பதறின. தேரிலிருந்துகீழே குதித்தான் அவன். ஆனாலும் என்ன பயன்? சாருகேசி என்ற மூடு ஜீவன் அங்கே இல்லை; பாதி உயிர் வான வெளியிலும், பாதி உயிர் பூமியிலுமாக ஊசலாடியது.

வேகமாக அணி, அணியாக, நடந்து செல்லும் பாண்டிய வீரர்கள் அப்படி அப்படியே அங்கங்கே நின்று விட்டார்கள். இதற்குள் கோட்டை வாசலை நோக்கி விரைந்து சென்று விட்ட வீரர்கள், பின்னால் தொடர்ந்து வந்த வியூகங்களைக் காணாமல் திகைத்து நின்றார்கள். தலைமை நாயகர்களாக வந்த வீரர்கள் மேற்கொண்டு கட்டளை கொடுப்பதற்குத் தெரியாமல் விழித்தார்கள். சக்கர வியூகத்தின் தலைவன் தனது குதிரையை மறுபக்கம் திருப்பி, பின்னால்வந்த வீரர்கள் என்ன ஆனார்கள் என்று தெரிந்து கொள்வதற்கு விரைந்தான்.

'' அம்மா! தாயே!'' என்றான் பாண்டிய அரச குமாரன். அவனுடைய குரல் கம்மிற்று. தரையிலே வீழ்ந்து குற்றுயிராகக் கிடந்த சாருகேசிக்கு அருகிலே வந்து, தனது இரண்டு கரங்களையும் கூப்பினான். அவனுடைய நிலையைக் கண்ட வீரர்கள் இதற்குள் பல திசைகளிலும் ஓடினார்கள். எங்கிருந்தோ ஒரு குவளையில் தண்ணீர் வந்தது. ஒரு வீரன் அங்கியை விசிறியாகக் கிழித்து எடுத்து வந்தான். நூறு வீரர்கள் சக்கரமாக வளைந்து அணி



வகுத்துக் கூட்டத்தின் நெருக்கத்தைத் தடுத்து நின்றார்கள்.

''வீரத் தமிழன்னையே! நமது பரம்பரையிலேயே இல்லாத பிழை நேர்ந்து விட்டது! மன்னிக்கவேண்டும் தாயே!''

சாருகேசி கண்களைத் திறந்தாள். குவளையிலே யிருந்த தண்ணீரைப் பரிவோடு அவளுக்கு அருகிலே கொண்டு போனான் பாண்டிய அரச குமாரன்.

என்ன ஆச்சரியம்! எங்கிருந்து அந்த உடம்புக்குள்ளே மின்னலின் சக்தி பாய்ந்ததோ! கண்களைத் திறந்த சாருகேசியின் முகத்திலே ஒரு பிரகாசம் தோன்றியது. அணையப்போகிற விளக்கு பிரகாசத்தோடு ஜோதியைப் பன் மடங்கு பெருக்கிற்று.

''வீரர்களோடு வீரர்கள் சண்டை செய்வதுதான் வீரம்! கலைஞர்களோடு போர்ப் படைகள் யுத்தம் செய்வது வீரம் ஆகாது! அரசகுமாரா! நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகக் கலைகளுக்கு வளர்ப்புப் பண்ணையாக இருந்து வருகிறது இந்த அழகுத் தீவு! நீ மனிதர்களைக் கொல்; வீரர்களின் உடையிலே வலைய வருகிற இந்த நாட்டின் மனிதப் பூச்சிகளைக் கொல்; அதையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் உன்னுடைய முன்னோர்கள் விதையூன்றி இந்தப் பூமியிலே வளர்த்த கலைப் பயிரை நீ அழிக்கிறாய்! அதைச் செய்வதற்கு உன்னை விட மாட்டேன். இந்த உடம்பில் ஒரு துளி உதிரம் நிற்கும் வரை இந்தப் புண்ணியத் திரு நாட்டின் கலைச் செல்வத்தை இந்தப் பாணன் மகள், இந்த அனாதைப் பெண் இந்தச் சாருகேசி அழியவிடமாட்டாள்!.....''

இதற்கு மேல் வார்த்தைகள் வரவில்லை. பொறிகளைத் தெறித்த சுடர் நின்று விட்டது! அரச குமாரனின் கண்களிலிருந்து இரண்டு துளிக் கண்ணீர், அந்த ஆன்மாவின் தாகத்தை, வறட்சியைக் குளிர வைக்க வந்தது போல இதோ விழிகள் கலங்குகின்றன. அடுத்தகணம் உத்தரவு பிறக்கிறது.

''நில்லுங்கள்! வீரர்களே, நில்லுங்கள், கோட்டை வாசலுக்குள் நுழைவதற்கு முன்னால் சமாதானக் கொடியை உயர்த்துங்கள்!''

பாண்டிய அரச குமாரனிடமிருந்து இந்த உத்தரவு பிறந்த மறுவிநாடி, குதிரைகளும், ரதங்களும், வீரர்களும் படர்ந்து ஓடினார்கள். முன்னால் சென்ற பாண்டிய வியூகத்தின் சேனாநாயகன் கொடியை உயர்த்தினான். தென்னாடுடைய சிவனை வாயாரப் போற்றிக் கொண்டு சமாதானக் கொடியை உயர்த்திப் பிடித்தது பாண்டியர் படை.

இதற்குள் வலம்புரி அரச மாளிகைக்குள்ளே என்ன நடந்தது?

கோட்டை வாசலை அடைத்துவிட்ட பிறகு மந்திரச் சுற்றம் கூடி ஒரு முடிவுக்கு வந்து எதிரிகளை எப்படி எதிர்ப்பது என்று தீர்மானிப்பதற்குள் வலம்புரித் தீவின் சிற்பங்கள் எல்லாம் பொடிப்பொடியாகிப் போய் விட்டன என்ற செய்தி அரண்மனையிலிருந்த அத்தனை உள்ளங்களையும் நெருப்பிலே கொண்டு போட்டது போல் துடிதுடிக்கச் செய்தது! ஆத்திரமும் ஆவேசமும் தந்த வெறியிலே முதுமைப் பருவத்தின் தள்ளாமையையும் மீறிக் கொண்டு வலம்புரிப் பேரரசர் போர் வீரராக ஆயுதம் தரித்து நின்றார். அவருக்கு முன்னால் பாய்ந்தோடி வந்து வாளைத் தன் கையிலே பிடித்தாள் தரங்கவல்லி! இரகசிய வாசலில் நுழைந்து உயிர் தப்பிக்க வந்த குடி மக்கள் எல்லாரும் வேலும், சூலும், வாளும் ஏந்தி அணிவகுத்து நின்றார்கள்.



சாடிக் கொண்டு பறக்கிற ஒரு குதிரையிலே போர் உடை தரித்து வாளேந்திய கோலத்திலே வந்தாள் தரங்கவல்லி. "இத்தனை பெரிய கலைச் செல்வங்கள், இத்தனை சௌந்தரியமான சிற்பங்கள், மாடமாளிகைகள் — இத்தனையும் அழிந்து போன பிறகு உயிரைத் தாங்கும் பூச்சிகளாக இந்த மனித குலம் வலம்புரித் தீவிலே உயிர்ப் பாரத்தைச் சுமந்து ஊர்ந்துசெல்வதில் அர்த்தம் இல்லை!" என்ற முடிவிலே, அத்தனை பெரிய பாண்டியப்படையை எதிர்த்து மடிவதற்காகத் தரங்கவல்லியின் தலைமையிலே அத்தனை சிறிய படை கோட்டை வாசலைத் திறந்து கொண்டு வெளியே வந்தது. ஆனால் இதென்ன!



"அம்மா! இளவரசியாரே! சமாதானக் கொடியைப் போல அல்லவா தெரிகிறது!" என்றார் மந்திரநாயகம்! எங்கோ குகைக்குள்ளேயிருந்து பேசுவது போல் இல்லை அந்தப்பேச்சு! பாண்டியர்கள் படையெடுத்து வந்தார்கள் என்ற செய்தியைக் கேட்டதும் ஒலித்ததே அந்த நடுக்கம் இல்லை குரலில்! ஏதோ தங்களுக்குப் பயந்து போய் எதிரிகள் சமாதானக் கொடியைப் பிடித்துவிட்டால், எத்தனை பெருமிதம் கலந்த ஏமாற்றம் தொனிக்குமோ, அத்தனை ஏமாற்றம் இருந்தது அவருடைய குரலில்!

"சமாதானக் கொடியா!" என்று அலட்சியத்தோடு கேட்டான் தரங்கவல்லி! "சமாதானக் கொடியா!" என்று ஆயிரம் குரல்கள் அந்த வார்த்தைகளை எதிரொலித்தன! அத்தனை குரல்களிலும் ஒரு ஏமாற்றம்; தாய் நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்து வீர மரணம் அடைவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தும், அந்தச் சந்தர்ப்பம் இப்பொழுது கை நழுவுகிறதே என்ற ஏமாற்றம்! அத்தனை பேரும் அப்படியே திகைத்துப்போய் நின்றார்கள்.

பாண்டியர்களின் வியூகத்தைப் பிளந்து கொண்டு வெள்ளை நிறமான குதிரை ஒன்று, பனிக்கட்டி பாய்ந்தோடி வருவது போலக் கோட்டை வாசலை நோக்கி வந்தது. அதன்மீது வீற்றிருந்த நாயகன் தன்னுடைய வலது கையிலே சமாதானக் கொடியைத் தாங்கி நின்றான்.

"நில்லுங்கள்! உடன்படிக்கைப் புரவி வந்து விட்டது. வீரர்களே! தமிழரின் மரபு வழுவாமல், உருவிய வாள்களை உறையிலே செருகுங்கள்! சமாதானக் கொடி வருகிறது!" என்றாள் தரங்கவல்லி. அடுத்த கணம் வலம்புரித் தீவின் படை வீரர்கள், தாய் நாட்டுக்காகத் தியாகம் செய்யும் பொருட்டுத் தங்களுடைய உடலிலிருந்து வெளியே கொண்டு வந்து நிறுத்திய உயிரை மீண்டும் உடலுக்குள்ளே அனுப்புகிறமாதிரி, ஆயிரம் வாட்களையும் உறையிலே செருகினார்கள்.

பாண்டியர்களின் வியூகத்திலிருந்து, சமாதானக் குதிரையைப் பின் தொடர்ந்து வெள்ளை நிற ஆடைகள் அணிந்த நூறு வீரர்கள் மூன்று மூன்று பேராக அணிவகுத்து வந்தார்கள். சாந்தமும் அமைதியும் தொனிக்கும் வண்ணம் மென்னடை நடந்து வந்தார்கள் அவர்கள்! அவர்களைத் தொடர்ந்து மூன்று வெண்புரவிகள் ஓட்டமில்லாத சிறு நடையிலே மெதுவாக, அமைதியோடு வந்தன. இந்தப் புரவிகளைத் தொடர்ந்து அரசத் தேர் வந்தது. சற்றுத் தூரம் நகர்ந்து வந்த தேர், கோட்டை வாசலை நெருங்கவும் நின்றது. அதிலிருந்து கீழே இறங்கிய பாண்டிய அரசகுமாரன் உறவுக் கோலத்திலே மௌனமாக இரண்டு பாதங்களும் நிலத்திலே நிதானத்தோடு பதித்து நடந்து வந்தான்! சென்ற ஆண்டில் இதே கோட்டைக்குள்ளே மணமகனாகத் திருமணக் கோலத்திலே வந்த பாண்டிய குமாரன், இப்பொழுது அரச உறவு மனப்பான்மையிலே தரங்கவல்லியை நோக்கி நடந்து வருவதைப் பார்த்ததும், வலம்புரி அரசகுமாரி குதிரையிலிருந்து கீழே குதித்தாள். **(தொடரும்)**

இரும்



இதோ—

மீண்டும் ''ஒ. கே.'' வனஸ்பதி தயாரிப்பாளர்களே, முதன் முதலாக, ஒரு புதிய, உபயோகமுள்ள பரிசுத் திட்டத்தை, வாங்குபவர்களுக்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.




வனஸ்பதி கெடாமல், எப்பொழுதும் புதுமையாகவும், சுகாதாரமாகவும் இருக்க முதலில் லீவர்லிட் டின்களை ஏற்படுத்தியது ''ஒ. கே.'' வனஸ்பதி தான்.

''ஒ. கே.'' 1, 2, 5, 10 பவுண்டு வனஸ்பதி டின்களிலுள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்கு மாற்றாக, உங்களுக்கு அருகிலுள்ள ''ஒ. கே.'' வியாபாரியிடமிருந்து, உங்களுக்குப் பிடித்தமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பரிசாகப் பெறுங்கள்.

OK ஒ.கே வனஸ்பதி

ஒவ்வொரு அவுன்ஸிலும் 700 I. U. வைட்டமின் 'A' அடங்கியது.

இந்த ''விசேஷ வெகுமதி'' பற்றி மேலும் விவரங்கள் அறிய, உங்கள் ''ஒ. கே.'' வியாபாரியிடமிருந்து படங்களுடன் கூடிய 'போல்டரை' வாங்கி பாருங்கள். ''ஒ. கே.'' வனஸ்பதி வாங்குங்கள். 'இரும்' பரிசையும் பெறுங்கள்.



EP.

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட். மதராஸ் -1.

6—7-10


ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல் பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2



யோக சிகிச்சை

— சுந்தரம் —

டி. பி. நோயாளியின் கபம் மிகப் பொல்லாதது. இதை டி. பி. நோயாளிகள் உணர்ந்தால் சமூகத்துக்கு எவ்வளவோ நன்மை ஏற்படும். எச்சிலையும், கோழையையும் கண்ட இடத்தில் உமிழ்வதைப் போன்ற அபாயகரமான பழக்கம் வேறில்லை எனக் கூறலாம். இந்தக் கபம் காயக் காய இதிலிருக்கும் அம்சங்கள் எளிதில் அதிகமாக ஆகாயத்தில் கலக்கின்றன. இதில் புதைந்துள்ள டி. பி. பூச்சிகள் உயிர் பெற்று, சிறகு பெற்றவை போல் வெளியிடத்தில் இஷ்டப்படி பிரயாணம் செய்கின்றன. தான் ஒரு டி. பி. நோயாளி என்று அறியாமலேயே எத்தனையோ மனிதர்கள் இவ்வாறு ஆகாயத்தை விஷமாக்குகின்றனர்.

கபத்தில் டி. பி. பூச்சி இருப்பதை வைத்தியசாலைகளில் ஆராய்கின்றனர். பூச்சி இருந்தால் ஆராய்ச்சி விளக்கக் காகிதத்தில் இத்தகைய + குறி செய்கின்றனர். சில நோயாளிகளின் கபத்தைச் சோதனை செய்த பிறகு ஒரு + குறிக்குப் பதிலாக, இரண்டு மூன்று குறிகளும் தொடர்ச்சியாகப் போடப்படும். குறிகள் அதிகமாயிருந்தால் டி. பி. கிருமிகள் அதிகமாகப் பரவி இருக்கின்றனவென்றோ, அல்லது டி. பி. தீவிர நிலையில் இருக்கிறதென்றோ பொருள்.

டி.பி. நோயாளி எச்சிலையும் கபத்தையும் தனிப்பட்ட ஒரு பாத்திரத்தில் உமிழ வேண்டும். தகர டப்பாவும் உபயோகிக்கலாம். இந்த டப்பாவில் 'பினாயில்' அல்லது 'டெட்டால்' இரவங்களை ஊற்றி, சிறிது நீரும் கலந்து வைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் கபத்தில் உள்ள பூச்சிகள் நசியும். வெளியில் பரவ வழி ஏற்படாது. இந்தப் பாத்திரத்தை ஒரு தடவைக்குப் பல தடவைகள் சுத்தம் செய்ய வேண்டும். இன்னும் பினாயிலுடன் கலந்து சாக்கடைக்குள் சேர்த்துவிட வேண்டும்.

டி. பி. கிருமியிடத்தும் சில விசித்திரங்கள் உள்ளன. டி. பி. உள்ள பதியுடன் சதியும், டி. பி. உள்ள சதியுடன் பதியும், டி. பி. உள்ள தாய் தந்தையருடன் குழந்தைகளும் வருஷக்கணக்கில் நெருங்கிப் பழகினாலும், டி. பி. தொத்தாமல் போகும் விசித்திரத்தையும் காண்கிறோம்.

8. பாலின் மகிமை

ஆராய்ச்சி மூலம் இதற்கு விளக்கம் கூற முடியவில்லை. இவர்கள் உடலில் தடுப்புச் சக்தியும் வலிவுத் தன்மையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். சிலருக்குத் தொத்தவில்லை என்பதற்காக நமக்கும் தொத்தாது என்று விதிமுறைகளைக் கைவிடுதல் பேதைமை.

உணவு மூலமாக டி. பி. தொத்திக் கொள்ளும் என்பது மிகவும் உண்மை. மற்ற உணவுகளைக் காட்டிலும் பால் மூலம்தான் இந்த டி. பி. பரப்பப்படுகிறது. பசுவின் பால் இதில் அதிகப் பங்கு ஏற்கிறது. பால்தான் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் முக்கிய உணவு. இவர்கள்தான் இதை அதிகம் அருந்துகிறார்கள்; அருந்தவும் வேண்டியதுதான். பாலில் டி. பி. கிருமி இருப்பதற்குக் காரணம் பசுதான். பசுவுக்கு டி. பி. இருப்பதால்தான் அது கறக்கும் பாலிலும் டி. பி. கிருமிகள் இருக்கின்றன.

இந்த நிலைக்கு என்ன செய்வது? பசுவிடம் டி. பி. கிருமிகள் தொத்திக் கொண்டுள்ளதா என்பதைவெளிப்படையாகக் கண்டு கொள்ளுதல் இயலாததாகும். பசுவுக்கு டி. பி. நோய் இருக்கிறதா இல்லையா என்பதை அறிவது சாத்தியமற்ற விஷயம். பாலை நன்றாகக் காய்ச்சுதல் ஒரு முறையாகும். பாலிலுள்ள விஷக்கிருமிகளைக் காய்ச்சிக் கொல்லும் முறையை 'பாஸ்சரைஸிங்' என்று குறிப்பிடுகின்றனர். மேல் நாடுகளில் அரசாங்கத்தின் ஆரோக்கிய இலாகா இந்த வேலையைத் தீவிரமாகக் கவனிக்கிறது. பால் பண்ணைகள், பால் சொஸைட்டிகள் இவற்றிலிருந்து பொது மக்களுக்கு அளிக்கப்படும் பால் விஷக்கிருமி அற்றதா என்று அங்கே முன்கூட்டியே நிச்சயிக்கப் படுகிறது.

பாலைச் சுத்தம் செய்யும் 'பாஸ்சரைஸிங்' நம் நாட்டில் மிகச் சொற்பமாக நடைமுறையில் உள்ளது. 'பாஸ்சரைஸிங்' இல்லாதபொழுது வேறு தடுப்பு முறை இல்லையா? 'பாஸ்சரைஸிங்' என்பதில் முக்கிய அம்சம், கிருமிசாகக் கூடிய உஷ்ணத்தில் அதிக நேரம் நிறுத்திய பிறகு குளிர்ச்சி பெறச் செய்வதுதான்.



அடுப்பின் சூடு பாலைப் பொங்கச் செய்யும் நிலையில் இருக்கலாம்; அதிக எரிப்பு கூடாது. சுமார் கால் மணி நேரம் இவ்வாறு செய்தால் விஷக் கிருமிகள் கொல்லப்பட்டு விடும். நீர் வெகு சீக்கிரம் வற்றி விடுமாகையால் பால் எளிதில் கெட்டியாகிக் குறையும். ஓரளவு இந்தப் பாலில் தண்ணீர் கலந்து காய்ச்சுவது உசிதமாகும். பாலை நேரில் கறந்து வாங்காத பொழுது, நீர் கலக்கும் திட்டத்தை நாம் நிறைவேற்றத் தேவை இல்லை.

பாலை இம்மாதிரி காய்ச்சுவதால் அதிலுள்ள நுட்பமான அவசிய சத்துக்கள் நசித்து விடாதா என்று கேட்கலாம்.

ஆனால் டி. பி. தொத்திக் கொள்ளுவதைக் காட்டிலும், பாலில் சில நுட்பச் சத்துக்களை இழப்பதால் பரவாயில்லை. காய்ச்சாத பசும் பால் அதிக சத்துள்ளதுதான்; அதைக் குடிப்பதும் நன்மைதான். ஆனால் இந்தப் பாலோ, இதைக் கறந்த பசுவோ, இதைக் கறக்கும் பால்காரனோ டி. பி. கிருமி கொண்டவரில்லை என்று யாராவது நிச்சயம் கூற முடியுமா?

பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குத்தான் இத்தகைய பால் மூலம் தொத்துதல் சாதாரணமாக ஏற்படும். டி. பி. கிருமியுடன் உட்கொள்ளும் பாலின் தீங்கை வயது அதிகரித்தவர்கள் தடுத்துக் கொள்ளுகிறார்கள். குழந்தைகளும் சிறுவர்களுமே ஒரு நாட்டின் பிரஜைச் செல்வம். ஆகையால் சுத்தமான பாலைக் கொடுத்து இச் செல்வத்தைக் காத்து வளர்ப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

மேல்நாட்டைக் காட்டிலும் நம் நாட்டில் பாலருந்தும் குழந்தைகளின் விகிதம் மிகவும் குறைவு. அதிலும், உள்ள பாலையும் முக்கால் பங்கு, காப்பியும் டீயும் வந்து கெடுத்து விடுகின்றன.

பால் மூலம் ஓரளவு டி. பி. பூச்சியை உட்கொள்ளுவதும் ஒரு வித நன்மை என்று சிலர் வாதிக்கின்றனர். பால் மூலம் உள் சென்ற பூச்சியைக் கொல்ல, உடலின் இயற்கை முயன்று தடுப்புச் சக்தியை உலாவச் செய்கிறது. இதனால் டி. பி. உட்புகுந்து வளராமல் போவது சாத்தியமாகிறது என்கின்றனர். இது தகாத வாதம். உட்புகும் டி. பி. கிருமி, குறிப்பிட்ட அளவில் தான் புகும் என்று யாரால் வரம்பிட முடியும்? டி. பி. கிருமி உட்புகும் ஒவ்வொரு சிறுவரின் உடல் இயற்கையும் டி.பி. கிருமியுடன் போரிட்டு வெல்லும் அளவுக்குச் சக்தி உடையது என்றுதான் யாரால் நிச்சயிக்க முடியும்?

ஆகவே, நாமாக டி. பி. கிருமி உள் நுழைய வசதி அளிப்பது பகுத்தறிவல்ல.

டி. பி. கிருமி உள் நுழைந்தாலும், அது வளராமல் தடுக்கும் பொருட்டு, நாம் திடகாத்திரம் பெறப் பாலுணவு உட்கொள்ள வேண்டும். பால் ஒரு பெரிய பாதுகாப்பு உணவு. பாலை நன்கு காய்ச்சி உட்கொண்டு விட்டால், டி. பி. கிருமியைப் பற்றிச் சிந்தனை செய்ய வேண்டிய அவசியமே இல்லை.

காந்தி வாக்கு

மகாத்மாவும் குழந்தைகளும்

குழந்தைகள் கல்வி முறையில் சீர்திருத்தம் செய்ய நான் திட்டமிட்டேன். என் அண்ணனுக்குக் குழந்தைகள் இருந்தன. நான் சீமைக்குப் போகுமுன் பிறந்த என் பையனுக்கு நான்கு வயதாயிற்று. இவர்களுக்கு உடற்பயிற்சி அளித்துத் திடகாத்திரர்களாகச் செய்வதுடன் அவர்களை என் பொறுப்பிலேயே வளர்க்கவும் எண்ணினேன். இந்த என் திட்டத்தை என் அண்ணனும் ஆதரித்தார். என் முயற்சியும் வெற்றி பெற்றது. குழந்தைகளுடன் கூடி வாழ்வது எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அவர்களுடன் விளையாடுவதும், தமாஷ் செய்வதும் இன்னும் என்னை விட்டுப் பிரியாத குணமாகி விட்டது. அன்றைய தினத்திலிருந்து, நான் குழந்தைகளின் உபாத்தியாயராயிருக்க நல்ல தகுதியுள்ளவன் என்றே என்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

புத்தம்புதியது போன்ற தோற்றம்!



டாடாவின் 501 ஸ்பெஷல்

சோப்பினால் சுத்தம் செய்யப்பட்டது



சின்னஞ் சிறிய கவர்ச்சிகரமான கவுன்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள். டாடாவின் 501 ஸ்பெஷல் சோப்பைக்கொண்டு அவைகளை சுத்தம் செய்தால், அவைகள் புத்தம் புதிய தோற்றத்துடன் நீடித்த காலம் உழைக்கும். மிருதுவானதும், சுத்தமானதுமான இந்த சோப் உங்கள் துணிக்கு மிகுந்த பாதுகாப்பு அளிக்கிறது.

நூற்றுக்கு நூறு இந்திய

- மூலதனம்
- நிர்வாகம்
- உழைப்பு


Erasmic
PERFUMED
COCONUT
HAIR OIL
கூந்தலுக்கு இராஸ்மிக்
பரிமள தேங்காயெண்ணெய்
ECH. 1-50 TM



இரட்டை யோகம்!

சரஸன்

கணேசன், காஞ்சிபுரம் கிருஷ்ண பாகவதரிடம் பின்பாட்டுக்காரனாகச் சேர்ந்து சுமார் மூன்று வருஷங்கள் ஆகின்றன. இனிமையான சாரீரம் படைத்த கணேசனைப் பாகவதர் விரும்பியே தமது பின் பாட்டுக்காரனாக அமர்த்திக் கொண்டார். காஞ்சீபுரம் கிருஷ்ண பாகவதரைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. ஹரிகதா காலக்ஷேபங்கள் பழைய பந்தாவில் அழகாகச் செய்யக் கூடிய வெகு சிலரில் அவர் ஒருவர். அவர் பெயரும் புகழும் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் மற்றும் தமிழர்கள் வாழும் இதர பாகங்களிலும் வெகுவாகப் பரவியிருந்தன.

பாகவதருக்கு அதற்கு முன்பு பல இளைஞர்கள் பின்பாட்டு பாடி வந்திருக்கிறார்கள். ஆனால், ஒருவராவது நிலைத்தது கிடையாது. சொல்லப் போனால் மூன்று மாதங்களுக்கு ஒரு பின்பாட்டுக்காரனைப் பார்த்து விட்டார் பாகவதர். இந்த விதத்தில் அவருக்குப் பெரும் குறை. ஒரு பின்பாட்டுக்காரனுக்குக் கதைகளுக்குத் தேவையான நிருபணங்களைச் சொல்லிக் கொடுத்து, மனப் பாடம் செய்யச் சொல்லி, அவன் அவற்றை நெட்டுருச் செய்வதற்குள் கம்பி நீட்டி விடுவான். மறுபடியும் இன்னொருவனிடம் அதே முறையில் மல்லுக் கொடுக்க வேண்டி வந்தது என்றால், பாவம், பாகவதருக்கு எத்தனை எரிச்சலாகவும் ஆயாசமாகவும் இருக்கும்!

இந்த நிலையில், அவரிடம் கணேசன் வந்து சேர்ந்தான். பாகவதருக்குத் தான் பாட்டுப் பாடிப் பணம் மட்டும் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்தவன் அல்ல கணேசன். அவனுக்குச் சங்கீதப் பித்து அதிகம்.

உண்மையில் பாகவதரிடமிருந்து எந்தவிதப் பிரதிப் பிரயோசனத்தையும் அவன் எதிர்பார்க்கவில்லையாயினும், பாகவதர் தமக்குக் கிடைக்கும் சன்மானத்தில் ஒரு பகுதியைக் கணேசனுக்கும் கொடுத்து வந்தார். அது அவனுக்கு இன்னும் உற்சாகத்தைக் கொடுத்தது என்றுதான் கூறவேண்டும்.

பாகவதருக்குக் கணேசன் பின்பாட்டுக் காரனாக அமைந்ததில் பெருமகிழ்ச்சி. காரணம், அவன் இனிமையான சாரீரத்துடன் பாடிச் சபையோரை மெய்ம்மறக்கச் செய்தான். அதுமட்டுமல்ல, சபையோரின் கரகோஷங்களையும் அவ்வப்போது பெற்றான். அது அவருக்குப் பெருமை தரக்கூடிய அம்சம்தானே? மற்றொன்று அதற்கு முன்பு இருந்த பின்பாட்டுக்காரர்களைப் போலல்லாது கணேசன் அவரிடமே நிலையாக அமர்ந்து விட்டான்.

கணேசன் பாகவதருக்குப் பாட ஆரம்பித்தது முதல், பாகவதரின் கதாகாலக்ஷேபங்களுக்குக் கிராக்கி பிரமாதமாயிருந்தது.

கணேசன் பாகவதரிடம் வந்து சேர்ந்து ஒரு வருஷம் ஆயிற்று. அவருடன் பல ஊர்களைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் ஒரு குறையிருந்தது. எந்த ஊரிலும் தங்கி, ஊரைச் சுற்றிப் பார்க்க நேரம் இருந்ததில்லை. ஒரு சமயம் மதுரைக்குப் பாகவதருடன் போயிருந்தான். மதுரையைச் சுற்றிப் பார்க்க அவனுக்கு ஆசை. ஆனால் கதை முடிந்தவுடன், அன்றிரவே ரயில் ஏறும்படி ஆகி

விட்டது. காரணம், வேறு ஊரில் அடுத்த நாள் பாகவதருடைய கதை. ஸ்ரீரங்கத்துக்குப் போயிருந்த போதும் அப்படியே.

நம் தென்னாட்டில் பாகவதருடன் கணேசன் போகாத ஸ்தலங்கள் இல்லை. ஆனால் ஒன்றிலாவது நிதானமாய்த் தங்கியிருந்து, ஊர், கோவில் இடங்களைப் பார்த்ததில்லை.

ஒருசமயம், கணேசனுடைய தாயார் அவனைக் கோயமுத்தூரில் நடக்கும் ஒரு உறவினரின் கல்யாணத்துக்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு சொன்னாள். அதுவோ தட்ட முடியாத கல்யாணம். பாகவதரிடம் உத்தரவு கேட்டான். பாகவதர் டைரியைப் புரட்டினார். '' அன்று நம் கதை அரக்கோணம் அய்யாசாமி வீட்டுக் கல்யாணத்தில் இருக்கிறதே! நீ எப்படிக் கோயமுத்தூருக்குப் போக முடியும்?'' என்று மறுத்து விட்டார். தர்மசங்கடமான நிலை கணேசனுக்கு ஏற்பட்டு விட்டது. அவன் இல்லாமல் பாகவதர் காலக்ஷேபம் செய்ய முடியாது. எனவே அவன் தன் தாயாரை மட்டும் வேறு தக்க துணையுடன் கோயமுத்தூர்க் கல்யாணத்துக்கு அனுப்பி வைத்தான்.

இருப்பினும், அவன் தாயாருக்கு மட்டும் தாபம். ''என்னடா, அப்படிப்பட்ட கதை? நம் சொந்த மனிதரின் வீட்டுக் கல்யாணத்துக்குக் கூடப் போக முடியாத, அப்படி என்ன தொழில் இது? நன்றாய்ப் பின்பாட்டு பாடினாய், போ!'' என்று அங்கலாய்ப்புடன் கூறினாள். ஆனால் தன் பொருட்டு, பாகவதர் பண நஷ்டம் அடைவதைக் கணேசன் விரும்பவில்லை. எனவே தன் சௌகர்யங்களைப் புறக்கணித்து, இம்மாதிரி பல முறைகள் அவருடன் கதைகளுக்குப் போய் வந்திருக்கிறான்.

தன் மனத்தில் உள்ள தாபத்தை அவரிடம் நேரில் வெளியிட்டு விடவேண்டும் என்று ஒருநாள் விரும்பினான். அதோடு ஒரு சந்தர்ப்பமும் அவனுக்குக் கிடைத்தது. அவனுடைய மாமா பம்பாயில் ஒரு உத்தியோகத்தில் இருக்கிறார். அவருக்குத் தம் ஒரே தங்கையான அவனுடைய தாயாரின்மீது அத்தியந்த வாத்ஸல்யம். அவர் சில வருஷங்களாக, பம்பாயில்தான் வசித்து வருகிறார்.



கணேசனின் தந்தை இறந்த பிறகு, அவனைப் படிக்க வைத்தவர் அவர்தான். அப்போது அவர் சென்னையில் இருந்தார். தாயார் மட்டும் காஞ்சிபுரத்திலேயே வாழ்ந்து வந்தாள். சென்னையிலிருந்து விடுமுறைக்கு மட்டும் கணேசன் தன் தாயாரைக் காண, காஞ்சிக்கு வந்து போவான்.

கணேசனின் மாமா விசுவநாதன் கணேசனிடம் ரொம்பவும் பிரியமாக இருந்தார். தம் பெண் சுலோசனாவை அவனுக்கே மணம் முடிக்க விரும்பினார். எல்லாரும் அதை வரவேற்றார்கள். சுலோசனாவின் அன்பு, கணேசனிடம் அபரிமிதமாயிருந்தது. தன் அத்தானுடைய சங்கீதத் திறமையை மற்றவர்களைவிட அதிகம் பாராட்டிப் போற்றி வந்தவள் அவளே.


எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்து விட்ட அவனை, ஒரு நல்ல வேலையில் அமர்த்த வேண்டும் என்று விரும்பிய அவன் மாமா விசுவநாதனுக்கு, கணேசன், பின்பாட்டுக்காரனாக ஆனதில் ஒரு குறைதான். எனினும் அதற்காக அவர் தம் விருப்பத்தை மாற்றிக் கொள்ளவில்லை. சுலோசனாவுக்கோ தன் அத்தான் பாடகனாக ஆனதில் பரம திருப்தி.

இந்த நிலையில் திடீரென்று விசுவநாதனை, பம்பாய்க்கு மாற்றி விட்டார்கள். பம்பாய் சென்ற சில மாதங்களுக்கெல்லாம், விசுவநாதன், தம் தங்கைக்கு ஒரு கடிதம் எழுதினார். சீக்கிரம் கணேசன் - சுலோசனா கல்யாணத்தை முடிக்க வேண்டுமென்று; கணேசனுடைய தாயாரும் துடித்தாள். ஆனால் கணேசன் மட்டும் கொஞ்சம் காலம் கடத்தினான். அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது.

தனக்காகத் தன் மாமா விசுவநாதன் எவ்வளவோ ஒத்தாசைகள் செய்திருக்கிறார். அவருக்குள்ள ஒரே பெண் சுலோசனாவின் கல்யாணத்துக் கென்று அவர் அதிகமாக மிச்சப்படுத்தவில்லை என்பதை அறிந்திருந்தான். எனவே சுலோசனாவின் கல்யாணத்துக் கென்று ஒரு இரண்டாயிரம் ரூபாயாவது சேமித்துக் கொடுக்க வேண்டும் என்பது அவனுடைய கருத்து. தனது கருத்தைக் கணேசன் தாயாரிடம் கூடச் சொல்லாமல் வைத்திருந்தான். அவன் எண்ணியிருந்த தொகை சேராமலிருந்ததால்தான் அவன் கல்



தீங்கற்றது—ஏனெனில் இந்த பார்லி டின்னில் அடைக்கப்பட்டது
புஷ்டிமிக்க உயர்ந்த ரகத் தானியங்களிலிருந்து தயாரிக்கப்படுவதால் ராபின்ஸன்ஸ் பேர்ல் பார்லி நல்ல போஷணையை அளிக்கிறது. சுலபமாக ஜீரணிக்கக்கூடியது. காற்றுப்புகாமல் சுகாதார முறைப்படி டின்களில் அடைக்கப்படுவதால் இந்த பார்லியை குழந்தைகள், நோயாளிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலியவர்களுக்கு முழு நம்பிக்கையுடன் கொடுக்கலாம்.
ROBINSON'S
PEARL
BARLEY
ராபின்ஸன்ஸ் பேர்ல்
பார்லியையே
கேட்டு வாங்குங்கள்
முற்றிலும் சுத்தமானது



லிப்டன்ஸ்
டீ கேர்ல்
LIPTON'S TEA GIRL
சிறந்த ஸ்ட்ராங் டீ தருகிறது
LTGX 30 TM

காந்தி வாக்கு

காந்தியடிகளும் கோகலேயும்

"நீங்கள் உலாவுவதற்குக் கூடச் செல்லுவதில்லையாகையால் அடிக்கடி நீங்கள் நோய்வாய்ப்படுவதில் என்ன ஆச்சரியம்? பொது வாழ்வில் ஈடுபட்டால் உலாவுவதற்குக் கூட அவகாசம் கிடைக்காதா?" என நான் கோகலேயைக் கேட்டேன்,

அதற்குக் கோகலே "எனக்கு உலாவச் செல்லப் பொழுதிருந்து நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று என்னையே திருப்பிக் கேட்டார்.

கோகலேயிடம் எனக்கு மிகுந்த மதிப்பிருந்தமையால் இது பற்றி அவருடன் விவாதம் செய்து அவருக்கு மனக்கஷ்டம் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. அவருடைய பதில் எனக்குத் திருப்தியளிக்கா விட்டாலும் நான் மறுமொழி கூறாமல் மௌனமாயிருந்தேன். ஆனால் அன்றும் இன்றும் ஒரு விஷயத்தில் எனக்குத் திட நம்பிக்கை உண்டு. ஒருவருக்கு எவ்வளவு தான் வேலையிருந்தாலும் சாப்பாட்டுக்குச் செல்வதற்கும் உடற்பயிற்சிக்கும் அவகாசம் தேடிக்கொள்ள வேண்டும் என நான் கருதுகிறேன். உடற்பயிற்சி செயல் திறனைப் பாழ்படுத்துவதில்லை; அதை மேலும் மேலும் அதிகரிக்கவே செய்கிறது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

யாணத்தைத் துரிதமாய் முடிக்கச் சம்மதிக்காமல் காலங் கடத்தினான்.

சுலோசனா பம்பாய்க்குச் சென்று பல கடிதங்கள் எழுதினாள், அத்தைக்கும் கணேசனுக்கும். அவற்றில் கணேசனை ஒரு முறை பம்பாய்க்கு வந்து போகுமாறு கேட்கத் தவறியது கிடையாது. பகட்டான பம்பாய் நகரைப்பற்றி அவள் வர்ணித்து எழுதியிருந்த அழகைக் கண்டு, கணேசனின் மனம் துள்ளியது; துடித்தது. இரண்டு முறை பாகவதரை உத்தரவு கேட்டுப் பார்த்தான். இவர் அனுமதி கிடைக்கவில்லை. காரணம் தெரிந்தது தான். பாகவதர் முந்திய சமயங்களில் அனுமதி தராமல் இருந்தது ஒரு விதத்தில் நல்லதுதான் என்று அவனுக்குத் தோன்றியது. மாமாவிடம் வெறுங் கையுடன் செல்வதைக் காட்டிலும், தன லட்சியத் தொகையுடன் செல்வதுதான் உசிதம் என்று தோன்றவே, பாகவதரை மேலும் அவன் வற்புறுத்தாமல் இருந்து விட்டான்.

ஆனால் இந்தத் தடவை சுலோசனா எழுதியிருந்த கடிதம் அவன் உள்ளத்தை மிகவும் உருக்கி விட்டது.

"அத்தான்! நான் இவ்வளவு தூரம் மன்றாடியும் கூட நீங்கள் என் விருப்பத்துக்குச் செவிசாய்க்காமல் உதாசீனமாயிருப்பது ஏனோ? ஒரு வேளை என்னை மறந்து, வேறு யாரையாவது மணக்கத் தீர்மானித்து விட்டீர்களா? தங்கள் சமாதானம் அத்தனை திருப்திகரமாயில்லை." இம்மாதிரி சுலோசனாவின் தாபத்துடன் கூடிய கடிதத்தைக் கண்ணுற்றதும், கணேசனின் மனம் துடித்தது. 'தன் அருமைச் சுலோசனா இம்மாதிரி தவறாகக் கற்பனை செய்துகொள்ள இடமளிப்பதா?' என்று கருதி வருந்தினான். அவன் எதிர்பார்த்த தொகை இரண்டாயிரமும் சேர்ந்து விட்டது. எனவே 'இந்தத் தடவை கட்டாயம் பம்பாய் போயாக வேண்டும். தான் இதுவரை கண்டிராத பம்பாய் நகரைக் கண்டு களிப்பதுடன், தன் அன்புக்கரசியையும் காண வேண்டும்' என்ற தீர்மானத்துடன் புறப்பட நாள் குறிப்பிட்டுப் பாகவதரின் அனுமதியைக் கோரினான்.

"அண்ணா! என் மாமாவைக் காணப் பம்பாய் போய்வர அனுமதி வேண்டும். அடுத்த திங்கள் அன்று புறப்பட விரும்புகிறேன். ஒரு வாரத்துக்கு மேல் தங்க மாட்டேன்" என்றான் கணேசன் பய்யமாக.

"கணேசா! நீ பம்பாய் போவதில் எனக்கு ஆட்சேபமில்லை. மகாராஜனாய்ப் போய் வா. ஆனால் ஒரு விஷயம். நான் திருச்சியிலிருந்து ஒரு கடிதம் எதிர்பார்க்கிறேன். அங்கு ஒரு நண்பர் நான்கு கதைகள் ஏற்பாடு செய்து எழுதுவதாகச் சொல்லி விட்டுப் போனார். நான் இரண்டு தேதிகள் கொடுத்து அனுப்பியிருக்கிறேன். கதையை ஆரம்பிக்க ஒன்று பத்தாம் தேதி; மற்றொன்று இருபத்தினாலாந் தேதி வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இருபத்தினாலாந் தேதியிலிருந்து கதையை ஆரம்பிக்கச் சொன்னால் நல்லதாய்ப் போயிற்று. அதற்குள் நீ பம்பாய்க்குப் போய்த் திரும்பி விடலாம். அப்படியின்றிப் பத்தாந்தேதியிலிருந்து ஆரம்பிக்கச் சொன்னால் நீ பம்பாய் போவது இப்போது சாத்தியமில்லை" என்றார் பாகவதர்.

கணேசனுக்கு வந்த ஆத்திரத்தில், 'நீங்கள் எக்கேடு கெட்டுப் போனாலும் சரி, நான் குறிப்பிட்ட பிரகாரம் புறப்படத்தான் போகிறேன்' என்று கூறிவிடலாமா என்று துடித்தது மனம். எனினும் விவேகம் தடைவிதித்தது. அவனுக்குச் சாதகமாகவே கடிதம் வரலாம் அல்லவா திருச்சியிலிருந்து!

கணேசன் பாகவதரிடம் பேசிக் கொண்டிருந்த போதே தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்றான். ஆம்! பாகவதர் எதிர்பார்த்த கடிதம்தான். கடிதத்தைப் படித்த பாகவதரின் முகத்தில் ஏமாற்றம் பளிச்சிட்டது. ஆவலுடன் பாகவதரின் முகத்தைப் பார்த்தான். கடிதத்தை அலட்சியமாக அவனிடம் கொடுத்தார், பாகவதர். அதைப் படித்த கணேசனின் முகம் பிரகாசம் அடைந்தது. இப்போது கதைகள் வைப்பது சாத்தியமில்லையென்றும், பிறகு எழுதுவதாயும் திருச்சி அன்பர் எழுதியிருந்தார்.

"அண்ணா, நான் பம்பாய் போய் வரத் தடையில்லை என்று நினைக்கிறேன்" என்றான்.

"ஆமாம் சௌக்கியமாகப் போய்ச் சீக்கிரம் திரும்பி வந்து சேர்!" என்று அவர் உத்தரவு கொடுத்து அனுப்பினார்.

கணேசன் பிரயத்தனம் செய்து பாகவதரிடம் உத்தரவு பெற்று விட்டாலும் பம்பாய்

கிளம்பும் வரை நிச்சயமில்லை என்று பயந்தான். அவனுக்குத்தான் இந்த கையில் நிறைய அனுபவமாயிற்றே! அதற்காகப் புறப்படும் தேதியைத் திங்களுக்குப் பதிலாக, இரண்டு தினங்கள் முந்தியே மாற்றிக் கொண்டு, கிளம்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யத் தொடங்கினான். தன் மாமாவிடம் கொடுக்கச் சேமித்து வைத்திருந்த பணம் இரண்டாயிரத்தை ஜாக்கிரதையாய்த் தன் பெட்டிக்குள் எடுத்துவைத்தான். தன் கலோசனாவுக்கென்று விசேஷமான பரிசுகள் எல்லாம் வாங்கிக் கொண்டான்.

சனிக்கிழமை இரவு பம்பாய்க்குக் கிளம்ப டிக்கட்டும் வாங்கி விட்டான். அன்று மாலை ஐந்து மணிக்கு மிருதங்கக்காரன் முத்து வியர்க்க விறுவிறுக்க, கணேசனைத் தேடிக் கொண்டு ஓடி வந்தான்.

'' கணேசா ! பாகவதர் உன்னைக் கையோடு அழைத்து வரச் சொன்னார். எங்கோ வெளியூரில் கதைக்கு வரும்படி தந்தி வந்திருக்கிறதாம். எட்டுக் கதைகளாம். நல்ல ரேட்டாம். இன்று ராத்திரியே நாம் புறப்பட வேண்டுமாம் '' என்றான் முத்து.

கணேசனுக்கு இதைக் கேட்டதும் உலகமே இருண்டு விட்டதுபோல் தோன்றியது.

''முத்து! நான் வரமுடியாது என்று சொல். என் பந்துமித்திரர்களைக்கூட நான் காணாமல் அவருக்கு உழைக்கப் பிறந்தேனா? இதோ நான் இன்றிரவு வண்டிக்குப் பம்பாய் செல்கிறேன், என் மாமாவின் வீட்டுக்கு. இந்தத் தடவை பின்பாட்டு இல்லாமல் கதை நடத்தட்டும். கொஞ்சமாவது எதிராளியின் சௌகர்யங்களைக் கவனிக்கும் பண்பில்லாதவருடன் என்ன உறவு வேண்டியிருக்கிறது?'' என்று வெறுப்பும் கோபமும் கொண்டு பேசினான் கணேசன்.

அப்போது வாசலில் பாகவதரின் குரல் கேட்டது. ''கணேசா!'' என்று அழைத்தவாறு உள்ளே வந்தார் பாகவதர்.

''கணேசா! உன்னைப் பார்த்தாலே தெரிகிறது. என்மீது எவ்வளவு ஆத்திரத்துடன் இருக்கிறாய் என்று. அதனால்தான் நானே ஓடிவந்தேன். முத்துவிடம் ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன்'' என்றார்.

''அண்ணா! நீங்கள் ஒன்றையும் மறக்கவில்லை. எல்லாம் விவரமாகச் சொல்லியனுப்பினீர்கள். முத்துவும் ஒன்று விடாமல் சொல்லிவிட்டான். என்னை மன்னிக்க வேண்டும். நான் இத் தடவை கதைக்கு வரமுடியாது.''

மிருதங்கக்காரன் முத்து பிரமித்து ஒன்றும் தோன்றாமல் நின்றான். இதுவரை கணேசன் இவ்வளவு துடுக்குடன் பாகவதரிடம் பேசிப் பார்த்தவனல்ல அவன்.

பாகவதர் இடி இடியென்று சிரித்தார்.

''கணேசா! நான் முத்துவிடம் என்ன சொல்ல மறந்து போனேன் என்பதைச் சொல்வதற்குள் நீ பெரிய பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டாய். அவனும் அதைக் கேட்கவில்லை. முத்துவிடம் கதைக்காகத் தந்தி வந்திருக்கிறது என்று மட்டும் சொன்னேன். கதை எந்த ஊரில் என்று நினைக்கிறாய்?'' என்று கேட்டுவிட்டுக் குறும்பு நகையுடன் கணேசனை நோக்கினார் பாகவதர்.

கணேசனும் முத்துவும் ஒன்றும்தோன்றாமல் பாகவதரையே நோக்கினார்கள்.

''நீ போகிறாயே, அதே பம்பாயில்தான்!'' என்று கூறினார் கணேசனை நோக்கி.

''ஆ! அண்ணா! பம்பாயிலா?'' என்றான் கணேசன் வாயைப் பிளந்தவாறு.

''ஆமாம்; பம்பாயில் தான்! உனக்கு இரட்டை யோகம். நீ விரும்பும் பந்து தரிசனம் ஒன்று, பண வருவாய் மற்றொன்று!'' என்று கூறினார் பாகவதர் !


கோயமுத்தூரின் நஷ்டம்

இன்று பல நவீன வசதிகளுடன் காட்சியளிக்கும் கோயமுத்தூர் நகரை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவரான ஸ்ரீ சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் சமீபத்தில் காலமான செய்தி தமிழ் மக்களைப் பெரிதும் துக்கத்தில் ஆழ்த்தியிருக்கும். ஸ்ரீ முதலியார் தொடர்ந்தாற்போல் பதினைந்து வருஷ காலம் கோயமுத்தூர் நகர சபைத் தலைவராக இருந்து அரும் பெரும் தொண்டு செய்தார். அவரது பதவிக் காலத்தில்தான் கோயமுத்தூர் ஜனங்களுக்குச் சிறுவாணி மலையிலிருந்து அருமையான தண்ணீர் வசதி கிடைப்பதற்கு வழி பிறந்தது. கோயமுத்தூர் ஜில்லா போர்டு, தென்னிந்திய மில் சொந்தக்காரர்கள் சங்கம், இந்திய வர்த்தகர் ஐக்கிய சங்கம் முதலிய ஸ்தாபனங்களில் தலைவராகப் பதவி வகித்துப் புகழ்பெற்ற ஸ்ரீ ரத்தினசபாபதி முதலியார், பாரத நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் பல ஆண்டுகள் வரையில் இந்தியா சட்டசபை, மாகாண சட்டசபை அங்கத்தினராகவும் இருந்து பணியாற்றினார். ஸ்தல ஸ்தாபனங்களின் சீர்திருத்தத்துக்காக ஸ்ரீ முதலியார் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கையை ஒட்டிச் சென்னை சர்க்கார் பல சீர்திருத்தங்களைக் கைக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இவ்விதம் எல்லோருடைய மதிப்புக்கும் பாத்திரராகி, பல்லாண்டுகளாகப் புகழுடனும் பெருமையுடனும் விளங்கிய ஸ்ரீ ரத்தினசபாபதி முதலியாரின் மறைவு தமிழ்நாட்டுக்குப் பெரும் நஷ்டமாகும். அவரது குடும்பத்துக்கு நமது அநுதாபம் உரியதாகுக.




உயர்ந்த ரக கடிகாரங்கள்

ஸ்விஸ் தயாரிப்பு. 5 வருஷம் உத்திரவாதம். ஒரே சமயத்தில் ஏதாவது இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு ஒரு பாக்கெட் கடிகாரமும் 3 கடிகாரங்கள் ஆர்டருக்கு ஒரு கடிகாரம் இனாம்




ஜென்ட்ஸ் மாடல் 7¾" நெ. 55 அல்லது 56

கோல்டன் 5 ஜுவல்ஸ் ரூ. 28/- 15 ஜுவல்ஸ் ரூ. 35/- ரோல்டு கோல்டு ரூ. 38/- 17 ஜுவல்ஸ் ஜெர்மன் 20 மைக்ரோன் ரோல்டு கோல்டு ஷாக்புரூப் ரூ. 52/-



ஜென்ட்ஸ் மாடல் நெ. 757

குரோமியம் ரூ. 19/- சென்டர் செகண்ட் ரூ. 22/- 15 ஜுவல்ஸ் ரூ. 31/- வாட்டர்புரூப் குரோமியம் ஸ்டீல் ரூ. 38/- ஆல் புரூப் 17 ஜுவல்ஸ் ரூ. 40/- 21 ஜுவல்ஸ் ரூ. 52/-



ஜென்ட்ஸ் 9¾" மாடல் நெ. 755

குரோமியம் ரூ. 22/- கோல்டு 15 ஜுவல்ஸ் ரூ. 30/- வாட்டர் புரூப் குரோம் ஸ்டீல் ரூ. 37/- ஆல்புரூப் 17 ஜுவல்ஸ் ரூ. 42/- ஜெர்மன் 21 ஜுவல்ஸ் ரூ. 54/-



ஜென்ட்ஸ் 8¾" மாடல் நெ. 756

குரோமியம் ரூ. 24/- கோல்டு 15 ஜுவல்ஸ் ரூ 30/- வாட்டர் புரூப் குரோம் ஸ்டீல் ரூ. 40/- 17 ஜுவல்ஸ் ஆல் புரூப் ரூ. 46/- ஜெர்மன் 21 ஜுவல்ஸ் ரூ. 60/-

AJANTA WATCH CO.,
AGRA ROAD - - BOMBAY-40
Nazirabad. Lucknow (Phone: 5767)

சுலேகா
பவுண்டன் பேனா மை

இராவகத்தால் அரிக்கப்படுவதைத் தடுத்து எழுதும்பொழுதே பேனாவை சுத்தமாக்கிப் பாதுகாக்கும் "S-50" சுலேகா மையில் சேர்க்கப் பட்டிருக்கிறது.



Contains SOLVENT "S-50"

சுலேகா ஒர்க்ஸ் லிட்.
கல்கத்தா - டெல்லி - பம்பாய்-சென்னை

ஆஸ்த்மா-ஜலதோஷம் பிராங்கைட்டிஸ் செய்தி

பல்லாயிரம் பேருக்கு உற்சாகம் தருகிறது

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத்திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மென்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப்பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றி சுகமாக சுவாசித்து குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மென்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.

கௌரவம்

சுகப்புணியிட மிருந்து வந்த கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் கோமதிநாதன்.

மீண்டும் ஒருதரம் கடிதத்தைப் படித்தான் அவன். அவன் அப்பா எழுதியிருந்தார் :—

'சிரஞ்சீவி கோமதிநாதனுக்கு. ஆசீர்வாதம். அங்கு நீங்கள் எல்லோரும் சௌக்கியமென்று நம்புகிறேன்....சுப்புணி பட்டணத்துக்கு வந்திருந்தபோது உன்னைப் பார்த்ததாகச் சொன்னான். தள்ளாமை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. பொங்கித் தின்பதுகூடக் கஷ்டமாக இருக்கிறது. என் சிரமத்தை நீ உணராமலில்லை என்பதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். உன் கடிதத்தைப் பார்த்துக் கொண்டு ஒரு நல்ல நாளில் அங்கு கிளம்பி வந்து விடுகிறேன். சீக்கிரம் உன்னுடைய பதிலை எதிர் பார்க்கிறேன். இப்படிக்கு

அக்ஷயம்'

சுப்புணி என்பவர் அக்ஷயத்தின் ஊர்க்காரர். பதினைந்து நாட்களுக்கு முன் அவர் கோர்ட்டு காரியமாகச் சென்னைக்கு வந்திருந்தவர் சைனாபஜாரில் தற்செயலாகக் கோமதி நாதனைப் பார்த்தார். ''ஏண்டா, நீ அக்ஷயத்தின் பிள்ளை இல்லையா?'' என்றார்.

அவனுக்கு அவரைத் தெரிய வில்லை. அவரை அடையாளம் கண்டுகொள்ள முயன்றவாறு ''ஆமாம்.... நீங்கள்....?'' என்றான். ''நான் சுப்புணி மாமா! எலத்தூரில் உங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் இல்லையா?'' என்று கூறிய அவர், ''நீ கூட இரண்டு மாதங்களுக்கு முன் ஊருக்கு வந்திருந்தாயாம். அன்று நான் ஊரில் இல்லை'' என்றார்.

''ஞாபகம் வந்து விட்டது, ஸார்! எல்லாரும் சௌக்கியந் தானே?'' என்றான்.

சிறிது நேரம் பரஸ்பர குசலப்பிரச்னம் நடந்த பிறகு சுப்புணி ''ஏன் அப்பா! நீதான் பட்டணம் வந்து விட்டாயே! இனி உன் அப்பாவை அழைத்துக் கொண்டு வந்து வைத்துக் கொள்வதற்கென்ன? வயசான அந்த மனிதர் தள்ளாத பிராயத்தில் தாமே சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு திண்டாடுவானேன், பாவம்?'' என்று கேட்டார்.


திடீரென்று கிளம்பிய இந்தக் கேள்வியைக் கண்டு திக்குமுக்காடிப் போனான் கோமதிநாதன். ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''செய்ய வேண்டியது தான். நானே யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன் அதைப் பற்றி!'' என்று கௌரவமாகப் புளுகி வைத்தான்.

''இதில் யோசனை என்ன அப்பா? உடனடியாகக் காரியத்தில் இறங்கு!'' என்று உபதேசித்துவிட்டுச் சுப்புணி விடைபெற்றார்.

கோமதிநாதனுடைய மனோநிலை அவருக்கு எப்படித் தெரியும், பாவம்! அவன் சொன்னதை நம்பிவிட்ட அவர் ஊருக்குப் போனதும் போகாததுமாக அதைப்பற்றி அக்ஷயத்திடம் பெருமையாகக் கூறி விட்டார். அக்ஷயமும் அதைக்கேட்டு மகிழ்ந்து, பிள்ளைக்குக் கடிதம் எழுதி விட்டார்!....

'அப்பாவுக்கு, தனி மனிதராக இருக்கும் அவருக்கு, சமைத்துக் கொள்வதற்குத் தள்ள வில்லையாம்! நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு நொடியில் சமையல் செய்திருக்கிறவருக்கு, தம் ஒருவருக்குக் கூடச் சமையல் செய்து கொள்ளச் சக்தியில்லையாம்! இங்கே வந்து விடுகிறாராம்! என் மானத்தை வாங்க வேண்டுமோ, இல்லையோ? நான் வகித்து வரும் உன்னதமான கௌரவமெல்லாம் பறி போய்ச் சந்திசிரிக்க வேணுமோ, இல்லையோ?...அவருக்குத்தான் மாதா மாதம் முதல் தேதியன்றே 'டாண்' என்று பணம் அனுப்பி விடுகிறேனே! கடமையில் தவறி விட்டவன் என்று யார் என்னைச் சொல்ல முடியும்?' என்று ஆத்திரத்துடன் மானசீகமாக அப்பா மேல் பாய்ந்து காய்ந்தான்!

பேனாவும் காகிதமும் எடுத்துத் தந்தைக்குக் கடிதம் எழுதினான். 'உங்கள் கடிதம் கிடைத்தது. சுப்புணி மாமாவிடம் உங்களை அழைத்துக் கொண்டு வந்து வைத்துக் கொள்வதைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னேனே யன்றி முடிவுக்கு வந்து விட்டதாகக் கூற வில்லை....உங்களை இங்கு தருவித்துக் கொள்ளுமுன் சில சௌகரியங்களைக் கவனிக்க வேண்டும். எனவே, நீங்கள் அடிக்கடி இது விஷயமாக என்னைத் தொந்தரவு செய்யத் தேவையில்லை. எதை, எப்போது செய்ய வேண்டும்



எஸ். வைத்தியநாத

என்பது எனக்குத் தெரியும்!' அவனுடைய இந்தச் செய்தி அக்ஷயத்தை நோக்கித் தபால் மார்க்கமாகச் சென்றது!


*　　*　　*

தஞ்சை ஜில்லாவில் கொள்ளிடக்கரையிலுள்ள எலத்தூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் அக்ஷயம். பூர்வீக சொத்தாகிய நாலு காணி நன்செய் நிலத்தில் விவசாயம் செய்து ஜீவித்து வந்தார் அவர். அவருக்குக் கோமதிநாதன் ஏக புதல்வன்.

பல வருஷங்களுக்கு முன் கொள்ளிட நதியில் பயங்கரமான வெள்ளம் ஒன்று வந்தது. அந்த வெள்ளம் விளைவித்த சேதம் அளவில் அடங்காதது. அக்ஷயத்தின் நாலு காணி நிலமும் வெள்ளத்துக்குப் பலியாகி விட்டது. அவருடைய வயல்களெல்லாம் மணலடிக்கப்பட்டு மணற் காடுகளாகக் காட்சியளித்தன. நிலங்கள் இருந்த இடம் எதுவென்றுகூடத் தெரியாமல் ஒரே பாலைவனமாகத் தோற்றமளித்தன.

அக்ஷயத்தின் வாழ்வே குலைந்து விட்டது. ஜீவனத்துக்கு என்ன பண்ணுவது என்றே தெரியவில்லை அவருக்கு.

அவர் தற்கொலை செய்து கொண்டு பிராணத் தியாகம் செய்து கொள்ளலாமா என்று கூடப் பல முறை சிந்தித்து விட்டார். ஆனால் அதை நிறைவேற்றிக் கொள்ளத்தான் அவருக்கு மனம் வரவில்லை. காரணம் மனைவியும் பத்து வயது மகன் கோமதிநாதனுந்தான்.



கூனிக் குறுகித் தளர்ந்து, சிதறிப் போயிருந்த மனசை உறுதி என்னும் மருந்தைப் பிரயோகித்து, தீரம் என்னும் உணவை அளித்துப் பலப்படுத்தினார் அவர். குடும்பத்தோடு கிராமத்தை விட்டுக் கிளம்பினார்.

திருச்சி நகருக்குப் போய்ச் சேர்ந்த அவர் வேலைக்காகச் சில நாட்கள் முயற்சி செய்தார். படிப்பு அதிகமில்லாத கிராமவாசியான அவருக்கு என்ன உத்தியோகம் கிடைக்கும்? ஒன்றும் கிடைக்காமற் போகவே அவர் சமையல் தொழிலை மேற்கொண்டார்.

அதிர்ஷ்டவசமாக ஏற்கெனவே அவருக்குச் சமையலில் பழக்கம் இருந்தபடியால் அந்தத் தொழிலில் பிரவேசிப்பது எளிதாக இருந்தது. ஒரு பிரபல ஹோட்டலில் சமையற்காரராக அமர்ந்தார் அவர். புதுத்தொழிலில் சீக்கிரமே அனுபவமும் நல்ல பெயரும் பெற்று விட்டார்.

இடையிடையே கல்யாணங்களுக்கும், மற்ற விசேஷங்களுக்கும் சமையற்காரராக அவர் செல்வதும் உண்டு.

தமது வாழ்க்கையில் நேர்ந்தது போன்ற அவக்கேடு தமது மகனுக்கும் ஏற்படக்கூடாது என்று தீர்மானித்த அக்ஷயம் அவனை நன்றாகப் படிக்க வைக்க உறுதி கொண்டார். சொல்லொணுக் கஷ்டங்களையும், உதாசீனங்களையும், அவமானங்களையும் தீரத்துடன் எதிர்த்து நின்று யார் யாரையோ பிடித்து உதவி பெற்றுத் தம் தீர்மானத்தைச் செயலாக்கி விட்டார். கோமதிநாதன் பி. ஏ. பட்டம் பெற்று விட்டான்.

அவன் பி. ஏ. ஆகிவிட்ட மகிழ்ச்சியைப் பூரணமாக அவர் அனுபவிக்க முடியாதபடி ஓர் அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. கோமதிநாதனுடைய தாயார் திடீரென்று இருதய நோய் காரணமாகக் கண்ணை மூடிவிட்டாள்.

பம்பாயில் ஒரு பெரிய கம்பெனியில் கோமதிநாதனுக்கு வேலை கிடைத்தது. அவன் உடனே பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டான்.

அடுத்த ஆருவது மாதம் மங்களா அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக ஆகி, அவன் பம்பாயில் குடித்தனம் தொடங்கினான். அவள் வந்த அதிர்ஷ்டம் கோமதிநாதனுக்கு விறு விறு என்று சம்பளமும், பதவியும் உயர்ந்து மூன்று வருஷங்களில் அந்தக் கம்பெனியில் உதவி மானேஜராகி விட்டான் அவன்.

மாமனார் தனியாக ஊரில் சிரமப்படுகிறாரே, அவரைத் தங்களோடு அழைத்துவைத்துக்கொள்ள வேண்டும் என்று மங்களாவுக்கு எண்ணம். கணவனிடம் அது குறித்து இரண்டொரு முறை பிரஸ்தாபித்தாள். கோமதிநாதனுக்கும் உத்தியோகத்துக்குப் போன புதிதில் அந்த எண்ணம் இருந்தது. 'இரண்டொரு வருஷம் போகட்டும், வருவாய் உயரட்டும், அப்பாவைக் கூட்டிக் கொண்டு வரலாம்' என்று முதலிலெல்லாம் கூறிக் கொண்டிருந்தவன் பதவி கிட்டியதும் அந்தப்

காந்தி வாக்கு

யார் சோஷலிஸ்ட் ?

சோஷலிஸம் என்பது அழகான வார்த்தை. எனக்குத் தெரிந்தமட்டில் சோஷலிஸத்தின் கீழ் எல்லாரும் சமம். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிறஏற்றத் தாழ்வு கிடையாது. மனிதனின் உடல் அமைப்பில் தலை உயர இருப்பதினால் அது உயர்ந்த தல்ல; பாதம் தரையில் இருப்பதால் அது தாழ்ந்தது மல்ல. உடல் அமைப்பில் எப்படிஎல்லா அங்கங்களும் சமமோ, அதேமாதிரி சமூகத்தில் எல்லாப் பகுதியினரும் ஒரே நிறை. இதுதான் சோஷலிஸம்.

பேச்சை எடுத்தாலே எரிந்து விழலானான். ஏழு வருஷங்கள் கழித்துக் கோமதிநாதனுக்கு அவனுடைய கம்பெனியின் சென்னைக் கிளைக்கு மாற்றலாயிற்று. சென்னைக்கு வந்து சேர்ந்த அவன் குடும்பத்தோடு ஒரு தரம் ஏலத்தூருக்குப் போய்த் தகப்பனாரைப் பார்த்துவிட்டுச் சென்னை திரும்பினான். ஆனால் 'அப்பாவை வந்துவிடு' என்று சொல்லவில்லை!

இத்தனை வருஷங்களாக அவன், தன் கூட வந்து இருக்கும்படி அவரை அழைக்காததைப் பற்றி அசுயம் அவ்வளவாகப் பாராட்ட வில்லை. ஆனால் அவர் உடல் வயோதிகம் காரணமாகத் தளர்ந்துவிட்டதால் சமைத்துச் சாப்பிட அவருக்கு மிகவும் சிரமமாயிருந்தது. மற்றச் சிறு வேலைகளையும் கவனிக்க இயல வில்லை அவரால். எனவே மகனுடன் போய்க் கொஞ்ச நாட்கள் நிம்மதியாயிருந்து விட்டு உயிரை விட மாட்டோமா என்று ஏங்க ஆரம்பித்தார். இந்தச் சமயத்தில்தான் சுப்புணி வந்து கோமதிநாதனைத் தாம் சென்னையில் சந்தித்தது பற்றி அவரிடம் கூறினார். அசுயம் உற்சாகமடைந்தார். பிள்ளைக்குக் கடிதம் எழுதினார்.

அவனிடமிருந்து வந்த பதில் அவரைத் தூக்கி வாரிப் போட்டது. அவனுடைய மனோ நிலையைத் தெளிவாகப் புரிந்து கொண்டு விட்ட அவர் ஆற்றொணாத் துயரம் அடைந்தார். 'பகவானே! அவன் எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும்! அவன் ஒரு குறைவுமில்லாமல் க்ஷேமமாக இருக்க அருள் புரியவேண்டும்!" என்று எண்ண மிட்டார். பெற்ற மனத்தின் ஒப்பற்ற பெருமை அது!

* * *

எட்டு மாதங்கள் ஓடி விட்டன. பம்பாயிலிருந்த கோமதிநாதனுடைய நண்பர் ஒருவர் தம் பெண்ணுக்கு வரன் பார்த்துக் கொண்டிருந்தார். சென்னையில் அரசாங்கக் காரியதரிசியாக இருந்த வேதகிரி என்பவருக்கு விவாகமாக வேண்டிய பிராயத்தில் ஒரு பிள்ளை இருக்கிறான் என்று கேள்விப்பட்ட அவர் தம் மகள் ஜாதகத்தை வேதகிரியிடம் கொடுத்து விட்டு அவருடைய பையன் ஜாதகத்தை வாங்கி யனுப்பும்படி கோமதி நாதனிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவருடைய கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, கோமதிநாதன் ஒருநாள் மாலையில் வேதகிரியின் வீட்டைத் தேடிச்சென்றான்.

உயர்தர அந்தஸ்தில் இருந்தாலும் மிகவும் எளிய சுபாவமுள்ள வேதகிரி கோமதிநாதனைப் பரிவுடன் வரவேற்று அன்புடன்—வெகு நாள் பழகியவரைப் போல்—சகஜமாக உரையாடினார். ஜாதகத்தின் நகலைத் தயாரித்து வைப்பதாகவும், மறுநாள் வந்து வாங்கிக் கொள்ளும்படியும் சொன்னார்.

மறுநாள் காலை ஏழு மணிக்கு வேதகிரியின் வீட்டை அடைந்தான் கோமதிநாதன். உள்ளே கிழவரின் காலில் விழுந்து வேதகிரி வணங்குவதைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்து நின்றான் கோமதிநாதன்.

பெரியவரை நமஸ்கரித்து விட்டு எழுந்த வேதகிரி அவனைக் கண்ணுற்றதும், "வாருங்கள், கோமதிநாதன்! இவர் என்னுடைய தகப்பனார். நான் இன்று இந்த அந்தஸ்தில் இருப்பதற்கு இவர்தான் காரணம். என்னைப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டுவர என்னபாடு பட்டிருப்பார் என்கிறீர்கள்? பரம ஏழையாயிருந்த இவர் தெருவில் கண்டல், வடை விற்று என்னை ஆளாக்கினார், ஸார்! பெரிய மனிதர்கள் வீட்டுக்குத் தினந்தோறும் குடத்தில் காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து வீட்டுக்கு ஒரு ரூபாய்க் கூலி பெற்று என்னை முன்னுக்குக் கொண்டுவந்தார் ஸார்!" என்று உணர்ச்சியால் கம்மிய குரலில் கூறினார்.

அந்தப் பெரியவர் "போதுமடா! ஒரேயடியாக என்னைப் புகழாதே! நரஸ்துதி செய்வதைவிட ஆண்டவனைத் துதித்தாலும் புண்ணியமுண்டு!" என்றார்.

"என்னுடைய கடவுள் நீங்கள் தான், அப்பா!" என்றார் வேதகிரி.


கோமதிநாதன் பிரமித்து நின்றான்! வந்த காரியத்தை முடித்துவிட்டு வீடு திரும்புகையில் அவன் மனத்தில் ஒரே கொந்தளிப்பு! 'இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் வேதகிரி தாம் ஏழையாயிருந்து முன்னுக்கு வந்ததையும், தம் தகப்பனார் கண்டல் விற்றதையும், கூலிக்குத் தண்ணீர் சுமந்ததையும் மறைக்கவில்லை! பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார்! தம்மை ஆளாக்கிய தெய்வமாகிய தந்தையை, தினந்தோறும் வணங்கி ஆசி பெறுகிறார்! நானூறு ரூபாய் சம்பளம் பெறும் கண்டைக்காய் அந்தஸ்துள்ள நான் என் தந்தை சமையற்காரர் என்பது தெரிந்து விட்டால் மகா அகௌரவம் என்று கருதுகிறேன்! எத்தகைய நன்றியற்ற பதர் நான்!'

அன்றே லீவு எடுத்துக் கொண்டு ஊருக்குப் போய் அப்பாவை அழைத்துக் கொண்டு வந்து விடவேண்டும் என்ற தீர்மானத்துடன் வீட்டை அடைந்த அவன் பின்னாலேயே தந்திச் சேவகன் ஒருவன் வந்து தந்தியொன்றைக் கொடுத்து விட்டுப் போனான்.

'உன் தந்தை நேற்றிரவு காலமாகி விட்டார். உடனே கிளம்பி வா! — சுப்புணி' என்று தந்தியில் காணப்பட்டது.

'அப்பா, அப்பா! நான் கயவன், துரோகி! ஏழேழு ஜன்மத்துக்கும் நல்ல கதி கிடைக்காது!' என்று அலறினான் கோமதிநாதன்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam



விம் உங்கள் வீட்டிற்கு அவசியம்
—சீக்கிரமாக, பிரகாசமாக சுத்தம் செய்ய
பிசுக்கு அழுக்கையும், என்ணெய்ப் பசையையும் வெகு சீக்கிரமாக நீக்க, விஞ்ஞான முறையில் சுத்தம் செய்யும் விம்மை ஒரு ஈரத்துணியில் தூவி, தேய்த்து, அலம்பி, உலரவிட வேண்டியதுதான். என்ன பள பளப்பு பாருங்கள். சமையல் பாத்திரங்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், சாதாரண பீங்கான் சாமான்கள், கண்ணாடிப் பாத்திரங்கள், கைகள், பாத்திரங்கள் துலக்கும் பேஸின்கள், பளிங்குத் தரைகள் முதலியன சுத்தம் செய்ய விம் உபயோகியுங்கள். சிக்கனமானதா? சந்தேகமில்லாமல்! ஒரு துளி விம் வெகுவாக சுத்தம் செய்கிறது!
VIM
HOW TO USE VIM
for quick
தரை
கண்ணாடிச் சாமான்கள்
சமையல் பாத்திரங்கள்
விஞ்ஞான முறையில் சுத்தம் செய்யும் பவுடர் விம்

V. 86A-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon